DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

இவ்விடத்தில் விளம்பரம் செய்ய எம்மை அழையுங்கள் 416-752-1524

PYRAMID GROUP
வீடு வாங்க விற்க!
UTHAYAN SIVARAJAH BROKER 416.301.5555
உதயன் சிவராஜா
ROYAL LePAGE ignite

Dominion Lending Centres
✓FIRST MORTGAGE
✓SECOND MORTGAGE
✓REFINANCE
SUJAN SIVARAJAH 416.302.5555

29ம் ஆண்டில்...
29 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
# உதயன்
திக்கெட்டும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரம் இருமுறை இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
Raj Perampalam Broker
Direct: 416-897-9155
Office: 905-201-9977
என்னை அழையுங்கள்

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Family sponsorship
Super visa for parents and grandparents including health insurance
Citizenship
Permanent resident card renewal
Kokulan Baskaran Tax Consultant
Tel: 647-344-6600
info@allinoneserves.ca

Residential & Commercial Real Estate Services
Bala Logendralingam Realtor
Cell: 647-447-1562
RE/MAX COMMUNITY

உதயம் 1587 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday September 4, 2026

## "எங்கள் மண் நீண்ட வரலாற்றை கொண்டது, பல தியாகங்களைச் செய்தது, எனவே வடமராட்சி கிழக்கு பகுதிக்கு மசாஜ் நிலையம் தேவை இல்லை"

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு வெற்றிலைக்கேணி, ஆழியவளை உட்பட்ட 20 ஏக்கர் அரச காணியை மசாஜ் நிலையம் அமைப்பதற்காக இந்தியாவின் தனியார் நிறுவனத்திற்கு கொடுப்பதற்கு மக்கள் கடும் எதிர்ப்பு வெளியிட்டுள்ளனர் 28-8-2026 அன்று வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் ரஜீவன் எம்.பி தலைமையில் இடம் பெற்ற கலந்துரையாடலில் மசாஜ் நிலையம், தியான மண்டபம் அமைப்பதற்காக இந்திய தனியார் நிறுவனம் ஒன்றிற்கு வெற்றிலைக்கேணி, ஆழியவளை பகுதியை உள்ளடக்கிய 20 ஏக்கர் நிலப்பரப்பை குத்தகை அடிப்படையில் கொடுப்பதற்கு தீர்மானம் முன் வைக்கப்பட்டது. (தொடர்ச்சி 10ம் பக்கம்)




## தமிழர் பகுதிகளில் வன திணைக்கள் அலுவலர்கள் மக்களின் காணிகளை அபகரிக்கும் "திருட்டுக் கூட்டம்" என்கிறார் ரவிகரன் எம்.பி



வனவளத் திணைக்களம் என்பது மக்களின் காணிகளை அத்துமீறி அபகரிக்கின்ற ஒரு "திருட்டுக் கூட்டம்" என வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் கடுமையாகச் சாடியுள்ளார்.

அத்தோடு வனவளத்திணைக்களத்தின் அத்துமீறிய அடாவடிச் செயற்பாடுகளுக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டுமென அபிவிருத்திக்குழுத்தலைவரும் பிரதி அமைச்சருமான உபாலி சமரசிங்கவிடம் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் வலியுறுத்தியுள்ளார்.

வவுனியா-செட்டிகுளம்பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் 03.09.2026அன்று இடம்பெற்றது. இக்கூட்டத்தில் வனவளத்தின் அபகரிப்பிலுள்ள காணிவிடுவிப்புத்தொடர்பில் பேசப்படும்போதே நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரனால் மேற்கண்டவாறு கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (தொடர்ச்சி 18ம் பக்கம்)

ஸ்காபுறோ நகரில் செப்டம்பர் 5ம் 6ம் திகதிகளில்
MEGA BLAST
(மேலதிக விபரங்களுக்கு 14ம் பக்கம் பார்க்கவும்)

COMMERCIAL REAL ESTATE
BUY · SELL · LEASE
Sri Nada rajasundram
Real Estate Broker
416-276-6666
RE/MAX ACE
Let's Talk Strategy.

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
கனேடிய அரசின் அங்கீகாரம் பெற்றவர்கள்
நம்பிக்கை நாணயத்திற்கு உத்தரவாதம்
குறைந்த வட்டியுடன் எவ்வளவு தொகை வேண்டும் என்றாலும் மிசிசாகாவிலும் பிராம்டனிலும் அமைந்துள்ள எமது அடவு மாளிகையை நாடுங்கள்.
வர்த்தக துறையில் 20 வருட முன்னோடிகள்
107 Dundas St. East (2nd Flr) Mississauga, ON, L5A 1W7 905-272-1222
23 -8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1 905-794-4404
online service: www.remitbee.com

G.Rajah
முள்ளிவாய்க்காலில் இருந்து...
NAM THAYAGAM
நம் தாயகம் INC
Nam Thayagam Inc.
3031, Markham Road, Unit #35, Scarbrough, ON M1X 1L9
namthyakam@gmail.com
416 558 2111

# Medcentre Health

Synchronizing Health Sectors

# Medcentre Family Clinic

## ACCEPTING NEW PATIENTS

# புதிய நோயாளர்கள்

## ஏற்றுக் கொள்ளப்படுகிறார்கள்

## Dr. விஜிதா முகுந்தன் MD, CCFP

கனடாவில் மருத்துவப்பயிற்சி பெற்று 7 ஆண்டு கனடாவில் குடும்ப மருத்துவராக பணியாற்றியவர்.

## அழையுங்கள் : 416-297-7777

எமது மருத்துவ நிலையம் தினமும் திறந்திருக்கும்

## எமது சேவைகள்

**Medcentre Family Clinic**
Comprehensive Care
Patient-Centred Care
For Children, Adults & Seniors
416-297-7777

**Medcentre Urgent Care**
Urgent Care Centre
Walk-In Clinic
Life Lab Collection Centre
416-297-7777

**Medcentre Pharmacy**
Same-day Home delivery
All Insurances Accepted
Pharmacist Consultation
416-609-3333

**Medcentre Women's Health Care**
Cancer Screening (Cervical & Breast)
Family Planning (Contraception)
Sexually Transmitted Infections (STI)
416-331-8888

2225 Markham Road, Ground Floor, Scarborough, ON M1B 2W4

## (Markham Rd. & Finch Ave.E)

medcentrehealth.com

உதயன் கதிரோட்டம்

# தேசத்தின் கடல் வளத்தையும் கனிம வளத்தையும் அனுபவிக்கும் வாய்ப்பு இலங்கை வாழ் செல்வந்தர்களுக்கும் "அரசியல்" செல்வாக்கு உள்ளவர்களுக்கும் மாத்திரம் தானா?

ஒரு தேசத்தில் இயற்கையாகவோ அன்றி படைப்பாகவோ குவிந்து கிடக்கும் கடல் வளம் மற்றும் கனிம வளம் ஆகியவை அந்தந்த தேசத்தின் அரசுக்கும் மக்களுக்குமே சொந்தமானவை. ஆனால் இவை பற்றி எதுவும் அக்கறை கொள்ளாத பொதுமக்களில் பெரும்பகுதியினர் வாழ்க்கையில் கஸ்டங்களை அனுபவித்தாலும் இவ்வாறான கனிமக் கொள்ளை அல்லது கடல்வளத்தை சூறையாடுவது போன்ற சட்ட விரோத செயல்களில் ஈடுபடுவது இல்லை.
அதற்கு மேலாக, இயற்கையின் கொடையாகவும் அதன் படைப்பாகவும் விளங்கும் மீன்கள் மற்றும் கடல் உணவுப்பொருட்கள் ஆகிய கடல்வளம் மற்றும் தங்கம், வெள்ளி, உருக்கு, நிலக்கரி வேறு உலோகங்கள் தயாரிக்கக் கூடிய இன்னோரென்ன கனிமங்கள் உலகின் பல நாடுகளிலும் நிறைந்து கிடக்கின்றன.இவ்வாறு தான் கடல் வளமும். ஏழை மீனவர்கள் கடலுக்குச் சென்று தங்கள் உயிர்களை பணயம் வைத்து மீன்களை பிடித்து வர "எம்மூரின்" சம்மாட்டிகள் எனப்படும் "முதலாளிகள்" அவற்றின் அதிக இலாபத்தைப் பெற்றுக்கொண்டு செல்வந்தர்களாக உயர்ந்து சமூக அந்தஸ்த்தையும் பெற்றுக்கொள்கின்றார்கள்.

குறிப்பாக தென்னாபிரிக்கா. நைஜீரியா மற்றும் தென்அமெரிக்க நாடுகள் ஆபிரிக்க நாடுகள் போன்றவற்றில் தாராளமாக கனிம வளங்கள் நிறைந்து கிடக்கின்றன. ஆனால் இவை பற்றி அந்தந்த நாடுகளில் வாழும் சாதாரண மக்களோ அன்றி ஆர்வம் குறைந்தவர்களோ கவலைப்படுவதில்லை. இதனால் அந்தந்த நாடுகளில் உள்ள அரசியல்வாதிகளும் அரசாங்க அதிகாரிகளும் அமைச்சர்களும் கனிம வளங்கள் தொடர்பாகவோ அன்றி சட்டங்கள் தொடர்பாகவோ நன்கு அறிந்து வைத்திருப்பார்கள். குறிப்பாக ஆபிரிக்க நாடுகள் பல விலையுயர்ந்த கனிம வளங்களைக் தம்மகத்தே கொண்டிருந்தாலும் அவைபற்றிய வர்த்தக வாய்ப்புக்கள் பற்றிய ஆர்வம் கொண்டட பிறநாட்டு செல்வந்தர்கள் அல்லது பல்தேசிய நிறுவனங்கள் அந்த நாடுகளின் அரசியல்வாதிகளையும் அரசாங்க அதிகாரிகளையும் அமைச்சர்களையும் ஏதோ வகையில் தொடர்பு கொண்டு நெருக்கமான உறவுகளையும் கொடுக்கல் வாங்கல்களையும் செய்து அந்தந்த நாடுகளில் உள்ள கனிம வளங்களை அகழ்ந்து எடுக்கும் பாரிய திட்டங்களை தங்கள் கைகளுக்குள் எடுத்து அந்த நாட்டின் சாதாரண மக்களுக்கும் கிடைக்க வேண்டிய சலுகைகள் அல்லது பயன் ஆகியவற்றை மறைத்து பிறநாட்டவர்கள் அதன் அதிக பலன்களை அனுபவிக்கின்றார்கள். ஆனால் அந்தந்த நாடுகளின் அரசியல்வாதிகளும் அரசாங்க அதிகாரிகளும் அமைச்சர்களும் இதனால் கிடைக்கும் பெரும் நிதியைக் கொண்டு தங்களை செல்வந்தர்களாக உயர்த்திக் கொள்கின்றார்கள். இவ்வாறு ஒரு நாட்டில் நூறு பேர் இந்த மோசடிகளுக்கு பக்கத்துணையாக இருந்து சமூகத்தில் பணபலம் உள்ளவர்களாக உயரத்தை எட்டுகின்றார்கள். ஆனால் அந்த நாட்டின் ஏழை அல்லது நடுத்தர வகுப்பு மக்கள் தொடர்ந்து ஏழைகளாகவே வாழ்ந்து கொண்டிருப்பார்கள்.
இவ்வாறு அந்தந்த நாடுகளில் உள்ள சாதாரண மக்கள் வாழ்க்கையின் அடிமட்டத்திலேயே எவ்வித வசதியும் இன்றி கஸ்டங்களை அனுபவிக்க, மறுபக்கத்தில் ஊழல் மற்றும் அதிகார துஸ்பிரயோகம் செய்யும் அரசியல்வாதிகளும் அரசாங்க அதிகாரிகளும் அமைச்சர்களும் மக்களை ஏமாற்றியவர்களாய் வாழ்க்கையை அனுபவிக்கின்றார்கள்.
இவ்வாறாகவே இலங்கையிலும் இந்தியாவிலும் ஏனைய ஆசிய நாடுகளிலும் ஊழல் மற்றும் அதிகார துஸ்பிரயோகம் செய்து தங்கள் அரசியல் பலத்தையும் அதிகார பலத்தையும் பயன்படுத்தி அரசியல்வாதிகளும் அரசாங்க அதிகாரிகளும் அமைச்சர்களும் மக்களை ஏமாற்றியவர்களாய் வாழ்க்கையை அனுபவிக்கின்றார்கள்.

இதன் காரணமாகவே இம் மாதத்தின் எமது தேசக்குரலில் நாம் இந்த மறைந்து கிடக்கும் கிடக்கும் சட்ட விரோத செயல்களையும் ஊழல் விடயங்களையும் பற்றி எமது வாசகர்களோடு பகிர்ந்து கொள்கின்றோம். இதனாலேயே வடக்கினதும் கிழக்கினதும் கடல் வளத்தையும் கனிம வளத்தையும் அனுபவிக்கும் வாய்ப்பு இலங்கை வாழ் செல்வந்தர்களுக்கும் செல்வாக்கு உள்ளவர்களுக்கும் மாத்திரம் தானா? என்ற கேள்வியை முன்வைக்கின்றோம்.
நாம் அறிந்த வகையில் இலங்கையிலும் கனிமக் கொள்கை மற்றும் சுரங்க அகழ்வு உரிமங்கள் தொடர்பாக கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி தொடர்பான சட்ட திட்டங்கள் பல ஆண்டுகளாக நடைமுறையில் உள்ள.
முன்னைய மகிந்தாவின் ஆட்சிக் காலத்திலும் பின்னர் கோட்டாபாய ஆட்சியின் காலத்திலும் மற்றுமொரு ஊழல்வாதி நாமல் ராஜபக்ச வெளிநாட்டு பல்தேசியக் கம்பனிகளை இலங்கைக்கு அழைத்து அதிகளவு நிதியை அவர்களிடமிருந்து பெற்று கோடிக்கணக்கான டாலர்களை சுருட்டிக் கொண்டார் என்பதும் தற்பொழுது வெளிவந்து கொண்டிருக்கும் செய்திகள்.

இலங்கையில் கனிம ஆய்வு மற்றும் சுரங்க அகழ்வு நடவடிக்கைகள், குறிப்பாக புதுப்பிக்க முடியாத கனிம வளங்களை அகழ்ந்தெடுப்பதன் மூலம் ஏற்படும் மீட்டெடுக்க முடியாத சுற்றுச்சூழல் பாதிப்புகள் குறித்து மக்கள் மத்தியில் அதிகரித்து வரும் அச்சம் மற்றும் எதிர்ப்புகளை சுட்டிக்காட்டிவரும் பல சமூக ஆர்வலர்களும் அமைப்புக்களும் உள்ள நிலையில் அவர்களை தங்கள் அதிகார பலத்தைப் பாவித்து அடக்கியும் சிறையில் அடைத்தும் அல்லது கொலைப் பயமுறுத்தல் செய்தும் ஊழல்வாதிகள் தங்கள் "திருட்டுக்களை" தொடர்ந்து வருகின்றார்கள்.
சுரங்க அகழ்வு நடவடிக்கைகள் நிறுத்தப்பட்ட நீண்ட காலத்திற்குப் பின்னரும் நிலச்சரிவுகள், விவசாய உற்பத்தித் திறன் இழப்பு, நீர் வளங்கள் வற்றிப்போதல், சுற்றுச்சூழல் அமைப்புகளின் அழிவு மற்றும் பல்வேறு சூழலியல் பாதிப்புகள் போன்ற நீண்டகால விளைவுகளை பாதிக்கப்பட்ட சமூகங்களே சுமக்க வேண்டியு நிலை சாதாரண மக்களுக்கே ஏற்படுகின்றன. பாதுகாப்பான இடங்களில் தங்கள் மாளிகைகளைக் கட்டி வாழும் அரசியல்வாதிகளும் அரசாங்க அதிகாரிகளும் அமைச்சர்களும் இயற்கை அனர்த்தங்களால் ஒருபோதும் பாதிக்கப்படுவதில்லை.இந்தியாவில் சென்னை போன்ற நகரங்கள் இதற்கு நல்ல உதாரணமாகும். எந்த ஒரு அரசியல்வாதியும் வெள்ளப்பெருக்கால் சிரமங்களை சந்திப்பதில்லை. ஆனால் மக்களைச் சந்திக்க விலை உயர்ந்த வாகனங்களில் அல்லது வானூர்திகளில் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு வருவார்கள்.
அண்மையில் இலங்கைப் பாராளுமன்றத்தில் இந்த கனிம வளக்கொள்ளைகளை தடுக்கும் கனிமக் கொள்கை தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் நீண்ட உரையாற்றியுள்ளார். அத்துடன் அவர்கள் இந்த விடயம் தொடர்பான அமைச்சரிடம் பல கேள்விகளையும் தொடத்துள்ளார்.
இனிவரும் நாட்களில் நாமும் இந்த விடயம் தொடர்பான விடயங்களில் ஆர்வத்துடன் எமது அவதானிப்பை செலுத்த வேண்டும் என்றும் தேசத்தின் சொத்தை தனி நபர்களும் அரசியல்வாதிகளும் அதிகாரிகளும் "சூறையாடுவதை" தடுக்க போராட வேண்டும் என்றும் அனைவரையும் வேண்டிக் கொள்கின்றோம்.!

Canada
We acknowledge the financial support of the Government of Canada

Single Copy $1 | Annual Subscription Price $52.00

பிரதம ஆசிரியர்: R.N.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் | Uthayan Publishers

- EDITOR IN CHIEF: R. N. Logendralingam
- GRAPHIC: Pathma & Yalini
- TECHNICAL: Janani and Bala
- PRINTERS: KT Web Printing Ltd.
- DISTRIBUTION: Uthayan Team

Phone: 416 752 1524 · Cell: 416 732 1608
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca · email: Uthayannews@yahoo.com

TRADITIONAL CHINESE ACUPUNCTURE THERAPY

எல்லாவிமான வலிகளுக்கும்
ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை
மனத்தளர்ச்சி, தலைவலி
நீரிழிவு நோய், வயிற்றுவலி
மாதவிடதய் சம்மந்தமானவையும்
உடற்பருமன் குறைத்தல்

All Pain & Aches, Arthritis
Asthma, Sinusitis, Rhinitis Allergies
Stress, Migraine & All Types of Headaches
Diabetes, Gastric Pain, Ulcer
Menstruation
Weight Loss

முதலான சகலவிதமான நோய்களுக்கும்
Mrs. K. Vasanthakumar ஐ
Acupuncturist (R.A.C)
தொடர்புகொள்ளவும்.
(416) 754-4024
5200 Finch Ave., East -- Suit #349
Scarborough, ON M1S 4Z5

Room for Rent

McCowan & 401 அருகில், Luxury 2 Bed, 2 Bath Condo ல் ஒரு தனி அறை with separate bathroom, Aug 1, 2026 முதல் வாடகைக்கு உள்ளது. Share the kitchen & living area with a Tamil senior male. Gym, Swimming pools, Tennis, BBQ area, and more. Preference given to single Tamil male. Contact. 647 273 2053

வேலை வாய்ப்பு

தொழிற்சாலை ஒன்றில் வேலை செய்வதற்கு பெண்கள் தேவை. தொடர்புகளுக்கு: 647-669-2739

Line Cook wanted for an Italian Restaurant

Toronto நகரில் Church வீதி / Wellesley வீதி சந்திப்புக்கு அருகில் உள்ள இத்தாலிய உணவகம் ஒன்றிக்கும் உடனடியாக Line Cook ஒருவர் தேவை. தொடர்புகளுக்கு Kumar 416 409 9450 என்னும் இலக்கத்தை அழைக்கவும்

உலக செய்திகள்
World News

# நேபாள பெருவெள்ளத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 1,252-ஆக அதிகரிப்பு!



நேபாள பெருவெள்ளத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 1,252-ஆக அதிகரித்துள்ளது. நேபாளத்தின் போடேகோஷி நதியில் கடந்த 26-ந்தேதி ஏற்பட்ட கடும் வெள்ளப்பெருக்கால், நாட்டின் வடக்கு மற்றும் மத்திய பகுதிகள் முற்றிலும் நாசமாகி விட்டன. இமயமலையில் இருந்து அடித்து வரப்பட்ட பாறைகள், சேறு, சகதி அனைத்தும் சுமார் 8 மாவட்டங்களை நிறைத்து இருக்கின்றன. கிராமங்கள் மற்றும் நகரங்கள் என ஆற்றின் போக்கில் இருந்த பகுதிகள் அனைத்தும் சேறு சகதியால் நிறைந்து காணப்படுகின்றன. வரலாறு காணாத இந்த பேரிடரில் சிக்கிய ஆயிரக்கணக்கானோர் வெள்ளத்தில் அடித்துச்செல்லப்பட்டு காணாமல் போயுள்ளனர். அவர்களை தேடும் பணிகள் இன்று 9-வது நாளாக நீடிக்கிறது.

நேபாளம் மற்றும் இந்தியா உள்ளிட்ட சர்வதேச நாடுகளின் துணையுடன் நடந்து வரும் இந்த மீட்புப்பணிகளின்போது அடுத்தடுத்து உயிரிழந்தோரின் உடல்கள் சிக்கி வருகின்றன. இதில் தற்போது வரை 1,252 பேரின் உடல்கள் மீட்கப்பட்டு உள்ளன. பாதிக்கப்பட்ட இடங்களில் தோண்ட தோண்ட உடல்கள் சிக்கி வருவதால் பெரும் அதிர்ச்சி நிலவி வருகிறது. மீட்கப்பட்ட உடல்கள் பெரும்பாலும் உருக்குலைந்து காணப்படுவதால், அவற்றை அடையாளம் காண்பதில் சிக்கல் ஏற்பட்டு உள்ளது. எனவே அவற்றுக்கு மரபணு சோதனை நடத்தி மொத்தமாக புதைக்கப்பட்டு வருகின்றன. அதேநேரம் இந்த உடல்களை உறவினர்கள் அடையாளம் காண்பதற்கு வசதியாக அவற்றின் புகைப்படங்களை நேபாள காவல்துறையின் இணையதளத்தில் பதிவேற்றி வருகின்றனர். இவ்வாறு 911 பேரின் புகைப்படங்கள் பதிவேற்றி இருப்பதாக அதிகாரிகள் தெரிவித்தனர். இதுவரை கைப்பற்றப்பட்ட உடல்களில் வெறும் 95 உடல்கள் மட்டுமே அடையாளம் காணப்பட்டு உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டு உள்ளன. பாதிக்கப்பட்ட இடங்களில் சிக்கியிருந்த 6,500-க்கு அதிகமானோர் இதுவரை மீட்கப்பட்டு உள்ளனர்.

அதேநேரம் வெள்ளத்தில் மாயமானவர்களில் இன்னும் 4,875 பேரின் கதி என்ன? என்பது தெரியவில்லை. இதில் உள்ளூர் மக்கள் மட்டுமின்றி, இந்தியா உள்ளிட்ட பல்வேறு வெளிநாடுகளை சேர்ந்த சுற்றுலா பயணிகளும் அடங்குவர். எனவே அவர்களை தேடும் பணிகள் முழுவீச்சில் நடந்து வருகின்றன. இந்தப் பணிகளில் காவல்துறை, ராணுவ வீரர்கள் என சுமார் 8 ஆயிரம் பேர் ஈடுபட்டு உள்ளனர். இவர்கள் மாயமானவர்களை தேடுவதுடன், சேதமடைந்த சாலைகளை சீரமைத்து போக்குவரத்தை ஒழுங்குபடுத்துதல், அபாயகரமான இடங்களில் வசிக்கும் மக்களை பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப்படுத்துதல், மீட்பு மற்றும் நிவாரணப்பணிகளிலும் ஈடுபட்டு உள்ளனர்.

இதற்கிடையே நேபாளத்தில் தொடர்ந்து பெய்து வரும் மழை காரணமாக பேரிடர் பாதித்த ரசுவா, நுவாகோட் மாவட்டங்களில் மீட்புப்பணிகள் கடுமையாக பாதிக்கப்பட்டு உள்ளன. மேலும் நேற்று இரவு பெய்த மழை காரணமாக நீர்மின் நிலைய சுரங்கங்கள் நீர் நிரம்பி காணப்படுகின்றன. இந்த கடினமான சூழலால் அவற்றில் சிக்கியிருக்கும் சுமார் 600 பேரை மீட்கும் பணிகளில் சிக்கல் நீடிக்கிறது. நேபாள ராணுவம், காவல்துறை மற்றும் வெளிநாட்டு தொழில்நுட்ப நிபுணர்கள் இரவு பகலாக நடத்தி வரும் தேடுதல் வேட்டை இதுவரை எந்த பலனையும் அளிக்கவில்லை. அங்கே சிக்கியிருப்பவர்கள் பற்றிய எந்த துப்பும் இதுவரை கிடைக்கவில்லை.

மேலும் மீட்புப்பணிகளுக்கான நவீன தளவாடங்களை சுரங்கப்பகுதிகளுக்கு எடுத்துச்செல்ல முடியவில்லை. அத்துடன், சுரங்கங்களின் வாயில் பகுதியை கண்டறிவதிலும் சிக்கல் நீடிக்கிறது. இதனால் சுரங்க மீட்புப்பணிகள் பெரும் மந்தமாகவே நடப்பதாக அதிகாரிகள் தெரிவித்தனர். பேரிடரில் சிக்கியவர்கள் தொடர்ந்து பிணமாக மீட்கப்படுவதும், மாயமான ஆயிரக்கணக்கானோரை பற்றிய தகவல்கள் இன்னும் கிடைக்காமல் இருப்பதும் நேபாளம் மட்டுமின்றி இந்தியா உள்ளிட்ட நாடுகளையும் கவலைக்குள்ளாக்கி இருக்கிறது.

# ஈரான் மீது அமெரிக்கா நடத்திய தாக்குதலில் 19 பேர் உயிரிழந்த கொடுமை!

ஈரான் மீது அமெரிக்கா நடத்திய தாக்குதலில் 19 பேர் உயிரிழந்தனர். ஈரான் மீது அமெரிக்கா, இஸ்ரேல் இணைந்து கடந்த பிப்ரவரி 28ம் தேதி தாக்குதல் நடத்தின. இந்த தாக்குதலை தொடர்ந்து இஸ்ரேல், அரபு நாடுகள் மீது ஈரான் தாக்குதல் நடத்தியது. மத்திய கிழக்கில் உள்ள அமெரிக்க படைத்தளங்கள் மீதும் ஈரான் தாக்குதல் நடத்தியது.

மேலும், ஹர்முஸ் ஜலசந்தியை ஈரான் மூடியது. இதனால், கப்பல் போக்குவரத்து பாதிக்கப்பட்டு சர்வதேச அளவில் கச்சா எண்ணெய் விலை உயர்ந்தது. இதையடுத்து, இரு தரப்பு பேச்சுவார்த்தையில் உடன்பாடு எட்டப்பட்டது. இதன் காரணமாக கடந்த சில நாட்களாக மத்திய கிழக்கில் சற்று அமைதியான சூழ்நிலை நிலவி வந்தது. ஆனால், ஈரான் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தியது.

ஹர்முஸ் ஜலசந்தியில் ஈரான் கண்ணிவெடிகளை பதிக்க முயன்றதாகவும், அதை தடுக்கும் வகையில் ஹர்முஸ் ஜலசந்தி அருகே உள்ள ஈரானின் லாரக் தீவில் உள்ள ஏவுகணை ஏவு தளங்கள் மீது தாக்குதல் நடத்தபப்பட்டதாகவும் அமெரிக்கா தெரிவித்தது. அமெரிக்காவின் தாக்குதலுக்கு பதிலடியாக ஜோர்டான் மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் மீது ஈரான் தாக்குதல் நடத்தியுள்ளது.

ஜோர்டான் நாட்டில் உள்ள அமெரிக்க படைத்தளங்களை குறிவைத்து ஈரான் தாக்குதல் நடத்தியது. அதேபோல், ஐக்கிய அரபு அமீரகம் மீதும் ஈரான் டிரோன் தாக்குதல் நடத்தியது. இந்த தாக்குதல்கள் இரு நாட்டு வான் பாதுகாப்பு அமைப்பாலும் நடு வானில் சுட்டு வீழ்த்தப்பட்டுள்ளன.



அதேவேளை, இந்த மோதலை தொடர்ந்து ஈரான் மீது அமெரிக்கா இரவு மீண்டும் தாக்குதல் நடத்தியது. ஈரானின் குஜெஸ்தான், ஹர்முஸ்கன், மாகாணங்களில் உள்ள பண்டர் அப்பாஸ், குவாசம் தீவு, சிரிக், குகிஷ்டக், ஜஸ்க், சாம்பஹார், கோனரக், அஹ்வாஸ், அஹஜரி ஆகிய நகரங்கள் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தியது.

ஈரானின் ஏவுகணை தளம், ஆயுதக்கிடங்குகள், ராணுவ தளங்களை குறிவைத்து தாக்குதல் நடத்தியதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது. இந்நிலையில், அமெரிக்கா நடத்திய தாக்குதலில் 19 பேர் உயிரிழந்துள்ளதாக ஈரான் தெரிவித்துள்ளது. இந்த தாக்குதலில் பாதுகாப்புப்படையினர், பொதுமக்கள் என 19 பேர் உயிரிழந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.




# முல்லைத்தீவில் சிறார்களின் பாதுகாப்பையும், உரிமைகளையும் வலியுறுத்தி பேரணி மற்றும் சிறுவர் பாதுகாப்பு மாநாடு ஆகியன சிறப்பாக நடைபெற்றன!

இலங்கை செய்திகள்
Sri Lanka News



- ந.லோகதநாளன்

முல்லைத்தீவில் சிறுவர் பாதுகாப்பு வாரத்தினை முன்னிட்டு, சிறுவர்களின் பாதுகாப்பினையும், சிறுவர்களின் உரிமைகளையும் உறுதிப்படுத்துமாறு வலியுறுத்தி பேரணியொன்று முன்னெடுக்கப் பட்டதுடன், “எதிர்கால தலைவர்களைக் கட்டி எழுப்புவோம்” என்னும் தொனிப்பொருளில் 2026ஆம் ஆண்டிற்கான சிறுவர் பாதுகாப்பு மாநாடு ஒன்றும் 27.08.2026 இன்று முன்னெடுக்கப்பட்டது.

குறிப்பாக முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள மதுரம், விக்றி ஜெனரேஷன், ஷாறிபாத், ஹார்மெல், ப்லோமிங் ஆகிய சிறுவர் அபிவிருத்தி நிலையங்களின் ஏற்பாட்டில் இந்த பேரணியும், மாநாடும் முன்னெடுக்கப்பட்டது.

அந்தவகையில் சிறுவர்களின் பாதுகாப்பையும், உரிமைகளையும் உறுதிப்படுத்துமாறு வலியுறுத்தி இடம்பெற்ற குறித்த பேரணியானது முல்லைத்தீவு பேருந்துநிலைய வளாகத்திலிருந்து ஆரம்பிக்கப்பட்டு முல்லைத்தீவு பொலிஸ்நிலையம்வரை இடம்பெற்றது.

அதற்கமைய சிறார்களின் பாதுகாப்பையும், உரிமைகளையும் உறுதிப்படுத்துமாறு வலியுறுத்தும் வகையிலான வாசகங்கள் அடங்கிய பதாதைகள் காட்சிப்படுத்தப்பட்டும், கோசங்கள் எழுப்பப்பட்டும் பேரணி முன்னைடுக்கப்பட்டது.

அத்தோடு பேரணியின் நிறைவில் சிறுவர்களின் பாதுகாப்பையும், உரிமைகளையும் உறுதிப்படுத்துமாறு வலியுறுத்தி முல்லைத்தீவு பொலிஸ்நிலைய பொறுப்பதிகாரியிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

இதனைத்தொடர்ந்து முல்லைத்தீவு நகரில் அமைந்துள்ள கரைதுறைப் பற்று பிரதேசசபை மண்டபத்தில் “எதிர்கால தலைவர்களைக் கட்டி எழுப்புவோம்” என்னும் தொனிப்பொருளில் 2026ஆம் ஆண்டிற்கான சிறுவர் பாதுகாப்பு மாநாடு ஒன்றும் முன்னெடுக்கப்பட்டது.

குறித்த பேரணி மற்றும் மாநாட்டில் வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப் பினர் துரைராசா ரவிகரன், மற்றும் சிறுவர் அபிவிருத்தி நிலையங்களின் பிரதிநிகள், சிறார்களின் பாதுகாப்பிற்கு பொறுப்பான பொலிஸ் அதிகாரி, சிறார்கள், பெருந்திரளான பொதுமக்கள் என பலரும் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் புடைசூழ தேரேறி அருள்பாலித்த தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன்



பிரதம குரு சிவஸ்ரீ பாலேந்திரா ஐயா தலைமையில் விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்றதைத் தொடர்ந்து, கடந்த 13ஆம் திகதி அதிகாலை 12.20 மணியளவில் பக்தர்கள் புடைசூழ கொடியேற்றம் நடைபெற்றது.



அதனைத் தொடர்ந்து இடம்பெற்ற திருவிழாக்களின் உச்சமாக, 27ம் திகதி அன்று காலை 8.30 மணிக்கு விசேட பூஜை வழிபாடுகள் நடைபெற்றன. பின்னர், சந்நிதி வேலவன் காலை 9.40 மணியளவில் தேரில் எழுந்தருளி, ஆலய வீதியுலா வந்து பல்லாயிரக்கணக்கான பக்தர்களுக்கு அருள் பாலித்தார்.

இந்த இரதோற்சவத்தில் இலங்கையின் பல பகுதிகளிலுமிருந்தும் புலம்பெயர்ந்த நாடுகளிலிருந்தும் வருகை தந்திருந்த பெருமளவான பக்தர்கள் கலந்துகொண்டு, அரோகரா முழக்கத்துடன் முருகப்பெருமானை வழிபட்டு அருள் பெற்றனர்.

தேர்த்திருவிழாவைத் தொடர்ந்து, நாளை நடைபெறவுள்ள கடல் தீர்த்தோற்சவத்துடன் இந்த ஆண்டுக்கான வருடாந்த மகோற்சவம் நிறைவுபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



இலங்கை செய்திகள்
Sri Lanka News

# காணாமல் ஆக்கப்பட்டோருக்கான நீதியை வலியுறுத்தி யாழில் உணர்வெழுச்சியுடன் நடைபெற்ற "நீதிக்கான நீள் பயணம்" சர்வதேச மாநாடு

- ந.லோகதநாளன்



சர்வதேச வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தினத்தை முன்னிட்டு, வடக்கு - கிழக்கு இணைந்த வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் ஏற்பாட்டில் "நீதிக்கான நீள் பயணம்" எனும் மாபெரும் சர்வதேச மாநாடு யாழ்ப்பாணத்தில் 30-08-2026 அன்று ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் தந்தை செல்வா கலையரங்கில் உணர்வெழுச்சியுடன் நடைபெற்றது.

மாநாட்டுக்கு முன்னதாக, உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலை நினைவுத் தூபியில் அஞ்சலி நிகழ்வு நடத்தப்பட்டது.





அதனைத் தொடர்ந்து அங்கிருந்து பேரணியாகத் தந்தை செல்வா கலையரங்கைச் சென்றடைந்த பின்னரே மாநாடு ஆரம்பமானது.

வடக்கு-கிழக்கைச் சேர்ந்த வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள், சர்வதேச இராஜதந்திரிகள், அரசியல் பிரதிநிதிகள், மதத்தலைவர்கள், சிவில் சமூகச் செயற்பாட்டாளர்கள் மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள் எனப் பெருந்திரளானோர் இந்த மாநாட்டில் கலந்துகொண்டு தமது ஒருமைப்பாட்டை வெளிப்படுத்தினர்.

# யாழ்ப்பாணத்திலும் தமிழ்நாட்டிலும் வெளியிடப்பெற்று பின்னர் கொழும்பிலும் அறிமுகம் செய்யப்பெற்ற பொ. ஐங்கரநேசனின் "வேர்முகங்கள்" எனும் அரிய நூல்

ஏற்கெனவே யாழ்ப்பாணத்திலும் தமிழ்நாட்டிலும் வெளியிடப்பெற்று பின்னர் ஆயிரக்கணக்கான வாசகர்கிளன் கரங்களிற்குச் சென்றுள்ள பொ. ஐங்கரநேசனின் "வேர்முகங்கள்" எனும் அரிய நூல் கலை இலக்கியப் பேராளுமைகளுடன் இதன் அறிமுக விழா கடந்த வியாழக்கிழமை (27.08.2026) கொழும்பு தமிழ்ச்சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் மிகச்சிறப்பாக நடைபெற்றது.

ஊடகங்களுக்காக பொ. ஐங்கரநேசன் மேற்கொண்ட நேர்காணல்களின் தொகுப்பு "வேர்முகங்கள்" என்ற பெயரில் எங்கடபுத்தகங்கள் பதிப்பகத்தின் ஊடாக வெளியாகியுள்ளது. புகழ்மிக்க இருபது கலைஇலக்கிய ஆளுமைகளின் நேர்காணல்கள் அடங்கிய இந்த நூலின் அறிமுகவிழா சமூக ஆய்வாளர் தெ.மதுசூதனன் தலைமையில் நடைபெற்றது இவ்வறிமுக விழாவில் கருத்துரைகளைச் சட்டத்தரணி சுகந்தி இராஜகுலேந்திரா, மொழிபெயர்ப்பாளர் அம்பிகை டிவகலாலா போமன் ஆகியோர் நிகழ்த்தியிருந்தார்கள்.





சட்டத்தரணி ந. காண்டீபன் அறிமுக உரையை நிகழ்த்தியிருந்தார். சொல்லேர் உழவர் கவிஞர் புதுவை இரத்தினதுரை அவர்களுக்குச் சமர்ப்பணம் செய்யப்பட்டிருந்த இந்நூலின் முதற்பிரதியை ஊடகவியலாளர் வி. தனபாலசிங்கம் வழங்கிவைக்க மூத்த எழுத்தாளுமை அன்னலட்சுமி இராஜதுரை பெற்றுக்கொண்டார்.



தமிழ்த்தாய் வாழ்த்தை செல்வன் ம. தர்மயா இசைக்க, புகழ்பெற்ற கணித ஆசிரியரும் பொ. ஐங்கரநேசனின் பள்ளிக்கால தோழரும் பல்துறைக் கலைஞருமான கலாபூஷணம் வி.ரி. ராஜேந்திரா வரவேற்புரை ஆற்றியிருந்தார். அரங்கு நிறைந்த இலக்கிய ஆர்வலர்கள் பங்கேற்ற இவ்விழாவின் இறுதியில் நூலாசிரியரும், தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவருமான பொ.ஐங்கரநேசன் ஏற்புரையாற்றினார்.

எழுத்தாளரும் தமிழ்ச் தேசியி அரசியல் செயற்பாட்டாளரும் கல்வியாளருமான பொ. ஐங்கரநேசன் அவர்கள் தற்போதை எமது தமிழர் தாயகப் பரப்பில் அதிகளவு ஏமாற்றுப் பேர்வழிகள் அரசியல் தலைவர்கள் என்ற போலி முகங்களோடு பவனி வந்நதவண்ணம் மீண்டும் மக்களை ஏமாற்றத் தயாராகி வரும் காலத்தில் 24 மணி நேரமும் இயங்கும் "மக்கள் செயற்பாட்டாளர்" என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

# ஈரானியக் கப்பல்களின் வருகை தொடர்பில் இதுவரை உத்தியோகபூர்வ தகவல் இல்லை

## அமைச்சரவைப் பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ விளக்கம்

இலங்கையின் கடல் எல்லைக்குள் அனுமதியின்றி ஈரானியக் கப்பல்கள் நுழைந்துள்ளன என்று கூறப்படும் சம்பவங்கள் தொடர்பில் இதுவரை அரசுக்கு உத்தியோகபூர்வ அறிக்கைகள் எதுவும் கிடைக்கப்பெறவில்லை என்று அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள அரச தகவல் திணைக்களத்தில் 31ம் திகதி நடைபெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில், "இலங்கையின் பிரத்தியேக பொருளாதார மண்டலத்தை அண்மித்து ஈரானிய எண்ணெய் தாங்கிக் கப்பல்கள் நங்கூரமிட்டுள்ளன என்று செய்திகள் வெளியாகியிருந்த போதிலும், இக்கப்பல்கள் இலங்கைக் கடற்பரப்புக்குள் நுழைந்துள்ளமை குறித்து இதுவரை உத்தியோகபூர்வமாக எந்த அறிவிப்பும் வரவில்லை. இது குறித்து வெளிவிவகார அமைச்சிடம் விசாரித்து உண்மைத் தன்மை வெளியிடப்படும்.

இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தில் கடுமையான போர்ப் பதற்றங்கள் நிலவினாலும், இலங்கை எப்போதுமே தனது நடுநிலைமையான இராஜதந்திர நிலைப்பாட்டையே பேணி வருகின்றது. உலக நாடுகள் பிளவுபட்டு நிற்கும் வேளையிலும் எந்தவொரு பக்கமும் சாராமல், மனிதநேய அடிப்படையில் உயிர்களைப் பாதுகாக்கும் நோக்கில் மட்டுமே இலங்கை செயற்பட்டு வருகின்றது." - என்றார்.



இதனிடையே, இலங்கையின் பிரத்தியேக பொருளாதார மண்டலத்துக்கு அருகில் நங்கூரமிட்டுள்ளன என்று கூறப்படும் கப்பல்கள் குறித்து அரசு தீவிரமாகக் கண்காணித்து வருகின்றது என்று வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் துஷார ரொட்ரிகோ தெரிவித்துள்ளார். அத்துடன், இந்தக் கப்பல்கள் இலங்கையின் இறையாண்மை எல்லைக்கு வெளியே நிறுத்தப்பட்டுள்ளமையால் அவற்றுக்கு அரசு பொறுப்பேற்காது என்றும், அந்தக் கப்பல்களுக்கு எவ்வித வசதிகளோ சேவைகளோ வழங்கப்படவில்லை என்றும் அவர் தெளிவுபடுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அநுர அரசாங்கத்தின் நீதி அமைச்சர் ஹர்ஷன மஹர சிறைக்கு விஜயம் செய்தார்



## பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து கலந்துரையாடல்



நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார 01ம் திகதி செவ்வாய்க்கிழமை மஹர சிறைச்சாலைக்கு விஜயம் செய்து, அங்குள்ள அதிகாரிகளுடன் விசேட கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

சிறைச்சாலைகளுக்குள் எதிர்பாராதவிதமாக மோதல்கள் அல்லது பதற்றமான சூழ்நிலைகள் தோற்றுவிக்கப்படும் போது, அவசரமாக முன்னெடுக்கப்பட வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து இதன்போது விரிவாகப் பேசப்பட்டது.

சிறைச்சாலைகளுக்குள் மேற்கொள்ளப்பட வேண்டிய கட்டமைப்பு மற்றும் நிர்வாக மறுசீரமைப்புப் பணிகள் குறித்தும் அமைச்சர் அதிகாரிகளுடன் கலந்தாலோசித்தார்.

# இலங்கைக்கான புதிய சீனத் தூதர் வெய் ஹீவாஜியாங் ரில்வின் சில்வாவைச் சந்தித்துப் பேச்சு!

இலங்கைக்கான புதிய சீனத் தூதுவர் வெய் ஹீவாஜியாங், மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வாவை பத்தரமுல்லை, பெலவத்தையில் உள்ள கட்சித் தலைமையகத்தில் சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

நீண்டகால இலங்கை - சீனா உறவுகளை வலுப்படுத்துவது குறித்தும், சீன முதலீடுகளை மேலும் ஈர்ப்பது குறித்தும் இதன்போது விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

இலங்கையில் முதலீடுகளை அதிகரிக்கச் சீன முதலீட்டாளர்கள் ஊக்குவிக்கப்படுவார்கள் என்று தூதுவர் உறுதியளித்தார்.

சீனாவின் வறுமை ஒழிப்பு அனுபவங்கள் இலங்கைக்குப் பயனுள்ளதாக அமையும் என்று குறிப்பிட்ட தூதுவர், அரசின் ஊழல் ஒழிப்பு நடவடிக்கைகள் மற்றும் கிராமப்புற வறுமையைப் போக்குவதை நோக்கமாகக் கொண்ட "பிரஜா சக்தி" திட்டம் தொடர்பாகவும் கவனம் செலுத்தினர்.



இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகளின் 70 ஆண்டும், வரலாற்றுச் சிறப்புமிக்க இறப்பர் - அரிசி ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டு 75 ஆண்டும் 2027 ஆம் ஆண்டில் நிறைவடைவது குறித்தும் இரு தரப்பினரும் இதன்போது நினைவுக கூர்ந்துள்ளனர்.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# இலங்கையின் தொல்பொருள் திணைக்களத்திற்கு திருகோணமலை மேல் நீ நீதிமன்றத்தின் "தடை உத்தரவு"



கிழக்கு மாகாணத்தில் தனியார் காணியொன்றில் அமைந்துள்ள பழைய சிதைவடைந்த சைத்தியம் வளாகத்தில் தொல்பொருள் திணைக்களத்தினால் புதிதாக மேற்கொள்ளப்படும் கட்டுமானப் பணிகளை இடைநிறுத்தி, நீதிமன்றம் இடைக்காலத் தடை உத்தரவை பிறப்பித்துள்ளது.

கன்னியா வெந்நீரூற்றுகள் அமைந்துள்ள காணிக்கு அருகிலுள்ள பிள்ளையார் கோவில் வளாகத்தில் காணப்படும் பழைய சைத்தியத்தை தற்போதுள்ள நிலையில் பாதுகாப்பதற்குப் பதிலாக அதனை புனரமைப்பதைத் தடுக்கும் வகையில் திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதி எம்.ஏ.ஏ. அப்துல்லா ஒகஸ்ட் 31 பிறப்பித்த இடைக்காலத் தடை உத்தரவு செப்டெம்பர் 22ஆம் திகதி வரை நடைமுறையில் இருக்குமென, முறைப்பாட்டாளர் தரப்பு சார்பில் நீதிமன்றத்தில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன், ஊடகவியலாளர்களிடம் தெரிவித்தார்.

கன்னியா வெந்நீரூற்றுகளுக்கு அருகில் தற்போது சிதைவடைந்த நிலையில் காணப்படும் பிள்ளையார் கோவில் வளாகத்தில் அமைந்துள்ளதாகக் கூறப்படும் பழைய சைத்தியத்தை புனரமைப்பதற்காக, ஜூலை 22ஆம் திகதி தொல்பொருள் திணைக்களம் அடிக்கல் நாட்டியிருந்தது.

“இன்று இருக்கும் நிலையிலேயே அதை பராமரிக்க வேண்டும். அதாவது, எந்தவொரு கட்டுமானப் பணியையும் மேற்கொள்ளக்கூடாது என்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. செப்டெம்பர் 22ஆம் திகதி வரை அந்த உத்தரவு நடைமுறையில் இருக்கும்” என சட்டத்தரணி சுமந்திரன் தெரிவித்தார்.

விடயம் தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக தொல்பொருள் திணைக்களம் சார்பில் முன்னிலையான அரச சட்டத்தரணி கால அவகாசம் கோரியமை, வழக்கை அடுத்த விசாரணைத் திகதிக்கு ஒத்திவைக்க காரணமாக அமைந்ததாக பிராந்திய ஊடகவியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

பிள்ளையார் கோவிலும் அதற்கு அருகிலுள்ள பழைய சைத்தியம் அமைந்துள்ள காணியும் பிரதேசவாசி ஒருவருக்குச் சொந்தமான தனியார் காணி எனவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

தனியார் காணியில் அமைந்துள்ள பிள்ளையார் கோவிலை வேறு இடத்தில் நிர்மாணிப்பதற்கும், அந்தக் காணியில் காணப்படும் பழைய சைத்தியத்தை அது தற்போதுள்ள நிலையிலேயே பாதுகாப்பதற்கும் தொல்பொருள் திணைக்களம் முன்னதாக நீதிமன்றத்தில் இணக்கப்பாட்டுக்கு வந்திருந்தது.





தொல்பொருள் பெறுமதி கொண்டதாக அடையாளம் காணப்பட்ட இடமொன்றைப் பாதுகாப்பதற்கு தொல்பொருள் திணைக்களத்திற்கு உரிமை இருப்பதாகவும், அதற்கு அமைய அங்கு இருந்ததாகக் கூறப்படும் பழைய சைத்தியத்தை தற்போதுள்ள நிலையிலேயே பாதுகாப்பதற்கு மாத்திரமே அவர்களுக்கு உரிமை இருப்பதாகவும் H.C.R./RIT/590/2019 வழக்கில் ஏற்படுத்தப்பட்ட இணக்கப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளதாக பிராந்திய ஊடகவியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

அந்தத் தீர்ப்புக்கு அமைவாக, காணியின் உரிமையாளர் சார்பில் சட்டத்தரணி பிரசாந்தி உதயகுமார் ஊடாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட நகர்த்தல் பத்திரத்திற்கு அமைய, நீதிமன்றத்தில் முன்னதாக ஏற்படுத்தப்பட்ட இணக்கப்பாட்டுக்கு முரணாக, தனது காணியில் அமைந்துள்ள பழைய சைத்தியத்தை புனரமைப்பதற்காக தொல்பொருள் திணைக்களம் தற்போது நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனியார் காணியில் அமைந்துள்ள தொல்பொருள் தளத்தைப் பாதுகாப்பதைத் தவிர அதனைப் புனரமைக்க முடியாது என தொல்பொருட்கள் கட்டளைச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களையும், முன்னதாக தொல்பொருள் திணைக்களம் நீதிமன்றத்தில் இணங்கிய விடயங்களையும் திருகோணமலை மேல் நீதிமன்றத்தில் மீண்டும் வலியுறுத்தியதாக, முறைப்பாட்டாளர் தரப்பு சார்பில் நீதிமன்றத்தில் முன்னிலையான சட்டத்தரணி சுமந்திரன் மேலும் தெரிவித்தார்.

“தொல்பொருட்கள் கட்டளைச் சட்டத்தின் 20ஆம் பிரிவின் கீழ், காணியின் உரிமையாளருக்கும் தொல்பொருள் பணிப்பாளர் நாயகத்திற்கும் இடையில் ஓர் ஒப்பந்தத்தை ஏற்படுத்திக்கொள்ள முடியும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த ஒப்பந்தத்தின் மூலம் அங்கு காணப்படும் தொல்பொருள் தளத்தைப் பாதுகாப்பதற்கு உடன்பட முடியும். எங்களுடைய நிலைப்பாடு என்னவென்றால், நீதிமன்றத்தில் ஏற்படுத்திக்கொண்ட இணக்கப்பாடுதான் அந்த ஒப்பந்தமாகும். தொல்பொருட்கள் கட்டளைச் சட்டத்தின் 20ஆம் பிரிவின் கீழ் உள்ள ஒப்பந்தத்தில் குறிப்பாக “பாதுகாப்பது மாத்திரமே” என்ற விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது. அதாவது வேறு எதையும் செய்யக்கூடாது. பாதுகாப்பதை மாத்திரமே செய்ய முடியும். புனரமைக்க முடியாது. பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ள முடியாது. சட்டத்தில் வழங்கப் பட்டுள்ள வேறு அதிகாரங்களையும் பயன்படுத்த முடியாது. ஏனெனில், அந்த இடத்தை அது இருக்கும் நிலையிலேயே பாதுகாப்பதற்கான நடவடிக்கையை மாத்திரமே மேற்கொள்வோம் என அவர்கள் எங்களுடன் நீதிமன்றத்தில் இணங்கியுள்ளனர். அதனால்தான் இந்த விடயத்தை மீண்டும் நீதிமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தோம்”.

# தமிழ் ஊடகர்கள் மீதான அச்சுறுத்தல்கள் தொடர்பாக அநுர அரசுக்கு எதிராக சட்டத்தரணி சுகாஷ் கடும் கண்டனம்!

இலங்கை செய்திகள்
Sri Lanka News




தமிழ் ஊடகவியலாளர்கள் மீது அரச அதிகார பின்னணியில் விடுக்கப்படும் அச்சுறுத்தல்களை வன்மையாகக் கண்டிக்கின்றோம் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் கனகரத்தினம் சுகாஷ் தெரிவித்தார்.

யாழ். ஊடக அமையத்தில் 2ம் திகதி அன்று புதன்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ”தமிழர் தாயகப் பகுதியில் அரச ஊடகமொன்றில் பணியாற்றும் ஊடகவியலாளர் ஒருவர், அரசின் நிகழ்ச்சி நிரலுக்கு ஒத்துழைக்கவில்லை என்பதற்காக அவதூறுகள், விசாரணைகள் மற்றும் பல்வேறு அழுத்தங்களுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்.

மக்களுடைய ஜனநாயகத்தை உறுதிப்படுத்துவதாகச் சர்வதேசத்துக்குக் கூறும் தற்போதைய தேசிய மக்கள் சக்தி அரசு, தமிழ் ஊடகவியலாளர்களை அச்சுறுத்துவதன் மூலம் தனது உண்மையான முகத்தை வெளிப்படுத்துகின்றது.

அச்சுறுத்தலுக்கு உள்ளாகும் ஊடகவியலாளர்களின் உரிமைகளுக்கும் பாதுகாப்புக்கும் நாம் எப்போதும் அரணாக நிற்போம்.

வடமராட்சியில் தேசிய மக்கள் சக்தியின் பிரதேச சபை உறுப்பினர் ஒருவரால் காணி ஒன்றின் மீது கல்லெறிந்து சிசிரிவி கமரா சேதப்படுத்தப்பட்டுள்ளது. சிசிரிவி காணொளிகள் மற்றும் மேற்படி நபர் ஊடகவியலாளர் சந்திப்பில் வழங்கிய ஒப்புதல் வாக்குமூலம் ஆகியவை இருந்த போதிலும், பொலிஸார் அவரை 24 மணி நேரத்துக்குள் நீதிமன்றத்தில் முற்படுத்தாமல் அதிகாலை 3 மணியளவில் விடுவித்துள்ளமை அப்பட்டமான சட்டவிரோத செயலாகும்.

தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்த மக்கள் தற்போது வெட்கப்பட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

வடக்கு, கிழக்கில் தமிழர்களின் காணிகளைச் சுவீகரிக்கும் நடவடிக்கைகளைத் தடுப்பதற்குச் சிங்களக் கட்சிகளை வடக்கு, கிழக்கில் இருந்து ஜனநாயக ரீதியாக வெளியேற்றுவதே தமிழர்களின் இருப்பை நிலைநாட்டுவதற்கான வழி.” - என்றார்.

HUMAN RIGHTS WATCH

# மனித உரிமை மீறல் வழக்குகளை தாக்கல் செய்வதில் அநுர அரசு தாமதம் என மனித உரிமைகள் கண்காணிப்பகம் குற்றச்சாட்டு

இலங்கையில் கடந்த காலங்களில் இடம்பெற்ற பாரதூரமான மனித உரிமை மீறல்கள் தொடர்பான வழக்குகளைத் தொடர்வதில் தற்போதைய அரசு தாமதித்து வருகின்றது என்றும், இது எதிர்கால முன்னேற்றம் குறித்த கவலைகளை ஏற்படுத்துகின்றது என்றும் மனித உரிமைகள் கண்காணிப்பகம் தனது புதிய அறிக்கையில் தெரிவித்துள்ளது.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள், சித்திரவதை செய்யப்பட்டவர்கள் மற்றும் கொலை செய்யப்பட்டவர்கள் தொடர்பான பல வழக்குகள் இன்னும் எந்தவித முன்னேற்றமுமின்றி உள்ளன என்றும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது: ”பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தினரும் மனித உரிமைப் பாதுகாவலர்களும் தொடர்ந்து அச்சுறுத்தல்களையும் மிரட்டல்களையும் எதிர்கொண்டு வருகின்றனர்.

2024ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசு, லசந்த விக்கிரமதுங்க படுகொலை, பிரகீத் எக்னெலிகொட காணாமல் ஆக்கப்பட்டமை, 11 இளைஞர்கள் கடத்தப்பட்டமை மற்றும் உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் விசாரணைகள் போன்றவற்றில் சில வரம்புக்குட்பட்ட முன்னேற்றங்களை ஏற்படுத்தியுள்ள போதிலும், மூத்த அதிகாரிகள் தொடர்புபட்ட மற்றைய முக்கிய வழக்குகளில் (உதாரணமாக, 17 உதவிப் பணியாளர்கள் படுகொலை மற்றும் 5 தமிழ் மாணவர்கள் கொல்லப்பட்ட சம்பவம்) எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையினால் நிறுவப்பட்ட Sri Lanka Accountability Project திட்டத்தை தற்போதைய அரசு ஏற்றுக்கொள்ளாததுடன், சுயாதீனமாக வழக்குத் தொடரும் அமைப்பையும் இதுவரையில் நிறுவவில்லை.

பல தசாப்தங்களாக நிலவி வரும் தண்டனையின்மைக்கு முற்றுப்புள்ளி வைத்து, உண்மையான பொறுப்புக்கூறலை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகளை இலங்கை அரசு விரைவுபடுத்த வேண்டும்.

நீதியை நிலைநாட்டுவதற்கான தனது உறுதிப்பாட்டைச் செயற்பாடுகள் மூலம் வெளிப்படுத்துமாறு ஐ.நா. மனித உரிமைகள் பேரவையும் உயர் ஆணையாளரும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசை வலியுறுத்த வேண்டும்.” - என்றுள்ளது.



# சர்வதேச வலிந்து காணாமல் ஆக்கப்படடவர் நாள் 2026, யாழ்ப்பாண மாநாடு கூறி நிற்பது? ....

- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார் -

**கடந்த வாரம் நடந்த மூன்று நிகழ்ச்சிகளையும் தொகுத்து பார்க்கும் பொழுது தெளிவாகத் தெரிவது என்னவென்றால், காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளுக்காக போராடும் அமைப்புகள் மத்தியில் முரண்பாடுகள் உண்டு. அந்த முரண்பாடுகளை வெளிச் சக்திகள் ஊக்குவிக்கின்றன் கையாள முற்படுகின்றன. அதுமட்டுமில்லை, அது தமிழ்த் தேசிய அரசியலில் கட்சிகளுக்கு உள்ளேயும் கட்சிகளுக்கு வெளியேயும் காணப்படும் முரண்பாடுகளையும் பிரதிபலித்தது. இந்த விடயத்தில் சிவில் சமூக அமைப்புகளுக்கு இடையேயும் ஒருங்கிணைந்த முடிவுகள் இல்லைத்தான். ஆனாலும் பாதிக்கப்பட்ட மக்களின் போராட்டம் என்ற அடிப்படையிலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்பது எல்லாருக்குமான பொதுக் கொள்கை என்று அடிப்படையில் சிவில் சமூகங்களைச் சேர்ந்தவர்கள் தங்கள் முரண்பாடுகளைக் கடந்து அங்கே குழுமியிருந்தார்கள். எனினும் தமிழரசுக் கட்சிக்குள் காணப்படும் உட்போட்டியை அந்த நிகழ்வுகள் பிரதிபலித்தன.**

கடந்த 30 ஆம் தேதி யாழ்ப்பாணம் தந்தை செல்வா கலையரங்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டரின் சர்வதேச நாள் அனுஷ்டிக்கப்பட்டது. இந்நிகழ்வில் நூற்றுக்கணக்கானவர்கள் கலந்து கொண்டார்கள். வெளி மாவட்டங்களில் இருந்தும் பாதிக்கப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்தவர்களும் அரசியல் செயற்பாட்டாளர்களும் சிவில் சமூகத்தவர்களும் வந்திருந்தார்கள். அனைத்துலக சமூகத்தின் பிரதிநிதிகளும் வந்திருந்தார்கள். ஐநாவின் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான பணிக் குழுவின் உறுப்பினர்களில் ஒருவராகிய அனா வந்திருந்தார். அனைத்துலக மன்னிப்பு சபையின் தென்னாசிய பிராந்திய பொறுப்பாளர் வந்திருந்தார். அமெரிக்க ஆஸ்திரேலியா சுவிட்சர்லாந்து தூதரகங்களின் பிரதிநிதிகள் வந்திருந்தார்கள். நாடாளுமன்ற உறுப்பினர்கள், கட்சிப் பிரமுகர்கள், சிவில் சமூகத்தவர்கள், கருத்துருவாக்கிகள் வந்திருந்தார்கள்.

அது ஓர் அனைத்துலக மாநாடாக ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது. மாநாடு தொடங்க முன்பு யாழ் வீரசிங்க மண்டபத்தில் இருந்து தீப்பந்தம் ஏந்திய மக்களோடு ஒரு வாகன ஊர்தி புறப்பட்டு யாழ் நகரப் பகுதியூடாக நகர்ந்து தந்தை செல்வா கலையரங்கை வந்தடைந்தது. இந்த ஊர்வலத்தில் ஒரு பாரம் தூக்கி வாகனத்தில் ஒரு வெள்ளை வான் வைக்கப்பட்டிருந்தது. அந்த வெள்ளை வானின் உடல் முழுவதும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் ஒளிப்படங்கள் ஒட்டப்பட்டிருந்தன. அது ஓர் அருமையான கற்பனை. அது போலவே மாநாட்டு மண்டபத்தின் அரங்கில் இரண்டு ரத்தம் வடியும் பாதங்கள் வைக்கப்பட்டிருந்தன. பின்னணியில் தமது பிள்ளைகளுக்காகப் போராடி இதுவரை உயிர் நீத்த 200க்கும் குறையாத அம்மாக்கள் அப்பாக்களுடைய ஒளிப்படங்கள் அடங்கிய இரண்டு தட்டிகள் வைக்கப்பட்டிருந்தன.

மேடை ஒழுங்கமைப்பும், நிமிர்ந்திருக்கும் இரண்டு பாதங்களும், வெள்ளை வானும் கலைத்துவமாக உருவாக்கப்பட்டிருந்தன. தமிழ் மக்கள் தங்களுடைய அரசியல் எதிர்ப்பை நீதிக்கான கோரிக்கையை கலாபூர்வமாக வெளிப்படுத்துகிறார்கள் என்பதை அவை காட்டின. அதேபோல மாநாட்டில் பேசிய பாதிக்கப்பட்ட அம்மாக்களின் அறிக்கைகளும் நன்கு திட்டமிட்டுத் தயாரிக்கப்பட்டவைகளாக காணப்பட்டன. அங்கேயும் வார்த்தைகள் கலாபூர்வமாக கையாளப்பட்டிருந்தன.

வெளிநாட்டு பிரதிநிதிகள் உரையாற்றினார்கள். உள்நாட்டு மக்கள் பிரதிநிதிகளும் உரையாற்றினார்கள். அரசியல் ஆய்வாளர் ஒருவரும் உரையாற்றினார். அம்மாக்கள் மத்தியில் இருந்தும் பிரதிநிதிகள் உரையாற்றினார்கள். தமிழ் மக்கள் சார்பில் உரையாற்றிய அனைவருமே அனைத்துலக விசாரணையை கேட்டார்கள். யாருமே உள்நாட்டு விசாரணை பொறிமுறையை ஏற்றுக் கொள்ளவில்லை.

அனைத்துலக பிரதிநிதிகளில் குறிப்பாக ஐநாவின் ராஜதந்திரி ஆகிய அனா லொரீனா உரையாற்றும்போது, விடுதலைப்புலிகள் இயக்கத்தால் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பாகவும் சுட்டிக்காட்டினார். அவர்களுக்கும் நீதி கிடைக்க வேண்டும் என்று கூறினார். வெளிநாட்டு பிரதிநிதிகளின் உரைகளுக்கு மொழிபெயர்ப்பு வழங்கப்பட்டது. இரண்டு நூல்கள் வெளியிடப்பட்டன. மாநாடு முடிந்த பின் மண்டபத்தின் ஒரு பகுதியில் காணாமல் ஆக்கப்பட்டவர்களுடைய நினைவு பொருட்கள் காட்சிக்கு வைக்கப்பட்டன.

அனைத்துலக நாள் ஒன்றை அனைத்துலக மாநாடாக ஒழுங்குபடுத்தியமை என்பது முக்கியமானது. அதுவும் பெருமளவுக்கு பாதிக்கப்பட்ட மக்கள் பங்கு பற்றிய ஒரு



மாநாட்டில் அனைத்துலகப் பிரதிநிதிகளை பேச வைத்தமை முக்கியமானது. அந்த அனைத்துலக பிரதிநிதிகளின் முன்னிலையில் தமிழ் மக்கள் அனைத்துலக விசாரணைப் பொறிமுறையைத்தான் கேட்கின்றார்கள் என்பது உரத்துச் சொல்லப்பட்டதும் முக்கியமானது.

அந்த மாநாட்டுக்கு பெரும்பாலான கட்சி பிரதிநிதிகள் வந்திருந்தார்கள். தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த சிறீதரனும் இரண்டு மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களும் வந்திருந்தார்கள். தமிழரசு கட்சியின் பதில் தலைவரும் பதில் செயலாளரும் அந்த மாநாட்டில் கலந்து கொள்ளப் போவதில்லை என்று ஊடகங்களுக்குத் தெரிவித்திருந்தார்கள். அம்மாக்கள் கூறுகிறார்கள், தாங்கள் கட்சியின் பதில் தலைவருக்கு அழைப்பைக் கொடுத்ததாக.

யாழ்ப்பாணத்தில் இவ்வாறு ஓர் அனைத்துலக மாநாடு நடைபெற்ற அதே காலப்பகுதியில், கிளிநொச்சியில் மற்றொரு நிகழ்வு நடந்தது. அது சிறிய அளவில் நடந்தது. அதுவும் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்காகப் போராடும் அம்மாக்களின் நிகழ்வுதான். நாடாளுமன்ற உறுப்பினர் சிறீததரன் அங்கேயும் காணப்பட்டார். அனைத்துலக மன்னிப்புச் சபையின் தென்னாசியப் பிராந்தியப் பொறுப்பாளரும் அங்கே காணப்பட்டார். கொழும்பில் உள்ள சுவிட்ச்லாந்து தூதரகத்தின் பிரதிநிதி ஒருவரும் அங்கே காணப்பட்டார். சிங்கள மனித உரிமைச் செயற்பாட்டாளர் ருக்கி பெர்னாண்டோவும் காணப்பட்டார். இவர்கள் அனைவரும் சில அம்மாக்களும் அந்த நிகழ்வு முடிந்தபின் அங்கிருந்து வந்து யாழ்ப்பாணத்து மாநாட்டிலும் கலந்து கொண்டார்கள்.

கிளிநொச்சி மாநாட்டில் ஒருவர் அந்த மாநாட்டைக் குழப்பும் விதமாக கெட்ட வார்த்தைகளை உரத்துப் பேசியதாக ஒரு குற்றச்சாட்டு உண்டு. அவ்வாறு பேசியவர் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்காகப் போராடும் அம்மாக்களின் சங்கங்களை சேர்ந்த ஒரு பெண்ணுடைய கணவர் என்றும் கூறப்படுகிறது. அவர் அந்த நிகழ்வின் அமைதியைக் குழப்பம் விதத்திலும் அந்த நிகழ்வின் மாண்பைக் குழப்பும் விதத்திலும் நடந்து கொண்டதாகவும் குற்றச்சாட்டு உண்டு. அம்மாக்களின் சங்கங்களுக்கு இடையில் காணப்படும் பிளவையும் முரண்பாடுகளையும் அது பிரதிபலித்தது. அங்கெ நடந்தவற்றை அனைத்துலக மணிப்புச் சபையின் பிரதிநியும், சுவிஸ்லாந்து தூதரகத்தைச் சேர்ந்த ஒருவரும் சிங்கள மனித உரிமைச் செயற்பாடடாளர் ஒருவரும் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

இந்த இரண்டு கூட்டங்களுக்கும் ஐந்து நாட்கள் முன்னதாக யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் நடந்த ஒரு கூட்டத்தில் அம்மாக்களின் மீது போலீசார் பலப் பிரயோகத்தை மேற்கொண்டார்கள். அந்தக் கூட்டத்தை ஒழுங்கு படுத்தியது அரசாங்கத்தின் ஓஎம்பி என்று அழைக்கப்படுகின்ற காணாமல் போனோருக்கான அலுவலகம் ஆகும். அந்த அலுவலகத்தை அம்மாக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. அந்த அலுவலகத்தின் நிகழ்வைப் புறக்கணித்து அவர்கள் மாவட்டச் செயலகத்தின் வாசலில் எதிர்ப்புக் காட்டினார்கள். அதே சமயம் பாதிக்கப்பட்ட மக்கள் மத்தியில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 362 குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு ஓஎம்பியும் அரசாங்கத்தின் அமைச்சர்களும் நிவாரணம் வழங்கினார்கள். நிதி உதவிகளைச் செய்தார்கள். பாதிக்கப்பட்ட மக்கள் மத்தியில் ஒரு பகுதியினர் ஓஎம்பியினால் கையாளப்படுகிறார்கள் என்பதனை அது காட்டியது. காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான நீதி தொடர்பான விடயங்களை கையாளும் அமைச்சு மற்றும் ஓஎம்பிக்கும் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் இடையே முரண்பாடுகள் இருப்பதை அது காட்டியது.

கடந்த வாரம் நடந்த மூன்று நிகழ்ச்சிகளையும் தொகுத்து பார்க்கும் பொழுது தெளிவாகத் தெரிவது என்னவென்றால், காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளுக்காக போராடும் அமைப்புகள் மத்தியில் முரண்பாடுகள் உண்டு. அந்த முரண்பாடுகளை வெளிச் சக்திகள் ஊக்குவிக்கின்றன் கையாள முற்படுகின்றன. அதுமட்டுமில்லை, அது தமிழ்த் தேசிய அரசியலில் கட்சிகளுக்கு உள்ளேயும் கட்சிகளுக்கு வெளியேயும் காணப்படும் முரண்பாடுகளையும் பிரதிபலித்தது. இந்த விடயத்தில் சிவில் சமூக அமைப்புகளுக்கு இடையேயும் ஒருங்கிணைந்த முடிவுகள் இல்லைத்தான். ஆனாலும் பாதிக்கப்பட்ட மக்களின் போராட்டம் என்ற அடிப்படையிலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்பது எல்லாருக்குமான பொதுக் கொள்கை என்று அடிப்படையில் சிவில் சமூகங்களைச் சேர்ந்தவர்கள் தங்கள் முரண்பாடுகளைக் கடந்து அங்கே குழுமியிருந்தார்கள். எனினும் தமிழரசுக் கட்சிக்குள் காணப்படும் உட்போட்டியை அந்த நிகழ்வுகள் பிரதிபலித்தன.

கடந்த 17 ஆண்டுகால தமிழ் அரசியலில் உணர்ச்சிகரமான முன்னணிப் போராளிகளாக மேற்படி அம்மாக்கள்தான் காணப்படுகிறார்கள். அம்மாக்களை தமிழ்த் தேசியக் கட்சிகளோ அல்லது தமிழ் சிவில் சமூகங்களோ ஒருங்கிணைக்கவில்லை. மாறாக புலம்பெயர்ந்த தரப்புகளின் உதவிகளோடு அம்மாக்கள் போராடி வருகிறார்கள். அந்த உதவிகள்தான் அம்மாக்களைப் பிரித்து வைத்திருப்பதாகக் குற்றச்சாட்டுக்கள் உண்டு. கடந்த 30ஆம் திகதி நடந்த நிகழ்வுகள் அம்மாக்களின் போராட்டதுக்குள்ள அனைத்துலகப் பரிமாணத்தைப் பிரதிபலித்தன. அதோடு, அம மாக்களுக்கிடையிலானமுரண்பாடுகளையும், கட்சிகளுக்கிடையிலான முரண்பாடுகளையும், கட்சிகளுக்குள் காணப்படும் முரண்பாடுகளையும் பிதிபலித்தன.

---

### வீணாவின் கவிக்கணை

**நம் தகுதி என்னவென்று
அடுத்தவர் சொல்லி
நாம் அறிவது பெருமை
அல்ல,
நாம் யார் என்பது
நமக்குத்தான் தெரிய
வேண்டுமே
தவிர அடுத்தவருக்குப்
புரிய வைக்க வேண்டிய
அவசியம் இல்லை!**

# முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அமரர் தர்மலிங்கத்தின் 41ஆம் ஆண்டு நினைவஞ்சலி யாழ். தாவடியில் அனுஷ்டிக்கப்பட்டது!



- ந.லோகதயாளன்

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ் மக்களின் அரசியல் உரிமைப் போராட்டத்தில் முக்கிய பங்காற்றியவருமான அமரர் விஸ்வநாதர் தர்மலிங்கத்தின் 41ஆம் ஆண்டு நினைவஞ்சலி நிகழ்வு 2ம் திகதி அன்று புதன்கிழமை காலை யாழ்ப்பாணம் - தாவடியில் அமைந்துள்ள அன்னாரின் நினைவுத் தூபிக்கு அருகில் நடைபெற்றது.

1985ஆம் ஆண்டு செப்டெம்பர் 2ஆம் திகதி தாவடி பகுதியில் சுட்டுக்கொல்லப்பட்ட அமரர் வி. தர்மலிங்கத்தின் நினைவாக அமைக்கப்பட்டுள்ள நினைவுத் தூபிக்கு, அன்னாரின் புதல்வரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் மற்றும் அவரது பாரியார் ஆகி-யோர் இணைந்து மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர். தொடர்ந்து சுடர்கள் ஏற்றப்பட்டதுடன், அரசியல் பிரமுகர்களும் பொதுமக்களும் மலரஞ்சலி செலுத்தினர்.

1918ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 5ஆம் திகதி கந்தரோடையில் பிறந்த அமரர் வி. தர்மலிங்கம், உடுவில் கிராம சபையின் தலைவராக ஐந்து தடவைகளுக்கு மேல் தொடர்ச்சியாகவும், பின்னர் சுன்னாகம் பட்டின சபையின் தலைவராகவும் பணியாற்றினார். 1960 முதல் 1983 வரை நாடாளுமன்ற உறுப்பினராக விளங்கிய அவர், இலங்கை நாடாளுமன்றத்தில் ஐந்து தடவைகள் அங்கம் வகித்தமை குறிப்பிடத்தக்கது.



நிகழ்வில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன், முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் பாலச்சந்திரன் கஜதீபன், வலிகாமம் வடக்கு பிரதேச சபைத் தவிசாளர் சோமசுந்தரம் சுகிர்தன் உள்ளிட்ட பல அரசியல் பிரமுகர்களும் பொதுமக்களும் கலந்துகொண்டனர்.

# வடக்கு-கிழக்கில் தமிழ் மக்களின் குடிப்பரம்பலை மாற்றும் நடவடிக்கைகள் முன்னைய மகிந்த கோட்டாபாய அரசுகளைப் போன்று தற்போதைய அநுர அரசின் கீழும் தொடர்கின்றது

## நெதர்லாந்து தூதுவரிடம் சாணக்கியன் எம்.பி தெரிவிப்பு!



இலங்கைக்கான நெதர்லாந்து இராச்சியத்தின் தூதுவர் வைபே டி போயரை இன்று சந்தித்த இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன், வடக்கு - கிழக்கு தமிழ் மக்கள் எதிர்நோக்கும் அரசியல், காணி மற்றும் வாழ்வாதாரப் பிரச்சினைகள் தொடர்பாக விரிவான கலந்துரையாடலை மேற்கொண்டார்.

வடக்கு - கிழக்கில் தமிழ் மக்களின் குடிப்பரம்பலை மாற்றும் நோக்கிலான நடவடிக்கைகள் கடந்த காலங்களில் மகிந்த மற்றும் கோட்டாபாய காலத்தில் மாத்திரமன்றி, தற்போதைய அரசின் கீழும் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று சாணக்கியன், தூதுவரிடம் சுட்டிக்காட்டினார்.

குறிப்பாக, மயிலத்தமடு - மாதவனை போன்ற பாரம்பரிய மேய்ச்சல் தரைப் பகுதிகளைத் தமிழ் மக்களிடமிருந்து அபகரித்து, அங்கு குடியேற்றங்களை உருவாக்குவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றமை இதற்கு முக்கியமான உதாரணமாகும் என்றும் அவர் தெரிவித்தார்.

ஒருபுறம் தமிழ் மக்கள் அரசியல் தீர்வை வலியுறுத்தி வருவதுடன், மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்த வேண்டும் என்றும் கோரி வருகின்றனர். ஆனால், அதேவேளை தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசங்களில் பெரும்பான்மை இனக் குடியேற்றங்களை ஏற்படுத்தும் நடவடிக்கைகள் தொடருமானால், எதிர்காலத்தில் மாகாண சபைகள் உள்ளிட்ட எந்தவொரு அரசியல் கட்டமைப்பிலும் தமிழ் மக்களின் பிரதிநிதித்துவமும் அரசியல் வலிமையும் பாதிக்கப்படும் அபாயம் காணப்படுகின்றது என்றும் சாணக்கியன் எடுத்துரைத்தார்.

புதிய அரசமைப்பு உருவாக்கப்பட்டாலும், தமிழ் மக்களின் மக்கள் தொகை விகிதாசாரம் குறைக்கப்பட்டால், அதனால் தமிழ் மக்களுக்கு எந்தவொரு பிரயோசனமும் கிடைக்காத சூழ்நிலை உருவா-கும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

தமிழ் மக்களின் உண்மையான பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படாமல், வேறு சில விடயங்களை மட்டும் அரசின் சாதனைக-ளாக முன்னிறுத்துவதை ஏற்றுக்கொள்ள முடியாது என்று தெரிவித்த சாணக்கியன், எமது மக்கள் தங்களுடைய அடிப்படை அரசியல் மற்றும் வாழ்வாதார உரிமைகள் தொடர்பில் தெளிவான புரிதலுடன் அரசின் நடவடிக்கைகளை மதிப்பீடு செய்ய வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

மேலும், மட்டக்களப்பு மாவட்டம் உள்ளிட்ட வடக்கு, கிழக்கு பகுதிகளில் நீண்டகாலமாகத் தீர்வின்றி நீடித்து வரும் காணி உரிமைப் பிரச்சினைகள், விடுவிக்கப்படாத இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள காணிகள், மகாவலி விரிவாக்கத் திட்டங்களால் ஏற்படும் பாதிப்புகள், வன மற்றும் வனவிலங்கு பாதுகாப்புத் திணைக்களங்களின் எல்லை நிர்ணயங்கள், தொல்பொருள் திணைக்களத்தின் நடவடிக்கைகளால் உருவாகியுள்ள காணி உரிமைச் சிக்கல்கள் உள்ளிட்ட மக்களின் அன்றாட வாழ்வாதாரத்தை நேரடியா-கப் பாதிக்கும் பல்வேறு விடயங்களையும் சாணக்கியன் விரிவாக எடுத்துரைத்தார்.

அதேவேளை, தமிழ் மக்களின் அரசியல் உரிமைகள், சுயநிர்ணய உர-ிமை, மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்த வேண்டிய அவசியம் மற்றும் தமிழ் அரசியல் கட்சிகளுக்கு இடையில் அண்மையில் உருவாகியுள்ள அரசியல் ஒத்துழைப்பு குறித்தும் இந்தச் சந்திப்பின்போது விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

மேலும், ஆறு தமிழ் பேசும் கட்சிகள் இணைந்து முன்னெடுத்துள்ள அரசியல் நடவடிக்கைகளின் முக்கியத்துவம் மற்றும் அதனைத் தொடர்ந்து ஆறு நாடுகளின் உயர்ஸ்தானிகர்கள் யாழ்ப்பாணத்துக்கு மேற்கொள்ளவுள்ள விஜயம் தொடர்பான விடயங்களும் சந்திப்பின்போது ஆழமாகப் பேசப்பட்டன.

வடக்கு - கிழக்கு தமிழ் மக்களின் அரசியல் உரிமைகள், காணி உரிமைகள் மற்றும் வாழ்வாதாரப் பாதுகாப்பு ஆகியவை ஒன்றுக்கொன்று தொடர்புடையவை என்பதையும், இந்த விடயங்களில் சர்வதேச சமூகத்தின் தொடர்ச்சியான கவ-னமும் ஈடுபாடும் அவசியம் என்பதையும் சாணக்கியன், நெதர்லாந்து தூதுவரிடம் வலியுறுத்தினார்.



இலங்கை செய்திகள்
Sri Lanka News



# "காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களுக்கு பதிலளிக்காமல் இலங்கை அரசு தொடர்ச்சியாக மேலும் குற்றமிழைக்கிறது" என்கிறது ஐக்கிய நாடுகள் சபையின் சிறப்பு செயற்குழு

இலங்கையில் பாரதூரமான தவறுகள் மற்றும் தவறிழைத்தவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்படாமல் இருப்பது பெருங்கவலை அளிப்பதாக வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் குறித்த ஐக்கிய நாடுகள் சபையின் சிறப்பு செயற்குழு உறுப்பினர் சட்டத்தரணி அனா லொரெனா டெல்காடியோ (Ana Lorena Delgadillo) தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் 30ம்திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் குறித்த சர்வதேச மாநாட்டில் பங்கேற்று உரையாற்றிய அவர், இலங்கையில் பல தசாபதங்களாக ஆயிரக்கணக்கானோர் காணாமலும், வலிந்து காணாமலும் ஆக்கப்பட்டுள்ள நிலையில், அவர்களுக்கான பதிலும், நீதியும் விரைவாக வழங்கப்பட வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

தவறிழைத்தவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்படாமையும், தண்டனையின்மை கலாசாராமும் சமூகத்தில் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும் என்றும், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பிலான விசாரணைகள் எவ்விதமான அரச தலையீடுகளும் இல்லாமல் சுயாதீனமாக இருக்க வேண்டும் எனவும் மெக்ஸிகோ நாட்டைச் சேர்ந்த சட்டத்தரணி டெல்காடியோ இலங்கை அரசிடம் கோரியுள்ளார்.

வலிந்து காணாமல் ஆக்கப்படுவது பல நாடுகளில், அரசுகளாலும் முன்னெடுக்கப்படுவது மிகவும் கவலைக்குரிய ஒரு விடயம் எனவும், அந்தப் பட்டியலில் இலங்கையும் உள்ளது என்பதையும் அவர் யாழ்ப்பாணத்தில் இலங்கையில் காணாமல் ஆக்கப்பட்ட தமிழர்களை தேடியலையும் தாய்மார்களிடையே உரையாற்றிய அவர் குறிப்பிட்டுள்ளார். தமது பிள்ளைகளை தேடும் தாய்மார்களின் ஆழ்ந்த வேதனையையும் அவர் பகிர்ந்து கொண்டார்.

"எந்த தாயும் காணாமல் போன தமது பிள்ளைக்கு என்ன ஆனது என்பதை தெரிந்துகொள்ளமால் மரணிக்க கூடாது".

தண்டனையின்மை கலாசாரம் மோசமான செயற்பாடு என்பதை குறிப்புணர்த்திய அவர், தவறிழைத்தவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்படாமை அப்படியான சட்ட விரோதமான செயற்பாடுகள் மேலும் இடம்பெறுவதை அனுமதிப் பதாகவே பார்க்கப்படும் எனவும் இலங்கை அரசை கடுமையாக சாடியுள்ளார்.

"தண்டனையின்மை கலாசாரம் மிக அதிகளவில் உள்ளது மிகுந்த கவலையளிக்கும் விடயமாக உள்ளது. அது அப்படியான தண்டனையின்மை நடவடிக்கை ஒரு சமூகத்தின் மீது திணிக்கப்படும் போது, வலிந்து காணாமல் ஆக்கப்படுவது அனுமதிக்கப்படுகிறது என்ற செய்தி சொல்லப்படுகிறது. அது மட்டுமல்ல, அப்படியான செய்தி தெரிவிக்கப்படும் போது, வலிந்து காணாமல் ஆக்கப்படுவது அனுமதிக்கப்பட்ட ஒரு செயலே என்ற எண்ணப்பாடு பரவுகிறது. அதனால் தான், தண்டனையின்மை என்பது எமக்கு மிகுந்த கவலையளிக்கும் ஒரு விடயமாக உள்ளது".

காணாமல் போனவர்கள் மற்றும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் குறித்து அவர்களின் உறவினர்கள் அறிந்துகொள்ள வேண்டியது மிகவும் அவசியம், அந்த தகவலை அளிக்க வேண்டியது அரசின் கடப்பாடு எனவும் அவர் வலியுறித்தினார்.

"காணாமல் போன மற்றும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு என்னவாயிற்று மற்றும் அவர்கள் எங்கேயுள்ளனர் என்பது அறியப்படாத வரையிலும், அதேவேளை அவர்களின் உறவினர்கள் பதில்களை எதிர்பார்த்து காத்திருக்கும் நிலையில், அது கிடைக்காத பட்சத்தில் குற்றம் தொடருவதாக கருதப்படும். அதே போன்று தான் இலங்கை அரசு மற்றும் சர்வதேச சமூகத்தின் கடப்பாடும்" ஐ.நாவின் ஒரு அங்கமான வலிந்து காணாமால் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான சிறப்பு செயற் குழு உறுப்பினரான அவர் தெரிவித்தார்.

எனினும், தமது உரையில், தென் இலங்கையில் 80-களின் பிற்பகுதியில் மக்கள் விடுதலை முன்னணியின் கிளர்ச்சியின் போது வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் குறித்தும் அவர் சுட்டிக்காட்டினார்.

சட்டத்தரணி அனா லொரெனா டெல்காடியோ, தமது இலங்கை விஜயத்தின் போது, அண்மைக் காலங்களில் கண்டறியப்பட்டு அகழப்படும் மனித புதைகுழிகள் சிலவற்றையும் பார்வையிடுவார் என்றும், வடக்கு - கிழக்கு மாவட்டங்களுக்கு பயணித்து காணாமல் போன மற்றும் வலிந்து காணாமல் ஆக்கப் பட்டவர்களின் உறவினர்களை சந்தித்தும் உரையாடுவார் என்று அறியப் படுகிறது. இந்த பயணத்தின் போது, வடக்கு-கிழக்கில் போர்க்காலத்தில் இடம்பெற்ற அத்துமீறல்கள், சட்டவிரோத செயல்பாடுகள் ஆகியவை காரணமாக வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் மேலதிக தவல்கள், தரவுகள் மற்றும் ஆவணங்கள் ஆகியவற்றையும் அவர் சேகரிப்பார் எனவும் கூறப்படுகிறது.

# ஊழல் செய்த மகிந்த குடும்பத்தின் ஆட்சியில் அவர்களைப் போன்று ஊழல் செய்த முன்னாள் அமைச்சர் பிரியங்கர ஜயரத்னவுக்கு ஏழு வருடக் கடூழியச் சிறைத்தண்டனை!

## இலஞ்ச, ஊழல் வழக்கில் கொழும்பு மேல் நீதிமன்றம் அதிரடித் தீர்ப்பு



இலஞ்ச, ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணைக்குழுவினால் தொடுக்கப்பட்ட ஊழல் வழக்கில் குற்றவாளியாகக் காணப்பட்ட முன்னாள் அமைச்சர் பிரியங்கர ஜயரத்னவுக்கு ஏழு வருடக் கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.



கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி மொஹமட் மிஹால் நீண்ட விசாரணையின் பின்னர் இந்தத் தீர்ப்பை 1ம் திகதி அன்று செவ்வாய்க்கிழமை வழங்கியுள்ளார்.

கடந்த 2014ஆம் ஆண்டு ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் மே தினக் கூட்டத்தில் கலந்துகொண்ட அரசியல் ஆதரவாளர்களுக்கு உணவு வழங்குவதற்காக, அரச நிறுவனமான "ஸ்ரீலங்கன் கெட்டரிங்" நிறுவனத்தின் கணக்கிலிருந்து மாரவிலைச் சேர்ந்த தனியார் கேடரிங் நிறுவனமொன்றுக்கு 3 இலட்சத்து 30 ஆயிரம் ரூபா செலுத்தியமை தொடர்பில் இந்த வழக்குத் தொடரப்பட்டது.

விமான சேவைகள் அமைச்சராகப் பதவியில் இருந்த பிரியங்கர ஜயரத்ன, "ஸ்ரீலங்கன் கெட்டரிங்" நிறுவனத்தின் நிறைவேற்று அதிகாரியைப் பயன்படுத்தி மேற்படி பணத்தைக் கொடுக்குமாறு செல்வாக்குச் செலுத்தினார் ஈப்ரு குற்றப்பத்திரிகையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

ஆணைக்குழுவினால் தாக்கல் செய்யப்பட்ட குற்றப்பத்திரிகையின் மீதான விசாரணைகள் நிறைவடைந்த நிலையில், முன்னாள் அமைச்சர் குற்றவாளியாக நிரூபிக்கப்பட்டதை அடுத்து அவருக்கு ஏழு வருட காலக் கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

# "எங்களுடைய மண் நீண்ட வரலாற்றை கொண்டதும் பல தியாகங்களையும் செய்த மண், எனவே வடமராட்சி கிழக்கு பகுதிக்கு மசாஜ் நிலையம் தேவை இல்லை"




## இந்திய நிறுவனத்திற்கு காணி வழங்குவதற்கு வடமராட்சி கிழக்கு மக்கள் கடும் எதிர்ப்பு!

யாழ்ப்பாணம், வடமராட்சி கிழக்கு வெற்றிலைக்கேணி, ஆழியவளை உட்பட்ட 20 ஏக்கர் அரச காணியை மசாஜ் நிலையம் அமைப்பதற்காக இந்தியாவின் தனியார் நிறுவனத்திற்கு கொடுப்பதற்கு மக்கள் கடும் எதிர்ப்பு வெளியிட்டுள்ளனர்.

28-08-2026 அன்று வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் ரஜீவன் எம்.பி தலைமையில் இடம் பெற்ற கலந்துரையாடலில் மசாஜ் நிலையம், தியான மண்டபம் அமைப்பதற்காக இந்திய தனியார் நிறுவனம் ஒன்றிற்கு வெற்றிலைக்கேணி, ஆழியவளை பகுதியை உள்ளடக்கிய 20 ஏக்கர் நிலப்பரப்பை குத்தகை அடிப்படையில் கொடுப்பதற்கு தீர்மானம் முன் வைக்கப்பட்டது.

தங்களுடைய மண் பல வரலாற்றை கொண்டது, பல தியாகங்களைச் செய்த மண், ஆகவே வடமராட்சி கிழக்கு பகுதிக்கு மசாஜ் நிலையம் தேவை இல்லை என்று மக்கள் குறித்த திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்துவருகின்றனர்.

வடமராட்சி கிழக்கில் தற்போதும் பல நூறு குடும்பங்கள் நிரந்தர காணியில்லாமல் தவிக்கின்ற போதும் மக்களுக்கு கொடுக்க வேண்டிய அரச காணியை தனியார் நிறுவனத்திற்கு கொடுப்பதற்கு ஏன் ஆர்வம் காட்டுகிறார்கள் என்று மக்கள் கேள்வி எழுப்பி உள்ளனர்.

வடமராட்சி கிழக்கு பகுதியில் சட்டவிரோத செயற்பாடுகள் இடம்பெறுகின்ற போதும் அதனை தடுத்து நிறுத்தாமல் இளைய தலைமுறையை சீரழிக்கும் கழியாட்ட விடுதிகளை அமைப்பதற்கு முயற்சிப்பது ஏற்கத்தக்கதல்ல என்றும் மக்கள் தெரிவித்துள்ளனர்.

மக்களுக்கு நன்மையற்ற அபிவிருத்தி திட்டங்களை முன்மொழிவதை உரியவர்கள் நிறுத்த வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டுள்ளனர்.

# இலங்கைப் பிரதமர் ஹரிணி பூட்டான் பயணம்

## உலக உணவு உச்சிமாநாட்டில் சிறப்புரை



பூட்டானுக்கான ஐந்து நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய 1ம் திகதி செவ்வாய்க்கிழமை அன்று காலை இலங்கையிலிருந்து புறப்பட்டுச் சென்றார்.

இந்த விஜயத்தின் போது, பூட்டானில் நடைபெறவுள்ள "உலக விழிப்புணர்வு உணவு முறைமைகள்" உச்சிமாநாட்டின் ஆரம்ப நிகழ்வில் கலந்துகொள்ளும் பிரதமர், அதில் சிறப்புரையாற்றவுள்ளார்.

அத்துடன், சர்வதேசத் தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகளைச் சந்தித்து நிலையான உணவு முறைமைகள், உணவுப் பாதுகாப்பு மற்றும் இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவது தொடர்பான பல உத்தியோகபூர்வ சந்திப்புகளிலும் பிரதமர் ஹரிணி அமரசூரிய கலந்துகொள்ளவுள்ளார்.

இலங்கை செய்திகள் Sri Lanka News

# தமிழரசன் நினைவேந்தல் நிகழ்ச்சியில் கலந்துகொள்ளத் தடை!

## பழ. நெடுமாறன், சுபா. இளவரசன் உட்பட நூற்றுக்கணக்கானவர்கள் கைது!

### உலகத் தமிழர் பேரமைப்பின் தலைவர் பழ. நெடுமாறன் கடும் கண்டனம்



தமிழ்த் தேசியப் போராளியும், காவல்துறையினால் சட்டத்திற்குப் புறம்பான முறையில் சுட்டு வீழ்த்தப்பட்டவருமான தோழர் தமிழரசன் அவர்களின் 39ஆவது நினைவு நாளில் அவருக்கு நினைவேந்தல் நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. மதகளிர் மாணிக்கம் என்னும் சிற்றூரில் அவரது குடும்பத்தினருக்குச் சொந்தமான நிலத்தில் அவருடைய கல்லறை அமைந்துள்ளது. அதற்கு அருகிலேயே அவருடைய தங்கை திருமதி அன்பழகி அவர்களின் வீடு உள்ளது. அந்த வீட்டில் நடைபெற்ற தமிழரசனின் நினைவேந்தல் நிகழ்ச்சியில் பங்கேற்பதற்காக நானும், தமிழர் நீதிக்கட்சியின் தலைவர் சுபா. இளவரசன், தமிழர் தேசிய முன்னணியின் அரியலூர் மாவட்டத் தலைவர் புலவர் அரங்கநாடன் உட்பட நூற்றுக்கணக்கான தோழர்கள் மற்றும் மகளிர் உட்பட பல வாகனங்களில் அந்த ஊரை நோக்கி செப்டம்பர் முதல் நாள் மாலையில் சென்றோம். எங்களைப் போல பல்வேறு பகுதிகளிலிருந்தும் ஏராளமான மக்கள் அவ்வூரை நோக்கித் திரண்டு வந்தனர்.

உயிர்த் தியாகம் செய்தவரை நினைவு கூர்ந்து அஞ்சலி செலுத்துவதும், நினைவேந்தல் நிகழ்வில் பங்கேற்பதும் அடிப்படையான மனிதஉரிமையாகும். ஆனால், அந்த ஊருக்குள்ளேயே யாரையும் நுழையவிடாது தடுத்து நிறுத்தியதோடு, ஏராளமான காவல்படையினரும் அங்கு குவிக்கப்பட்டிருந்தார்கள்.

இதற்கிடையில் அவ்வூரை நோக்கிச் சென்ற எங்களை திருமுட்டத்திலேயே தடுத்து நிறுத்தி காவல்துறையினர் கைது செய்து அங்கிருந்த ஒரு மண்டபத்தில் கொண்டுபோய் சில மணிநேரம் வைத்திருந்து பிறகு இரவு 8மணிக்கு எங்களை விடுதலை செய்தனர். எங்கள் மீது ஒரு வழக்கும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

கடந்த 39ஆண்டு காலமாக தமிழரசன் அவர்களின் கல்லறைக்கு யாரும் செல்லவிடாமல் காவல்துறை இன்றளவும் தடுத்து வருவது அப்பட்டமான மனிதஉரிமை மீறலாகும். இதை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன்.

இந்த நினைவேந்தல் நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்த தமிழர் நீதிக் கட்சித் தலைவர் சுபா. இளவரசன் அவர்களைப் பொய்க் குற்றச்சாட்டின்கீழ் காவல்துறை இன்று மீண்டும் கைது செய்திருப்பது அவர் மீது வஞ்சம் தீர்க்கும் அப்பட்டமான அநீதியாகும். அவரை உடனடியாக விடுதலை செய்வதோடு, எங்கள் மீது தொடுக்கப்பட்ட வழக்குகளையும் திரும்பப் பெறுமாறு வலியுறுத்துகிறேன்.

தமிழரசனின் கல்லறைக்கு யாரும் சென்று அஞ்சல் செலுத்தவிடாமல் 39 ஆண்டு காலமாக காவல்துறை தடுத்து வரும் இந்த அநீதிக்கு முற்றுப்புள்ளி வைத்து, மறைந்த தமிழரசனின் குடும்பத்தினருக்கு நீதி வழங்க முன்வருமாறு தமிழக முதலமைச்சர் திரு. ச. ஜோசப் விஜய் அவர்களை நான் வேண்டிக்கொள்கிறேன்.



அன்புள்ள,

பழ. நெடுமாறன், *தலைவர்*

# கோண்டாவில் பிரபல விற்பனை நிலையத்தில் காலாவதியான உணவுப் பொருள்கள் விற்பனைக்கு இருந்ததால் தொடரப்பட்ட வழக்கில் உரிமையாளரை விடுவிக்க நீதிமன்றத்தில் பொய் வாதம் செய்த சட்டத்தரணிகள்?

பலாலி வீதி, கோண்டாவில் பகுதியில் உள்ள ஓர் பிரபல விற்பனை நிலையத்தில் காலாவதியான சொக்கிலேட், பால் போத்தல் உள்ளிட்ட 3 வகையான பொருள்கள் விற்பனைக்கு தயாராக இருந்தபோது பொதுச் சுகாதார உத்தியோகத்தரால் கண்டு பிடிக்கப்பட்டு யாழ்ப்பாணம் மேலதிக நிதவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

அந்த வழக்கு மேலதிக நீதவான் முன்னிலையில் விசாரணையின்போது இதே வகையான முற் குற்றமும் உள்ளமை மன்றுரைக்கப்பட்டது.

மேன் முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்த வழக்கில் கோரிய இடைக்கால நிவாரணங்களை வழங்க நீதிமன்றம் மறுப்புத் தெரிவித்துள்ளது.

வழக்கை ஆராய்ந்த யாழ்ப்பாணம் மேலதிக நீதவான் நீதிமன்ற நீதிபதி உசைன் வியாபார நிலையத்தின் வியாபார அனுமதியை இரத்து செய்யுமாறும் இந்த உத்தரவை இரு தேசிய பத்திரிகையில் பிரசுரிப்பதோடு வியாபார உரிமை இரத்து உத்தரவை நல்லூர் பிரதேச சபைக்கு அறிவிக்குமாறும் கட்டளையிட்டார்.

இவ்வாறு மேலதிக நீதவான் பிறப்பித்த கட்டளைகளை இரத்துச் செய்து இடைக்கால நிவாரணம் ஒன்றை வழங்குமாறு கோரி வியாபார அனுமதி இரத்து செய்யப்பட்ட நிறுவனம் சார்பில் மேல் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொண்டபோது நிறுவனத்தின் சார்பில் 3 சட்டத்தரணிகள் எவ்வித தயக்கமும் இல்லாமல் உண்மையை மறைத்து பொய்வாதம் செய்தார்கள் என பொதுமக்கள் தெரிவித்துள்ளனர். இவ்வாறான சட்டத்தரணிகள் சமூகத்திற்கு துரோகம் விளைவிப்பவர்கள் என்றும் பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.

வழக்கை ஆராய்ந்த மேல்நீதிமன்ற நீதிபதி சி.சதீஸ்தரன் இடைக்கால நிவாரணம் எவையும் வழங்க முடியாது எனவும் வழக்கு விசாரணை எதிர்வரும் ஒக்டோபர் மாதம் இரண்டாம் திகதி இடம்பெறுமென வழக்கிற்கு திகதியிட்டு ஒத்தி வைத்தார்.

# சட்டப்படியான பதிவுகள் எதுவுமின்றி இயங்கும் யாழ் அரச அதிபரின் மகனது உணவகம் தொடர்பில் மாநகரசபை நடவடிக்கை எடுக்கவில்லை என ஜனாதிபதிடம் முறையிடப்பட்டுள்ளது

யாழ். பல்கலைக் கழக வீதியில் யாழ்ப்பாண மாவட்ட அரச அதிபரின் மகனால் சட்டத்திற்கு உட்பட்ட பதிவுகள் எவையும் இன்றி இயங்கும் உணவகம். தொடர்பில் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவில்லை என ஜனாதிபதி செயலகத்தில் முறையிடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகம் அமைந்துள்ள இராமநாதன் வீதியில் பல்கலைக் கழக மாணவிகளின் தங்கு விடுதிக்கு எதிர் திசையில் சட்டத்திற்கு முரணாக அமைக்கப்பட்ட கட்டிடத்தில் எந்த விதமான அனுமதிகளும் இன்று உணவகம் ஒன்று மாவட்ட அரச அதிபரின் மகனால. நடாத்தப்படுவதாகவும் இக் கட்டிடம் யாழ்ப்பாண மாநகர சபை எல்லைப் பரப்பிற்குள் அமையப்பட்டுள்ளது.

இவ்வாறு நடத்தப்படும் சட்ட விரோத உணவகத்திற்கு எதிராக மாநகர சபையோ அல்லது உறுப்பினர்களோ நடவடிக்கை எடுக்க முன் வரவில்லை எனவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளதுடன் இது மாவட்ட அரச அதிபர் என்பதனால் பக்கச் சார்பாக நடாப்பதாகவும் சுட்டிக் காட்டியே முறையிடப்பட்ட முறைப்பாட்டிற்கு அமைய குறித்த விடயத்தை உடன் ஆராய்ந்து உரிய நடவடிக்கை எடுப்பதோடு அது தொடர்பில் தமக்கும். அறியத் தருமாறு ஜனாதிபதி செயலகம் மாகாண அதிகாரிகளிற்கு எழுத்தில் அறிவித்துள்ளது.

# மன்னார் மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்கள உதவிப் பணிப்பாளராக ஜெ.சுதாகரன் நியமிக்கப்பட்டுள்ளார்

இதுவரை நாளும் முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்கள உதவிப் பணிப்பாளராக பணியாற்றியபோது இன்று முதல் அமுலாகும் வகையில் இந்த நியமனம் கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்கள பணிப்பாளர் நாயகத்தால் வழங்கப்பட்டுள்ளது.

தற்போது மன்னார் மாவட்ட உதவிப் பணிப்பாளராக நியமிக்கப்பட்ட ஜெ.சுதாகரன் நீண்ட காலம் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு போன்ற மாவட்டங்களில் பணியாற்றிய அனுபவம்கொண்டவர்.

இதேநேரம் தற்போதைய மன்னார் மாவட்ட உதவிப் பணிப்பாளர் கொழும்பிற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

# இராணுவத்தினரால் கைதாகி படுகொலை செய்யப்பட்ட மாணவி கிருஷாந்தியின் நினைவேந்தல் செம்மணி பகுதியில் எதிர்வரும் செப். 07 அன்று நடைபெறவுள்ளது



Krishanthy Kumaraswamy

நினைவேந்தல் தொடர்பாக தெளிவுபடுத்தும் ஊடக சந்திப்பு யாழ் ஊடக அமையத்தில் 03-09-2026 அன்று இடம்பெற்றபோதே நினைவேந்தல் குழு இதனை தெரிவித்தது.

மேலும் தெரிவிக்கையில், கிருசாந்தியினுடைய நினைவேந்தல் செப்டம்பர் 7 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு ஆரம்பமாகும். அந்த நிகழ்வில் மலரஞ்சலி இடம்பெற்று, முக்கிய அரசியல் தரப்பினுடைய, ஆய்வாளர்களுடைய கருத்துக்களும், கவிதை நிகழ்ச்சிகளும், நாடக நிகழ்வுகளும் இடம்பெற இருக்கின்றன.

இந்த நிகழ்வுகளைத் தொடர்ந்து, அரியாலையின் ஏனைய பகுதிகளிலும் யாழ் குடாநாட்டிலும் வடக்கு கிழக்கிலும் இருக்கின்ற மனிதப் புதைகுழிகளை அடையாளப்படுத்தி, அவற்றை அகழ்ந்தெடுப்பதற்கான நடைமுறைகளை உருவாக்குவதற்கான ஒரு பொதுக் கட்டமைப்பை உருவாக்குவதற்காக நாங்கள் தீர்மானித்துள்ளோம்.

எதிர்வரும் நாட்களில் இதனுடன் தொடர்புடைய ஒவ்வொரு அமைப்பையும் உத்தியோகபூர்வமாக அழைத்து நாங்கள் சந்திப்புகளை ஏற்படுத்தி, 45 நாட்களுக்குள் இந்த பொது கட்டமைப்பை உருவாக்கி, அதன் ஊடாகவே இந்த மனிதப் புதைகுழிக்கான பொதுக் கொள்கையும், பொதுவான செயற்பாடும், சட்டரீதியான செயற்பாடும் முன்னெடுக்கப்படும் என்பதனை தெரிவித்துக் கொள்கின்றோம்.

அந்த வகையில் நினைவேந்தலிற்கு அனைத்துத் தமிழ் இன உணர்வாளர்கள் அனைவரும் திரண்டு, பாடசாலை மாணவி கிருஷாந்தியை மட்டுமல்ல, அந்த மண்ணில் இனப்படுகொலை செய்யப்பட்டு எமது இனத்தை அழித்த செயல்பாடுகளைக் கண்டித்து எழுச்சிகொள்ளும் வகையில் அனைவரும் மனப்பூர்வமாக அந்த ஆதரவினை வழங்கி, இந்நிகழ்வை ஒரு எழுச்சி நிகழ்வாக நடத்த ஒத்துழைக்குமாறு கேட்டு நிற்கின்றோம் - என்றனர்.

கனடிய செய்திகள் Canadian News

# கனடா கலைக்கோவில் நுண் கலைக்கூடத்தின் 100வது அரங்கேற்றம் நுண் கலைக் கொண்டாட்டமாக விளங்கியது





அன்றைய அரங்கேற்றத்தின் பிரதம விருந்தினராக கலைமாமணி டாக்டர் திருவாரூர் பக்தவத்சலம் அவர்களும் சிறப்பு விருந்தினராக மிருதங்க கலாநிதி திருச்சி சங்கரன் அவர்களும் அழைக்கப்பெற்றிருந்தனர். மற்றுமொரு சிறப்பு விருந்தினராக "இன்னிசை வேந்தர்" பொன் சுந்தரலிங்கம் அவர்களும் அங்கு கலந்து கொண்டார்.

கனடாவின் ஒன்ராரியோ மாகாணத்தில் நீண்ட காலமாக இயங்கிவரும் கலைக்கோவில் நுண் கலைக்கூடம் தனது 100வது அரங்கேற்றத்தை செல்வன் அகரன் குகேந்திரன் அவர்களது மிருதங்க அரங்கேற்றமாக சமர்ப்பணம் செய்தது.

கடந்த 23-08-2026 அன்று ஸ்காபுறோ சீனக் கலாச்சார மண்டபத்தில் நடைபெற்ற இந்த அரங்கேற்றம் சில கலாபூர்வமானதும் தொடர்ச்சியானதுமான சமர்ப்பணங்களைக் கொண்டதாக அமைக்கப்பெற்று இறுதியில் அன்றைய அரங்கேற்றம் "நுண்கலைகளின் கொண்டாட்டமாக" நிறைவு பெற்றது எனலாம்.



கனடா கலைக்கோவில் நுண் கலைக்கூடத்தில் பரதநாட்டியம், மிருதங்கம் போன்ற நுண்கலைகள் கற்பிக்கப்படுகின்றன.



மிருங்க வகுப்புகளை குகேந்திரன் கனகேந்திரன் அவர்களும் பரதநாட்டிய வகுப்புக்களை அவரது துணைவியார் வனிதா குகேந்திரன் அவர்களும் கற்பித்து வருகின்றனர். 2021ம் ஆண்டு நிறுவப்பெற்ற இந்த கலைக்கூடம் சமர்ப்பணம் செய்த பரதநாட்டியம் மற்றும் மிருதங்கம் ஆகிய துறைகளில் பயிற்சிபெற்ற இளங்கலைஞர்களின் அரங்கேற்ற வரிசையில் அகரன் குகேந்திரன் அவர்களது மிருதங்க அரங்கேற்றமானது 100வது என்ற சிறந்த அடையாளத்தை தனதாக்கிக் கொண்டது.

அகரனின் அன்றைய அரங்கேற்றத்திற்கு பக்கவாத்தியக் கலைஞர்களாக சிறப்புக்குரிய கலைஞர்கள் அமர்த்தப்பெற்றிருந்தனர்.


வாய்ப்பாட்டுக் கலைஞராக தமிழகத்திலிருந்து வித்துவான் பரத் சுந்தர் அவர்களும் கடம் இசைக்கும் கலைஞராக வித்துவான் சந்திரசேகர சர்மா அவர்களும் வயலின் கலைஞராக வித்துவான் மயூரன் கிரிதரன் அவர்களும் தம்புரா இசைக்கும் கலைஞராக வித்துவான் ஆகாஸ் கதிர்காமன் அவர்களும் மேடையை அலங்கரித்தார்கள். அத்துடன் தங்கள் அனுபவம் மற்றும் துறைசார் வல்லமை ஆகியவற்றால் இளையவரான அகரனுக்கு பக்கபலமாக இருந்து. அரங்கேற்றத்தையும் படிப்படியாக "உயரத்திற்கு" எடுத்துச் சென்றார்கள்.

அரங்கேற்றத்தை தொகுத்து வழங்கும் பணியை மிகவும் கச்சிதமாக ரமணன் சந்திரசேகரமூர்த்தி அவர்கள் தொகுத்து வழங்கினார்.

அன்றைய தினம் அதே மேடையில் 100வது அரங்கேற்றம் என்பதற்கு அடையாளமாக 100 நடன மணிகள் பங்கெடுத்த பரதநாட்டியமும் இடம்பெற்றது. இதன் மூலம் பார்வையாளர் பாலுக்குள் தேன் கலந்து அருந்தியது போன்ற கலைச் சுவையை அனுபவித்தார்கள் என்றால் மிகையாகாது.

*- சத்தியன்*



# "செம்மணி கொடுமை தொடர்பான 'விழித்தெழு' என்ற எழுச்சி நிகழ்வை எமது நிறுவனம் நடத்துவது மக்கள் மத்தியில் எமது பங்களிப்பை வழங்குவதற்காகவே!"

## 'பிகைன்ட் மீ அறக்கட்டளை' ஏற்பாட்டில் நடைபெற்ற 'விழித்தெழு' நிகழ்வில் அறக்கட்டளையின் நிறுவனர் கனேந்திரன் செல்வராஜா தெரிவிப்பு













எமது தாயகத்தில் இடம்பெற்ற அரச பயங்கரவாதம் மற்றும் இனப் படுகொலை ஆகியவற்றிக்கான சாட்சியங்களாகவும் வலிகளின் அடையாளமாகவும் உள்ள புதைகுழிகள் மற்றும் ”செம்மணியிலிருந்து அகழ்ந்தெடுக்கப்படும் எம் உறவுகளின் எலும்புக்கூடுகள் ஆகியவை எமக்கு இழைக்கப்பெற்ற கொடுமைகளின் எல்லையைத் தொட்ட சான்றுகள் ஆகும். எனவே இவை தொடர்பான எமது பங்களிப்பை வழங்குவதற்காகவும் மக்கள் மத்தியில் விழிப்புணர்வைக் கொண்டு வரவேண்டும் என்ற நோக்குடனும் எமது மக்கள் இந்தக் கொடுமைகளை மறந்துவிடாமல் தொடர்ச்சியாக போராடவுமே “விழித்தெழு“ என்ற எழுச்சி நிகழ்வை எமது நிறுவனம் நடத்திவருகின்றது. அத்துடன் மக்கள் மத்தியில் எமது பங்களிப்பை வழங்குவதற்காகவும் ஆகும். அதற்கப்பால் எமக்கு வேறு நோக்கம் எதுவும் இல்லை. எமது நிறுவனத்தின் பெயரை விளம்பரப்படுத்தவோ அன்றி ஏனைய சிலரைப் போன்று நிதியைச் சேகரிக்கவோ அல்ல என்ற விடயத்தை இந்த இடத்தில் பகிர விரும்புகின்றேன்” இவ்வாறு “பிகைன்ட் மீ அறக்கட்டளை“ ஏற்பாட்டில் கடந்த 30ம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஸ்காபுறோ நகரசபையின் திறந்த வெளி அரங்கில் நடைபெற்ற செம்மணி புதைகுழிகள் தொடர்பான “விழித்தெழு“ நிகழ்வில் முக்கிய உரையாற்றிய “பிகைன்ட் மீ“ ஊடகம் மற்றும் அறக்கட்டளையின் நிறுவனர் கனேந்திரன் செல்வராஜா தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் நகரசபை உறுப்பினர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள். பல்வேறு அமைப்புக்களின் பிரதிநிதிகள் என நூற்றுக்கணக்கான மக்கள் அங்கு திரண்டு வந்திருந்தனர். அவர்கள் மத்தியில் தொடர்ந்து உரையாற்றிய கனேந்திரன் செல்வராஜா அவர்கள் ” எமது விடுதலைப் போராட்டத்திற்கு பக்கபலமாகவும் அணையாகவும் விளங்கிய பொதுமக்களில் இலட்சக்கணக்கானவர்கள் அரச பயங்கரவாதத்திற்கு இரையாகிப் போனார்கள். அவர்களில் ஆண்கள், பெண்கள், கற்றவர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள், தொழிலாளர்கள். விவசாயிகள். சிறுவர்கள் என அனைத்து தரப்பினரும் அடங்குவார்கள். எவராலும் ஏற்றுக்கொள்ளப்பட முடியாத இந்த அநியாயங்களை சொல்லுவதற்கு ஊடகங்களின் பங்கு முக்கியமானதாக விளங்குகின்றது. அதனால் தான் எமது “பிகைன்ட் மீ“ ஊடகம் மற்றும் அறக்கட்டளை இந்த அவசீயமான பொறுப்பை ஏற்றுள்ளது” என்றார். அன்றைய தினம் அந்த திறந்த வெளி அரங்கில் செம்மணி புதைகுழிகள் போன்ற மாதிரி மயானம் அமைக்கப்பெற்று மக்கள் உருகும் வகையில் காட்சிப் படுத்தப்பட்டது. அத்துடன் செம்மணிக் கொடுமைகளையும் கிரிசாந்தி குமாரசாமி போன்ற மாணவ மாணவிகள் கொலை செய்யப்பட்ட கொடுமையான காட்சிகளையும் மக்களுக்கு ஞாபகப்படுத்தும் நாடகம் ஒன்றும் மேடையில் அரங்கேறியது. அத்துடன் ஆரோசை“ இசைக்குழுவினர் வழங்கிய விடுதலைப் பாடல்கள் நிகழ்ச்சியும் உணர்வுகளைத் தூண்டும் வகையில் அரங்கேறியது.

# Candidate for the Scarborough North Ward (23) Hon Dong's Campaign Ofice Opening Ceremony was very Graceful!

## றொறன்ரோ நகரசபையின் 23ம் வட்டார வேட்பாளர்களில் ஒருவரான ஹொன் டொங் (Hon Dong) அவர்களின் பிரச்சார அலுவலக திறப்பு விழா!









பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் நகரசபை உறுப்பினர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள். பல்வேறு அமைப்புக்களின் பிரதிநிதிகள் என நூற்றுக்கணக்கான மக்கள் அங்கு திரண்டு வந்திருந்தனர். அவர்கள் மத்தியில் தொடர்ந்து உரையாற்றிய கனேந்திரன் செல்வராஜா அவர்கள் “எமது விடுதலைப் போராட்டத்திற்கு பக்கபலமாகவும் அணையாகவும் விளங்கிய பொதுமக்களில் இலட்சக்கணக்கானவர்கள் அரச பயங்கரவாதத்திற்கு இரையாகிப் போனார்கள். அவர்களில் ஆண்கள், பெண்கள், கற்றவர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள், தொழிலாளர்கள். விவசாயிகள். சிறுவர்கள் என அனைத்து தரப்பினரும் அடங்குவார்கள். எவராலும் ஏற்றுக்கொள்ளப்பட முடியாத இந்த அநியாயங்களை சொல்லுவதற்கு ஊடகங்களின் பங்கு முக்கியமானதாக விளங்குகின்றது. அதனால் தான் எமது “பிகைன்ட் மீ“ ஊடகம் மற்றும் அறக்கட்டளை இந்த அவசீயமான பொறுப்பை ஏற்றுள்ளது” என்றார். அன்றைய தினம் அந்த திறந்த வெளி அரங்கில் செம்மணி புதைகுழிகள் போன்ற மாதிரி மயானம் அமைக்கப்பெற்று மக்கள் உருகும் வகையில் காட்சிப் படுத்தப்பட்டது. அத்துடன் செம்மணிக் கொடுமைகளையும் கிரிசாந்தி குமாரசாமி போன்ற மாணவ மாணவிகள் கொலை செய்யப்பட்ட கொடுமையான காட்சிகளையும் மக்களுக்கு ஞாபகப்படுத்தும் நாடகம் ஒன்றும் மேடையில் அரங்கேறியது. அத்துடன் ஆரோசை“ இசைக்குழுவினர் வழங்கிய விடுதலைப் பாடல்கள் நிகழ்ச்சியும் உணர்வுகளைத் தூண்டும் வகையில் அரங்கேறியது.


TITLE SPONSOR
Muhurtham Jewels
tamil one TV HD
Reflection of Canadian Tamils
SV MEDIA
AV & EVENT MANAGEMENT
POWERED BY
EXPRESS CARE SCARBOROUGH
CO PRESENTED BY
WOW! WING HOUSE
THE LAST OUTDOOR
SUMMER EVENT
OF THE YEAR IS HERE!
MEGA BLAST 2026
CELEBRATING SOUTH ASIAN TASTE & CULTURE
Susanthica Jay
SA RE GA MA PA TITLE WINNER
Pavithra
SA RE GA MA PA FINALIST
LIVE AT
Z தமிழ்
The talented finalist of Zee Tamil's
Sa Re Ga Ma Pa
Seniors Season 5
Sreehari
SA RE GA MA PA FINALIST
Chinnu Senthamilan
SA RE GA MA PA FINALIST
PRAKASH
KEYBOARD
ELMO RAJAH
KEYBOARD
EDWIN
OCTAPAD
JACOB
GUITAR
BAVAN RAJKUMAR
TABLA
SURESH MAGESAN
DRUMMER
MAHTHESH SIVANENTHIRAN
MIRTHANGAM
ANAND
GUITAR
5 SEPTEMBER SATURDAY 1 PM - 11 PM
6 SEPTEMBER SUNDAY 1 PM - 10 PM
ON SHEPPARD
DEAN PARK TO MEADOWVALE
FREE ENTRY
SPONSORS
AERO COURIER
Fast & Secure World Wide Service
AKSYAS FASHION
Gunaams Super Market
Mega Financial Group
NP MORTGAGES
winsmart
Formula Honda
EYE தமிழ்
AAROSAI
VTV
MURASU
COMMUNITY PARTNERS
தமிழ்ச் சமூக மையம்
Tamil Community Centre
PRINTING PARTNER
INK DRIP
SECURITY PARTNER
CLEANING PARTNER
GME
GREEN MAPLES ENVIRONMENTAL




# அநுர அரசிலும் தொடரும் உள்ளே...வெளியே...அரசியல்

***“இலஞ்ச, ஊழல் மோசடிக் குற்றச்சாட்டுக்களில் எதிர்க்கட்சிகளின் முக்கிய அரசியல்வாதிகள் அடுத்தடுத்துக் கைது செய்யப்படும் செய்திகள் தலைப்புச் செய்திகளாகி மக்கள் மத்தியில் ஒருவித எதிர்பார்ப்பை, பரபரப்பை ஏற்படுத்துகின்ற நிலையில் அடுத்த மணித்தியாலமே கைது செய்யப்பட்டவர்கள் நீதிமன்றப் பிணையில் விடுவிக்கப்படுவது “இது சட்டத்தின் பலவீனமா அல்லது அநுர அரசின் மக்களை ஏமாற்றும் அரசியல் நாடகமா?” என்ற கேள்விகளையே எழுப்புகின்றது.”***

------------------------------------------------------------ **கே.பாலா -**

**ஒ**ரு பிரதான கட்சி ஆட்சியில் இருக்கும் போது அதற்கு அடுத்ததான பிரதான கட்சி எதிர்க்கட்சியாக இருக்கும். அத்துடன் அடுத்தடுத்த நிலைகளில் உள்ள கட்சிகள் சில அரசின் பங்காளிகளாகவும் இன்னும் சில சிறிய எதிர்க்கட்சிகளாகவும் இருக்கும். இவ்வாறான நிலையில் எதிர்க்கட்சிகளாக இருப்போர் அதிலும் பிரதான எதிர்க்கட்சியாக இருப்போர் அரசின் மீது பல்வேறு குற்றச்சாட்டுக்களை முன்வைப்பர். அதில் பிரதானமானது “அரசியல் பழிவாங்கல்” என்ற குற்றச்சாட்டு. அதேவேளை இதே எதிர்க்கட்சியினர் ஆட்சிபீடமேறும்போது அரசாக இருந்தவர்கள் பிரதான எதிர்க்கட்சியானவுடன் அவர்கள் நடைமுறை அரசு மீது வைக்கும் பிரதான குற்றச்சாட்டும் இந்த “அரசியல் பழிவாங்கல்” தான்.

அரசாக இருப்போர் எதிர்க்கட்சியில் தமக்கு சவாலாக இருப்போர், தம்மை கடுமையாக விமர்சிப்போரை இலக்கு வைத்து ஏதாவது குற்றச்சாட்டுக்களில் வழக்குகளைத் தாக்கல் செய்வதும் அதிகாரத்தைப்பயன்படுத்தி அவர்களை சிறைகளுக்குள் தள்ளுவதும் எதிர்க்கட்சியினர் இதனைப் பிரசாரமாக்கி அடுத்த தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சிபீடம் ஏறியவுடன் தாமும் அதே வழியில் பயணிப்பதும் இலங்கை அரசியலில் எழுதப்படாத விதியாக அல்லது இதுதான் இலங்கை அரசியல் என்ற வகையில் மாறி மாறி வரும் அரசுகளினால் மாறாமல் முன்னெடுக்கப்படுகின்ற இந்த “உள்ளே... வெளியே...” அரசியல் விளையாட்டையே தற்போதைய ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் அரசாங்கமும் முன்னெடுக்கத் தொடங்கியுள்ளது.

மைத்திரி - ரணில் அரசு நல்லாட்சி என்ற பெயரில் கொடுங்கோல் ஆட்சி புரிந்து கடந்த ஆட்சியாளர்களான தங்கள் மீது அரசியல் பழிவாங்கல்களில் ஈடுபடுவதாகக் கூறியும் இன ,மதவாதங்களை பிரசார ஆயுதங்களாக்கியும் 2019 ஆம் ஆண்டு ஜனாதிபதித்தேர்தலில் வெற்றிபெற்று 18 நவம்பர் 2019 இல் ஆட்சிபீடம் ஏறிய கோத்தபாய ராஜபக்ச தலைமையிலான பொதுஜன பெரமுன அரசாங்கமும் மைத்திரி - ரணில் அரசாங்கத்தில் இருந்தவர்களை சிறைகளுக்குள்ளே தள்ளிக்கொண்டு மைத்திரி - ரணில் அரசாங்கத்தால் உள்ளே தள்ளப்பட்ட தம்மவர்களை ஊழல் மோசடிக் குற்றச்சாட்டு வழக்குகளிலிருந்து வெளியே கொண்டு வந்தது.

இவ்வாறாக கோத்தபாய ராஜபக்ச அரசாங்கத்தினால் சிறைகளிலிருந்து வெளியே கொண்டுவரப்பட்ட மஹிந்த அரசாங்கத்தில் அமைச்சர்களாகவிருந்த, பிரியங்கர ஜயரட்ன, மஹிந்தானந்த அளுத்கமகே, இராஜாங்க அமைச்சராகவிருந்த சிவனேசத்துரை சந்திரகாந்தன் வடமத்திய மாகாண முதலமைச்சராகவிருந்த எஸ்.எம். ரஞ்சித், மைத்ரி - ரணில் அரசாங்கத்தில் அமைச்சராகவிருந்த நளின் பெர்னாண்டோ ஆகியோர் தற்போதைய அநுரகுமார அரசாங்கத்தில் மீண்டும் கைதாகி குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டு சிறைகளில் உள்ளனர்.

“கடந்த காலங்களில் நாட்டைக் சூறையாடிய அரசியல்வாதிகளைத் கூண்டில் ஏற்றுவோம். கடந்த கால ஊழல்கள் களையப்படும், குற்றவாளிகள் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள்.” என்ற வாக்குறுதிதான் அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான ஜே.வி.பி. - தேசிய மக்கள் சக்தியின் வாக்குப்பெட்டிகளை நிரப்பிக் கொடுத்து அரசாங்கம் அமைக்க உதவியது. இவ்வாறாக ஆட்சிப் பொறுப்பேற்றதும் தமது பிரதான வாக்குறுதியை நிறைவேற்றுவது போன்றே, முன்னாள் ஜனாதிபதி, எதிர்க்கட்சிகளின் மூத்த தலைவர்கள், முன்னாள் அமைச்சர்கள் அநுரகுமார அரசாங்கத்தினால் கைது செய்யப்படத் தொடங்கினர்.

எதிர்க்கட்சிகளின் முக்கிய அரசியல்வாதிகள் அடுத்தடுத்துக் கைது செய்யப்படும் செய்திகள் தலைப்புச் செய்திகளாகி மக்கள் மத்தியில் ஒருவித எதிர்பார்ப்பை, பரபரப்பை ஏற்படுத்தியபோதும் அந்தப் பரபரப்பின் சூடு தணிவதற்குள்ளேயே, கைது செய்யப்பட்டவர்கள் சில மணி நேரங்களிலேயே நீதிமன்றப் பிணையில் கம்பீரமாக வெளியேறும் காட்சிகள், “இது சட்டத்தின் பலவீனமா அல்லது ஊடகங்களுக்கான அரசியல் நாடகமா?” முன்னைய அரசாங்கங்களின் உள்ளே - வெளியே விளையாட்டை அநுரகுமார அரசாங்கமும் கையில் எடுத்துள்ளதா என்ற கேள்விகளை இயல்பாகவே எழுப்பியுள்ளது.

இலஞ்ச, ஊழல் மோசடிக் குற்றச்சாட்டுக்களில் எதிர்க்கட்சிகளின் அரசியல்வாதிகள் விசாரணைகளுக்கு அழைக்கப்பட்டு கைதாவதும் கைதாகி அடுத்த சில நிமிடங்களில் பிணை உத்தரவோடு கைகாட்டிச் செல்லும் நிலை தொடர்வதால் இலங்கை அரசியல் களம் ஒரு “உள்ளே வெளியே” விளையாட்டு மைதானமாக மாறியிருக்கிறது. ஒருபுறம் அரசாங்கம் தனது வாக்குறுதியை நிறைவேற்றுவதாகக் காட்டிக்கொள்ள மேற்கொள்ளும் அவசரக் கைதுகள், மறுபுறம் போதிய சட்ட ஆதாரங்களின்றித் தொடரப்படும் வழக்குகளால் நீதிமன்றங்களில் அது பலவீனமடையும் நிலை. இவற்றுக்கு இடையே உண்மையான ஊழல் எதிர்ப்பு நடவடிக்கை ஊசலாடுகிறதா அல்லது இது எதிர்த்தரப்பை அச்சுறுத்தி, மக்களின் கவனத்தைத் திசைதிருப்ப அரங்கேற்றப்படும் அரசியல் விளையாட்டா என்ற கேள்விகளும் பலமாக எழுந்துள்ளன.

அநுரகுமார திஸாநாயக்க அரசாங்கத்தின் ஊழல் ஒழிப்பு நடவடிக்கைகளின் கீழ் இதுவரைக்கும் முன்னாள் ஜனாதிபதி, முன்னாள் அமைச்சர்கள், எம்.பி.க்கள், உயர் அதிகாரிகள் எனப் பலர் கைது செய்யப்பட்டுள்ளனர். ஆனால் இவர்களில் பலர் பிணைகளில் வெளியில் சுதந்திரமாக நடமாடுகின்றனர். அந்த வகையில் ஐக்கியதேசியக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான ரணில் விக்கிரமசிங்க 2023 செப்டம்பரில் பிரித்தானியாவிற்கு மேற்கொண்ட தனிப்பட்ட பயணத்திற்காக 16.6 மில்லியன் அரச நிதியை முறைகேடாகப் பயன்படுத்திய குற்றச்சாட்டில் கைதாகி ஒரு சில தினங்கள் சிறையிலடைக்கப்பட்ட பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.


அதேபோன்று முன்னாள் நிதி அமைச்சரும் தற்போதைய எம்.பி.யுமான ரவி கருணாநாயக்க தேசிய அபிவிருத்தி லொத்தர் சபையின் நிதியை தனது தனிப்பட்ட ஊழியர்களுக்கு சம்பளமாக வழங்கிய குற்றச்சாட்டில் கைதாகி அடுத்த மணித்தியாலமே பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல போலி மருந்து இறக்குமதி ஊழல் மற்றும் வரலாற்று சிறப்புமிக்க புனித கல் திருட்டுக்கு உதவிய குற்றச்சாட்டுக்களில் கைதாவதும் பிணையில் விடுவிக்கப்படுவதுமாக உள்ளார். முன்னாள்பிரதி அமைச்சர் பிரசன்ன ரணவீர கிரிபத்கொடையில் பொதுத் தேவைக்காக ஒதுக்கப்பட்ட அரச காணியை சட்டவிரோதமாக விற்பனை செய்தமை தொடர்பான குற்றச்சாட்டில் விளக்கமறியலில் உள்ளார்.

முன்னாள் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே 2021 இல் தரமற்ற சீன சேதனப் பசளை இறக்குமதி செய்து அரச நிதியை மோசடி செய்த குற்றச் சாட்டில் 20 ஆண்டுகள் கடுங்காவல் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். அதேபோன்று முன்னாள் வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ முன்னாள் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகேவுடன் இணைந்து அரச நிதியை முறைகேடாகப் பயன்படுத்தி தேர்தல் பிரசாரப் பொருட்களுக்கு செலவிட்ட குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டு 25 ஆண்டுகள் சிறைத்தண்டனை வழங்கப்பட்டுள்ளது. வடமத்திய மாகாண முன்னாள் முதலமைச்சர் எஸ்.எம். ரஞ்சித் முதலமைச்சராக இருந்தபோது தனது தனி செயலாளருக்கு சட்டவிரோதமாக 2.68 மில்லியன் ரூபா அரச எரிபொருள் கொடுப்பனவு வழங்கிய குற்றச்சாட்டில் 16 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. முன்னாள் அமைச்சர் பிரியங்கர ஜயரத்ன தனது அரசியல் ஆதரவாளர்களுக்கு உணவு வழங்குவதற்காக “ஸ்ரீலங்கன் கேட்டரிங்“ நிறுவனத்திற்குச் சொந்தமான 330,000 ரூபா பணத்தைப் பயன்படுத்தி அரசாங்கத்திற்கு நஷ்டம் ஏற்படுத்திய குற்றச்சாட்டில் 7 ஆண்டுகள் கடுங்காவல் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் அமைச்சர் சாமர சம்பத் தஸ நாயக்க ஊவா மாகாண சபையின் 23 மில்லியன் ரூபா நிதியை முறைகேடாகப் பயன்படுத்திய குற்றச்சாட்டில் கைதாகி பிணையில் விடுவிக்கப் பட்டுள்ளார். முன்னாள் பிரதி அமைச்சர் சரண குணவர்தன தேசிய அபிவிருத்தி லொத்தர் சபையின் தலைவராக இருந்தபோது வாகனங்களை வாடகைக்கு எடுத்ததில் இடம்பெற்ற முறைகேடுகள் நிரூபிக்கப்பட்டு 16 ஆண்டுகள் கடுங்காவல் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் வர்த்தக அனுமதிப்பத்திரம் வழங்குவதற்காக 1.5 மில்லியன் ரூபா இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் கைதாகி பிணையில் விடுவிக்கப்பட்ட நிலையில் வெளிநாட்டுக்கு தப்பிச்சென்று விட்டார். முன்னாள் இராஜாங்க அமைச்சர் சிவனேசத்துரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) ஆட்கடத்தல் மற்றும் காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்கள் தொடர்பான குற்றச்சாட்டுகளில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா கல்கிஸை பகுதியில் அமைந்துள்ள காணி தொடர்பான மோசடி, அச்சுறுத்தல் குற்றச்சாட்டுகளுக்காக கைது செய்யப்பட்டு பின்னர் பிணை வழங்கப்பட்டது.

முன்னாள் அமைச்சர் துமிந்த திஸாநாயக்க சட்டவிரோத ஆயுதம் வைத்திருந்ததாகக் கைது செய்யப்பட்டு, போதிய நேரடி ஆதாரங்கள் இன்மையால் நீதிமன்றத்தால் வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்டார். முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் இரண்டாவது மகன் யோசித ராஜபக்ச 2006 ஆம் ஆண்டு தகுதியற்ற முறையில் சட்டவிரோதமாக கடற்படையில் இணைந்தது மற்றும் பிரித்தானியாவின் டார்ட்மவுத் அரச கடற்படை அகடமியில் பயிற்சி பெறுவதற்காக 22 மில்லியனுக்கும் அதிகமான அரச நிதியை துஃபிரயோகம் செய்தமை. சட்டவிரோத காணி விற்பனை போன்ற குற்றச் சாட்டுக்களில் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். அவரது பாட்டியும் சட்டவிரோத காணி கொள்வனவு, விற்பனை தொடர்பில் கைதாகி பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.





தேசிய அபிவிருத்தி லொத்தர் சபையின் தலைவராக இருந்த ஷியாமிலா பெரேரா விதிகளை மீறி 3 பேருக்கு வேலை வழங்கி, அவர்களை ரவி கருணாநாயக்கவின் தனிப்பட்ட பணிகளுக்குப் பயன்படுத்திய குற்றச்சாட்டில் கைதாகி பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார் முன்னாள் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்லவின் மகன் ரமித் ரம்புக்வெல்ல போலி தடுப்பூசி இறக்குமதி ஊழல் தொடர்பில் சட்டவிரோதப் பணப் பரிவர்த்தனை மற்றும் சொத்துக் குவிப்பு குற்றச்சாட்டில் கைதாகி பிணையில் வெளியில் உள்ளார்.

***(தொடர்ச்சி 22 பக்கம்)***

சினிமா நியூஸ்

# அமீர் நடிக்கும் "ஹமாகாளி" படத்தின் பதாகையை மாரி செல்வராஜ் வெளியிட்டார்



அமீர் நடிக்கும் "ஹமாகாளி" படத்தின் பதாகையை மாரி செல்வராஜ் வெளியிட்டார். பரியேறும் பெருமாள், "கர்ணன்", "மாமன்னன்", "வாழை", "பைசன் காளமாடன்" உள்ளிட்ட படங்களின் மூலம் தமிழ் சினிமாவில் தனக்கென ஒரு தனி அடையாளத்தை உருவாக்கியவர் இயக்குநர் மாரி செல்வராஜ். தற்போது தனது அடுத்த படைப்பான "மஞ்சணத்தி" படத்தை இயக்கி வருகிறார். இந்த நிலையில், மாரி செல்வராஜ் தனது மனைவி திவ்யா மாரி செல்வராஜுடன் இணைந்து நவ்வி ஸ்டுடியோஸ் நிறுவனத்தின் கீழ் புதிய படத்தை தயாரிக்கிறார். இப்படத்திற்கு "மாகாளி" என பெயரிடப்பட்டுள்ளது.

மாரி செல்வராஜின் "பரியேறும் பெருமாள்", "கர்ணன்", "மாமன்னன்" ஆகிய படங்களில் உதவி இயக்குநராகப் பணியாற்றிய எஸ்.பி.அரவிந்த், "மாகாளி" படத்தின் மூலம் இயக்குநராக அறிமுகமாகிறார். இப்படத்தில் இயக்குநரும் நடிகருமான அமீர் முதன்மைக் கதாபாத்திரத்தில் நடிக்கிறார். ஸ்வாசிகா மற்றும் அனிஷ்மா அனில்குமார் உள்ளிட்டோரும் முக்கிய கதாபாத்திரங்களில் நடிக்கின்றனர். "மாகாளி" படத்திற்கு ஜஸ்டின் பிரபாகரன் இசையமைக்கிறார். செல்வரத்தினம் பிரதீப் ஒளிப்பதிவு செய்கிறார். மனித வாழ்வின் வலி, எல்லைகள் மற்றும் ஆழமான சமூக அக்கறையை மையமாகக் கொண்ட அழுத்தமான கதைக்களத்தில் இப்படம் உருவாகி வருவதாக படக்குழு தெரிவித்துள்ளது. இந்த நிலையில், "மாகாளி" படத்தின் முதல் பார்வை பதாகையை மாரி செல்வராஜ் வெளியிட்டுள்ளார். மேலும், படத்தின் படப்பிடிப்பு பூஜையுடன் தொடங்கியுள்ளது. இதனால் "மாகாளி" திரைப்படம் குறித்த எதிர்பார்ப்பு ரசிகர்கள் மத்தியில் அதிகரித்துள்ளது.

# திரிஷா நடிக்கும் புதிய திரைப்படத்தின் படப்பிடிப்பு லண்டனில் ஆரம்பம்



ராஜா கிருஷ்ணா மேனன் இயக்கத்தில் திரிஷா நாயகியாக நடிக்கும் புதிய திரைப்படத்தின் படப்பிடிப்பு லண்டனில் தொடங்கியுள்ளது. நசீருதீன் ஷா நடித்த "பாரா ஆனா", அக்ஷய் குமாரின் "ஏர்லி.ஃப்ட்" மற்றும் சாய்.ஃப் அலி கான் நடித்த "செ.ஃப்" போன்ற படங்களை இயக்கிப் புகழ்பெற்ற பிரபல பாலிவுட் இயக்குநர் ராஜா கிருஷ்ணா மேனன் இத்திரைப்படத்தின் மூலம் தமிழ் திரையுலகில் இயக்குநராக அறிமுகமாகிறார்.

மேலும், இவர் சைக்கலாஜிக்கல் ஹாரர் பிரிவில் இயக்கும் முதல் படமும் இதுவேயாகும். இத்திரைப்படத்தின் பூஜை விழா அண்மையில் நடைபெற்று, முதற்கட்ட படப்பிடிப்பு பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. இப்படத்தின் பெரும்பகுதி படப்பிடிப்பு லண்டனில் நடைபெறவுள்ளது. திரிஷா, ராதிகா மற்றும் அபர்ணா பாலமுரளி என நடிப்புத் திறமை வாய்ந்த மூன்று முன்னணி நடிகைகள் முதன்மை வேடங்களில் ஒன்றிணைவது இத்திரைப்படத்தின் மீதான எதிர்பார்ப்பை ரசிகர்கள் மத்தியில் வெகுவாக உயர்த்தியுள்ளது. இந்த படம் குறித்து இயக்குநர் ராஜா கிருஷ்ண மேனன் பேசுகையில், "ஒருவர் என்னை எந்த ஜானரிலும் சிக்காத கதைகள் இயக்கும் இயக்குநர் என்று மிகவும் பொருத்தமாக குறிப்பிட்டார். அந்தப் பயணத்தின் மற்றுமொரு புதிய முயற்சிதான் இந்தப் படம். பல வகைகளில் இப்படம் எனக்கு முதல் அனுபவமாக அமைந்துள்ளது. இது என்னுடைய முதல் தமிழ் திரைப்படம். அதோடு த்ரிஷா, ராதிகா, அபர்ணா பாலமுரளி போன்ற அற்புதமான நடிகர்கள் மற்றும் திறமையான தொழில்நுட்பக் குழுவினருடன் பணியாற்றும் வாய்ப்பு கிடைத்திருப்பது என்னை மேலும் உற்சாகமாகியுள்ளது" என்றார்.

# 25 ஆண்டுக்குப் பின் இணைந்த பிரபுதேவா, ஏ.ஆர்.ரஹ்மான் கூட்டணியில் "மூன்வாக்"

25 ஆண்டுகளுக்குப் பின் பிரபுதேவா - ஏ.ஆர்.ரஹ்மான் கூட்டணியில் உருவாகியுள்ள "மூன்வாக்" படம் தீபாவளி 2026-ல் வெளியீடு ஆகிறது. ஏ.ஆர். ரஹ்மான் 5 பாடல்களை பாடி நடித்துள்ளார், யோகி பாபு 16 வேடங்களில் நடித்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. தமிழ் திரையுலகில் "காதலன்", "மின்சார கனவு", "லவ் பேர்ட்ஸ்", "மிஸ்டர் ரோமியோ" போன்ற பிளாக்பஸ்டர் படங்களுக்குப் பிறகு, 25 ஆண்டுகள் கழித்து நடனப்புயல் பிரபுதேவா மற்றும் இசைப்புயல் ஏ.ஆர்.ரஹ்மான் ஆகிய இருபெரும் ஆளுமைகள் மீண்டும் இணையும் "மூன்வாக்" திரைப்படத்தின் ரிலீஸ் தேதி அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. ரசிகர்களிடையே பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ள "மூன்வாக்" இத்திரைப்படம் 2026 தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு உலகம் முழுவதும் திரையரங்குகளில் வெளியாகவுள்ளது.



இத்திரைப்படம் ஒரு முழுமையான நகைச்சுவை, நடனம் மற்றும் குடும்பக் கொண்டாட்டப் படமாக உருவாக்கப்பட்டுள்ளது. பிரபல ஊடக நிறுவனமான பிகைண்ட்வுட்ஸ்-ன் நிறுவனரும் சிஇஓ-வுமான மனோஜ் என்.எஸ் இயக்குநராக அறிமுகமாகும் முதல் திரைப்படம் இதுவாகும். இந்தத் திரைப்படத்தின் மிக முக்கிய சிறப்பம்சமாக, ஏ.ஆர். ரஹ்மான் இசையமைப்பதோடு மட்டுமின்றி படத்தில் ஒரு முக்கிய கதாபாத்திரத்திலும் நடித்துள்ளார். இப்படத்தில் மொத்தம் 5 பாடல்கள் இடம் பெற்றுள்ளன. இந்த 5 பாடல்களையும் ஏ.ஆர்.ரஹ்மானே சொந்தக் குரலில் பாடியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. ஒவ்வொரு பாடலும் ஒரு குறிப்பிட்ட திருவிழா அல்லது கொண்டாட்டத்தை மையமாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே வெளியான "ஏது", "மக்கரீனா" மற்றும் "டிங்கா" ஆகிய பாடல்கள் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ள நிலையில், பிரபுதேவா மற்றும் ரஹ்மான் இணைந்து தோன்றும் அடுத்த பாடல் விரைவில் வெளியாகவுள்ளது.

இப்படத்தின் நகைச்சுவைக்கு வலு சேர்க்கும் வகையில் நடிகர் யோகி பாபு ஒரு புதிய சாதனையை செய்துள்ளார். இந்த படத்தில் அவர் 16 வித்தியாசமான கதாபாத்திரங்களில் நடித்துள்ளார்.

இதுகுறித்து ஆடியோ வெளியீட்டு விழாவில் பேசிய யோகி பாபு, "இயக்குநர் மனோஜ் கதை சொல்லும் போது எனக்கு ஒரே ஒரு கதாபாத்திரம் தான் இருக்கும் என்று நினைத்தேன், ஆனால் ஸ்கிரிப்டில் எனக்கு 16 வெவ்வேறு வேடங்கள் இருப்பதை அறிந்து வியப்படைந்தேன்" என்று தெரிவித்துள்ளார். பிரபுதேவா, யோகி பாபு ஆகியோருடன் அஜு வர்கீஸ், அர்ஜுன் அசோகன், சாட்ஸ், நிஷ்மா செங்கப்பா, சுஷ்மிதா நாயக், ரெடின் கிங்ஸ்லி, மொட்டை ராஜேந்திரன், லொள்ளு சபா சுவாமிநாதன், தீபா சங்கர் உள்ளிட்ட பெரும் நட்சத்திரப் பட்டாளமே இதில் இணைந்து நடித்துள்ளனர்.

மனோஜ் என்.எஸ், திவ்யா மனோஜ் மற்றும் பிரவீன் ஏலக் ஆகியோர் இணைந்து பிகைண்ட்வுட்ஸ் புரொடக்ஷன்ஸ் சார்பில் இப்படத்தைத் தயாரித்துள்ளனர். அனூப் வி ஷைலஜா ஒளிப்பதிவு செய்ய, ரேமண்ட் டெரிக் கிராஸ்டா படத்தொகுப்பு செய்துள்ளார். "மூன்வாக்" திரைப்படம் தமிழ், தெலுங்கு மற்றும் இந்தி ஆகிய மூன்று மொழிகளில் வெளியாகவுள்ளது.





Ontario - வில் அரசு அங்கீகாரம் பெற்ற
KANAGAAMBIKAI
Pawn Brokers
32
வருட சேவைகள்
கனகாம்பிகை
உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த வட்டி
வீதத்தில் தங்க நகை அடகு!
நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய
ஒரே கூரையின் கீழ்
உங்கள் தங்கத்திற்கு பணம் வாங்க கண்கம்பிகைக்கு வாங்க...
PAWNBANK INC.™
Your Satisfaction is Our Success
(Brimley & Eglinton)
2613, Eglinton Ave East,
Scarborough, ON M1K 2S2
416 269 7198
(Finch & MCCowan)
1571 Sandhurst Circle
Woodside Square Mall #159D,
Scarborough - M1V1V2
416 754 7198

இலங்கை செய்திகள்
Sri Lanka News



# வனஇலாகா என்பது எமது மக்களின் காணிகளைத் அபகரிக்கும் "திருட்டுக் கூட்டம்" என்கிறார் ரவிகரன் எம்.பி

வனவளத் திணைக்களம் என்பது மக்களின் காணிகளை அத்துமீறி அபகரிக்கின்ற ஒரு திருட்டுக்குழுவென வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் கடுமையாகச் சாடியுள்ளார்.

அத்தோடு வனவளத்திணைக்களத்தின் அத்துமீறிய அடாவடிச் செயற்பாடுகளுக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டுமென அபிவிருத்திக்குழுத்தலைவரும் பிரதி அமைச்சருமான உபாலி சமரசிங்கவிடம் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் வலியுறுத்தியுள்ளார்.

வவுனியா - செட்டிகுளம் பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் 03.09.2026அன்று இடம்பெற்றது. இக்கூட்டத்தில் வனவளத்தின் அபகரிப்பிலுள்ள காணிவிடுவிப்புத்தொடர்பில் பேசப்படும்போதே நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன-ால் மேற்கண்டவாறு கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், குறிப்பாக தொல்லியல்திணைக்களம், வனஜீவராசிகள் திணைக்களம், மகாவலி அபிவிருத்தி அதிகாரசபை இவற்றின் வரிசையில் வனவளத் திணைக்களமும் எமது மக்களின் காணிகளை ஆக்கிரமிக்கும் செயற்பாட்டில் மும்முரமாக ஈடுபடுகின்ற ஒருதிணைக்களமாகும்.

இவ்வாறு மக்களின் காணிகளை மும்முரமாக அபகரிக்கின்றதிணைக்களங்களே ஆளும் தேசியமக்கள் சக்தி அரசாங்கத்திற்கு ஆப்புவைக்கின்ற செயற்பாட்டைச் செய்யும் என பிரதிஅமைச்சர் உபாலி சமரசிங்கவிற்கும், வன்னிமாவட்ட ஆளுங்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் ஏற்கனவே தெரிவித்திருக்கின்றோம்.

இந்நிலையில் கடந்த 01.09.2026அன்று இடம்பெற்ற வவுனியா நகர் பிரதேச அபிவிருத்திக்குழுக்கூட்டத்தில் வனவளத் திணைக்களத்தின் செயற்பாடுகளுக்கு பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்கவும், ஏனைய ஆளுந்தரப்பு பாராளுமன்ற உறுப்பினர்களும் எதிர்ப்பு வெளியிட்டிருப்பதை வரவேற்கின்றோம்.

குறிப்பாக வனவளத் திணைக்களத்தின் நிலஅபகரிப்பின் தீவிரத் தன்மையை இச்சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

முல்லைத்தீவில் கடந்தகாலத்தில் 2,22006 ஏக்கர் அடர்ந்த காடுகளே வனவளத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டில் இருந்தது. ஆனால் யுத்தம் மௌனிக்கப்பட்ட பிற்பாடு முல்லைத்தீவில் 4,32141 ஏக்கர் நிலங்கள் வனவளத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டில் உள்ளது. இவ்வாறாக வனவளத் திணைக்களம் எமது மக்களின் காணிகளில் அத்துமீறி எல்லைக் கற்களையிட்டு ஆக்கிரமிப்பு செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளது.

குறிப்பாக மக்களின் நெற்செய்கைக் காணிகளும், உபஉணவுப் பயிற்செய்கைக் காணிகளும் வனவளத் திணைக்களத்தால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. இவ்வாறாக மக்களின் காணிகள் ஆக்கிரமிக்கப்பட்டால் அந்தக் காணிகளுக்குரிய விவசாயிகள் என்னசெய்வது.

எனவே வனவளத் திணைக்களத்தின் இத்தகைய அத்துமீறிய செயற்பாடுகளுக்கெதிராக பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க உரிய நடவடிக்கைளை மேற்கொள்ளவேண்டும்.

எமது மக்கள் மண்வெட்டிபிடிக்காக சிறிய மரங்களை வெட்டும்போது, அவர்களுக்கெதிராக வனவளத் திணைக்களம் சட்டநடவடிக்கைகளை மேற்கொள்கின்றது. அதேவேளை கையூட்டுக்களைப் பெற்றுக்கொண்டு பார-ிய வனப்பகுதிகளை அழிப்பதற்கு வனவளத்திணைக்களம் ஆதரவாகச் செயற்படுவதாகவும் எமக்கு மக்களிடமிருந்து முறைப்பாடுகள் கிடைக்கின்றன.

எனவே இந்தவிடயங்கள் தொடர்பிலும் பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க கூடுதல் கவனஞ்செலுத்தவேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன்.

எமது வன்னிப் பிராந்தியத்தைக் காப்பாற்றுங்கள் என்றே நாம் கோருகின்றோம்.

வனவளத்திணைக்களத்திற்கு மக்களின் காணிகள் எதற்கு? எமது வி-வசாயிகளின் காணிகளை அவர்களிடமே வழங்குங்கள்.

வனவளத் திணைத்தினரா விவசாயம் செய்கின்றனர்? எமது மக்கள் தமது காணிகளில் விவசாயத்தை மேற்கொண்டு அன்றாட வாழ்வாதாரத்தை கொண்டுசெல்வதற்குரிய வழிவகைகளை ஏற்படுத்துங்கள்.

வனவளத் திணைக்களத்தின் அத்துமீறிய செயற்பாடுகளுக்கெதிராக அண்மையில் எதிர்ப்பு வெளியிட்டதைப்போன்று, வனவளத் திணைக்களத்தின் செயறபாடுகளுக்கெதிரான நடவடிக்கைகளை செயலிலும் காண்பியுங்கள்.



வனவளத்திணைக்களம் மக்களின் காணிகளைத் திருடும் திருட்டுக்கூட்டம் எனவும் தெரிவித்தார்.

# பயங்கரவாதத் தடைச் சட்டத் திருத்தம் மற்றும் காணாமல்போனோர் அலுவலகப் பணிகள் தொடர்பான கலந்துரையாடல்

## ஐ.நா. வதிவிடப் பிரதிநிதி நீதிஇலங்கையின் நீதி அமைச்சருடன் பேச்சுவார்த்தை





பயங்கரவாதத் தடைச் சட்டத் திருத்தம் மற்றும் காணாமல்போனோர் பற்றிய அலுவலகத்தின் பணிகள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் வதிவிடப் பிரதிநிதி மார்க் - ஆன்ட்ரே பிரான்ஞ், நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்காரவுடன் விரிவாகக் கலந்துரையாடினார்.

நீதி, சிறைச்சாலைகள் மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சர் ஹர்ஷன நாணயக்காரவுக்கும் ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி மார்க் - ஆன்ட்ரே பிரான்ஞ்சுக்கும் இடையிலான சந்திப்பு 3ம் திகதி வியாழக்கிழமை கொழும்பில் நடைபெற்றது.

இந்தச் சந்திப்பின்போது பயங்கரவாதத் தடைச் சட்டத் திருத்தம், சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, காணாமல்போனோர் பற்றிய அலு-வலகம் மற்றும் இழப்பீட்டுக்கான அலுவலகத்தின் பணிகள் என்பன உள்ளடங்கலாக சட்ட ஆட்சி சார்ந்த மறுசீரமைப்புக்கள் குறித்து விரிவாகக் கலந்துரையாடப்பட்டன என்று ஐ.நா. வதிவிடப் பிரதிநிதி தெரிவித்தார்.

அதுமாத்திரமன்றி பாதிக்கப்பட்டோர் தொடர்பில் விசேட கவனம் செலுத்தி, சட்டத்தின் ஆட்சியை வலுப்படுத்துவதற்கான முயற்சிகளுக்கு முழுமையான ஆதரவு வழங்கத் தயாராக இருப்பதாகவும் அவர் உறுதியளித்தார்.

# கட்டுநாயக்க விமானப்படைத் தளத்தில் அமெரிக்கப் படையினருடன் இணைந்து இலங்கை விமானப்படை நடத்தும் கூட்டுப் பயிற்சி!



இலங்கை விமானப்படை, அமெரிக்க தூதரகத்தின் ஒருங்கிணைப்புடன், அமெரிக்காவின் மொன்டானா தேசிய பாதுகாப்புப் படை மற்றும் பசிபிக் வான்படை ஆகியவற்றுடன் இணைந்து நடத்தும் "அட்லஸ் ஏஞ்சல் - II 2026" கூட்டு வான்படைப் பயிற்சி நடைபெற்று வருகின்றது.

இலங்கை விமானப்படையின் கட்டுநாயக்க முகாமில் கடந்த ஓகஸ்ட் 31ஆம் திகதி தொடங்கப்பட்ட இப்பயிற்சி, 5 நாள்கள் தொடர்ந்து நடைபெற்று செப்டம்பர் 4ஆம் திகதியுடன் நிறைவடைகிறது.

இந்தப் பயிற்சியானது கண்டி, திகன, கொழும்பு மற்றும் கட்டுநாயக்க ஆகிய பகுதிகளை மையமாகக் கொண்டு முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

கட்டுநாயக்க விமானப்படைத் தளத்தில் நடைபெற்ற இந்தப் பயிற்சியின் ஆரம்ப விழாவில், இலங்கை விமானப்படையின் திட்டமிடல் பணிப்பாளர் நாயகம் எயார் வைஸ் மார்ஷல் தேசப்ரிய சில்வா உள்ளிட்ட விமானப்படைப் பணிப்பாளர் சபையின் உயர் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

கட்டுநாயக்க விமானப்படைத் தள கட்டளை அதிகாரியும் பயிற்சி ஒருங்கிணைப்பு அதிகாரியுமான எயார் வைஸ் மார்ஷல் அமித ஜயமஹ, மொன்டானா தேசிய பாதுகாப்புப் படையின் வான்படை பிரிவின் உதவி அட்ஜூட்டன்ட் ஜெனரல் பிரிகேடியர் ஜெனரல் வெய்ன் தோமஸ் மற்றும் அமெரிக்க தூதரக அதிகாரிகள் உட்பட இரு நாட்டுப் படைப்பிரிவின் உயர் அதிகாரிகள் பலரும் இந்த நிகழ்வில் பங்கேற்றனர்.





உலக செய்திகள்
World News

# தமிழ்நாடு காவல் துறையில் 29,108 பணியிடங்கள் உருவாக்கப்படுமென முதலமைச்சர் விஜய் அறிவிப்பு!



காவல் துறையில் 29,108 பணியிடங்கள் உருவாக்கப்படுமென முதல் அமைச்சர் விஜய் அறிவித்தார். காவல்துறை மீதான மானிய கோரிக்கையை முதலமைச்சர் வஜய் தாக்கல் செய்தார்.

அப்போது, புதிய அறிவுப்புகளை முதலமைச்சர் விஜய் வெளியிட்டார். அதன் விவரம்: காவல் நிலையங்களில் 29,108 கூடுதல் காவல் பணியிடங்கள் அடுத்த 5 ஆண்டுகளில் உருவாக்கப்படும்.

போதைப்பொருளை ஒழிக்கும் கிராமங்களுக்கு ரூ.10 லட்சம் வீதம் 50 கிராமங்களுக்கு வழங்கப்படும். ரூ.212 கோடி ஒதுக்கீட்டில் காவல்துறை நவீனமயமாக்கப்படும். பணியின்போது துணிச்சலுடன் பணியாற்றி உயிரிழக்கும் காவலர் குடும்பத்திற்கு ரூ.1 கோடி வழங்கப்படும். பணியின்போது உயிரிழக்கும் காவலர் குடும்பத்திற்கு தரப்படும் கருணைத்தொகை ரூ.20 லட்சத்தில் இருந்து ரூ.30 லட்சமாக உயர்த்தப்படும். வண்டலூரில் உள்ள காவலர் உயர்பயிற்சியகத்தில் உள்விளையாட்டு அரங்கு, விளையாட்டு வசதிகள் ரூ.23 கோடியில் ஏற்படுத்தப்படும். இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

# விவசாயிகள், ஆசிரியர்கள் மீதான வழக்குகள் திரும்பப் பெறப்படும் என்ற அறிவிப்புக்கு இந்திய கம்யூ. கட்சி வரவேற்பு தெரிவித்துள்ளது

விவசாயிகள், ஆசிரியர்கள் மீதான அனைத்து வழக்குகளும் திரும்பப் பெறப்படும் என்று தமிழ்நாடு முதல் அமைச்சர் அறிவித்துள்ளதற்கு, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்பு தெரிவித்துள்ளது. இதுதொடர்பாக இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயலாளர் மு.வீரபாண்டியன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது: கடந்த காலத்தில் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி போராடிய விவசாயிகள், ஆசிரியர்கள் மீது பதிவு செய்யப்பட்ட அனைத்து வழக்குகளும் திரும்பப் பெறப்படும் என தமிழ்நாடு சட்டமன்றத்தில் முதல்-அமைச்சர் ஜோசப் விஜய் அறிவித்துள்ளதை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்கிறது.

அதே நேரத்தில், அவர்களின் நியாயமான கோரிக்கைகளையும் தமிழ்நாடு அரசு நிறைவேற்ற வேண்டும். கடந்த காலத்தில் பல்வேறு கோரிக்கைகளுக்காக போராட்டங்களை முன்னெடுத்த அரசியல் கட்சித் தலைவர்கள், தூய்மைப் பணியாளர்கள், மாணவர்கள் இளைஞர்கள் மீது போடப்பட்ட அனைத்து வழக்குகளையும் தமிழ்நாடு அரசு திரும்பப் பெற வேண்டும். அரசு மருத்துவர்களின் ஊதிய உயர்வு, பதவி உயர்வு கோரிக்கைகளுக்காக தொடர்ந்து போராடிவரும் அரசு மருத்துவர்களுக்கான சட்டப் போராட்டக் குழுவின் தலைவர் டாக்டர் பெருமாள் பிள்ளை மீது எடுக்கப்பட்டு வரும் ஒழுங்கு நடவடிக்கையையும் ரத்து செய்ய வேண்டுமென தமிழ்நாடு அரசை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறது. இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# பள்ளி மாணவர்களுக்கு எதிரான மனிதநேயமற்ற கொடுஞ்செயல்!

## பழங்குடியின நரிக்குறவர் சமுதாயப் பள்ளி மாணவிகள் அரசுபஸ்சில் இருந்து கீழே தள்ளிவிடப்பட்டுப் படுகாயமடைந்த கொடூரச் சம்பவம் !

பள்ளி மாணவர்களை பேருந்தில் இருந்து கீழே தள்ளிவிட்டது மனிதநேயமற்ற கொடுஞ்செயலென தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் மாணிக்கம் தாகூர் எம்.பி. கூறினார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: புதுக்கோட்டை மாவட்டம், ரங்கம்மா சத்திரம் பகுதியைச் சேர்ந்த பழங்குடியின நரிக்குறவர் சமுதாயப் பள்ளி மற்றும் கல்லூரி மாணவிகள் அரசுபஸ்சில் இருந்து கீழே தள்ளிவிடப்பட்டுப் படுகாயமடைந்த கொடூரச் சம்பவம் ஒட்டுமொத்த மனிதகுலத்தையும் உலுக்கியுள்ளது. கல்வி பயிலச் சென்ற பெண் குழந்தைகள் மீது பஸ்சில் காட்டப்பட்ட தீண்டாமைப் புறக்கணிப்பும் அலட்சியமும் வன்மையாகக் கண்டிக்கத்தக்கது. இச்சம்பவம் குறித்துத் தகவல் அறிந்தவுடன் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் சார்பில் புதுக்கோட்டை மாவட்டத் தலைவர் பென்னட் உடனடியாக அப்பகுதிக்கு நேரில் சென்று கள ஆய்வு மேற்கொண்டு, பாதிக்கப்பட்ட மாணவிகள், குடும்பத்தினர் மற்றும் அப்பகுதி மக்களிடம் நிலைமைகளைக் கேட்டறிந்தார்.

நாட்டின் விளிம்புநிலை மக்களான பழங்குடியினர் மற்றும் பட்டியலினத்தவர்கள் மீது தொடர்ச்சியாகக் கட்டவிழ்த்து விடப்படும் இத்தகைய உளவியல் மற்றும் சமூக ஒடுக்குமுறைகளுக்குப் பின்னால் ஊடுருவியிருப்பது ஆர்.எஸ்.எஸ் அமைப்பின் நச்சுத்தனமான வெறுப்பு அரசியல் சித்தாந்தமே ஆகும். சக மனிதனை சமமாகப் பார்க்க விடாமல், எளிய மக்களைத் தீண்டத்தகாதவர்களாகவும் இரண்டாந்தரக் குடிமக்களாகவும் சித்தரிக்கும் இந்த மனுவாத வெறுப்பு அரசியலையும் ஆர்.எஸ்.எஸ். சித்தாந்தத்தையும் நாம் முற்றிலுமாக முறியடித்தாக வேண்டும். இத்தகைய வெறுப்புணர்வை வேரறுக்காமல் சமூக நீதியையும் சமத்துவத்தையும் பாதுகாப்பது சாத்தியமில்லை. பழங்குடியின மாணவிகள் தங்களின் கல்வி உரிமைக்காக நாள்தோறும் பெரும் போராட்டத்தை எதிர்கொண்டு வருகின்றனர். அப்பகுதியில் இருந்து புதுக்கோட்டை நகருக்குப் பள்ளி, கல்லூரி செல்ல 4 முதல் 5 கிலோமீட்டர் தூரத்திற்குப் பஸ் போக்குவரத்தே ஒரே வாழ்வாதாரமாக உள்ளது.

ஆனால், குறிப்பிட்ட அந்த நிறுத்தத்தில் அரசு பஸ்கள் முறையாக நிற்பதில்லை என்ற குற்றச்சாட்டு நிலவுகிறது. பஸ்சில் ஏற முயலும் குழந்தைகளை அவமதிப்பது, கம்பிப் பிடியைத் தட்டிவிடுவது மற்றும் தானியங்கி கதவை அழுக்கி மாணவிகளை ஆபத்துக்குள்ளாக்கியது போன்ற செயல்கள் மனிதநேயமற்ற கொடுஞ்செயல்கள் ஆகும். ஏற்கனவே மாவட்ட நிர்வாகம் ஏற்பாடு செய்திருந்த பிரத்யேக வாகன வசதியை, பள்ளிக் கல்வித் துறையா அல்லது வருவாய்த் துறையா செலவை ஏற்பது என்ற அதிகாரத்துவப் பூசலால் நிறுத்தி வைத்துள்ளனர். துறைகளின் இந்த அலட்சியமே இன்று 10 மாணவிகள் ரத்தக் காயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்படக் காரணமாகியுள்ளது. அரசுத் துறைகளுக்கு இடையேயான இந்த ஒருங்கிணைப்பின்மைக்கு மாவட்ட ஆட்சியரே முழுப் பொறுப்பேற்க வேண்டும். தமிழ்நாடு அரசு ஒடுக்கப்பட்ட மற்றும் விளிம்புநிலை மக்களின் நலனுக்காகவும் சமத்துவத்திற்காகவும் பல்வேறு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளைத் தொடர்ந்து எடுத்து வருகிறது என்பதை உணர்கிறோம். இருப்பினும், கள அளவில் அங்கொன்றும் இங்கொன்றுமாக நடைபெறும் இதுபோன்ற துரதிர்ஷ்டவசமான தீண்டாமைச் சம்பவங்களையும் நிர்வாகக் குறைபாடுகளையும் அரசு தீவிரமாகக் கவனத்தில் கொண்டு, இனி எங்கும் இத்தகைய நிகழ்வுகள் எழாத வண்ணம் கண்காணிப்பையும் தடுப்பு நடவடிக்கைகளையும் மேலும் தீவிரப்படுத்த வேண்டும் என்று தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி வலியுறுத்துகிறது.



# வாரணாசியில் வெள்ள பாதிப்பு தொடர்பாக மீட்பு, நிவாரண பணிகளை மேற்கொள்ள அதிகாரிகளுக்கு பிரதமர் மோடி உத்தரவு!

வாரணாசியில் வெள்ள பாதிப்பு மீட்பு, நிவாரண பணிகளை மேற்கொள்ள அதிகாரிகளுக்கு பிரதமர் மோடி உத்தரவிட்டுள்ளார். தொடர் கனமழை காரணமாக உத்தரபிரதேச மாநிலத்தில் பல்வேறு பகுதிகள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளன. சாலைகளில் முழங்கால் வரையில் மழைநீர் தேங்கியுள்ளதால், போக்குவரத்து பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. மேலும், வீடுகளில் வெள்ளநீர் புகுந்ததால், பொதுமக்களும் பெரும் சிரமத்திற்கு ஆளாகியுள்ளனர். குறிப்பாக, கங்கை ஆற்றில் வெள்ளம் கரைபுரண்டோடுகிறது. கங்கையில் வெள்ளம் அபாயக் கட்டத்தை தாண்டி செல்வதால், கரையோர மக்கள் உஷார் படுத்தப்பட்டுள்ளனர்.

மேலும், நிவாரண முகாம்கள் ஏற்படுத்தப்பட்டு, தாழ்வான பகுதிகளில் வசிப்பவர்கள் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இந்த நிலையில், பிரதமர் மோடியின் சொந்த தொகுதியான வாரணாசியில் வெள்ள பாதிப்பு குறித்து மாவட்ட கலெக்டர் சத்யேந்திர குமாரை தொலைபேசியில் தொடர்பு கொண்டு பிரதமர் மோடி பேசினார். நிவாரண முகாம்களில் செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகள் மற்றும் கங்கை ஆற்றில் வெள்ளப்பெருக்கு குறித்து விரிவான விவரங்களைக் கேட்டறிந்தார். அப்போது, பாதிக்கப்பட்ட மக்களுக்கு, தாமதமின்றி அனைத்து அவசர தேவைகளையும், நிவாரணப் பணிகளையும் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளுமாறு மாவட்ட அதிகாரிகளுக்கு பிரதமர் மோடி உத்தரவிட்டார்.

# அமெரிக்காவில் பிறக்கும் குழந்தைகளுக்கு கடவுச்சீட்டு பெற புதிய கட்டுப்பாடு அமுலுக்கு வந்துள்ளது




அமெரிக்காவில் பிறக்கும் குழந்தைகளுக்கு கடப்பிதழ் பெற பெற்றோரின் குடியுரிமை சான்று கட்டாயம் என்ற புதிய கட்டுப்பாடு விதித்துள்ளது. அமெரிக்காவில் பிறக்கும் குழந்தைகளுக்கு கடப்பிதழ் வழங்கும்போது, அவர்களின் பெற்றோர் அமெரிக்க குடியுரிமை பெற்றவர்கள் என்பதற்கான ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டும் என்ற புதிய நடைமுறையை கொண்டு வர டிரம்ப் நிர்வாகம் திட்டமிட்டுள்ளது. அமெரிக்க அதிபராக டொனால்டு டிரம்ப் கடந்த ஆண்டு ஜனவரி மாதம் 2-வது முறையாக பதவியேற்றதில் இருந்து, குடியேற்றம் மற்றும் விசா தொடர்பான விதிகளில் பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில், அமெரிக்காவில் பிறக்கும் குழந்தைகளுக்கு வழங்கப்படும் பிறப்பு குடியுரிமையை கட்டுப்படுத்தும் நோக்கில் புதிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. தற்போதைய நடைமுறையின்படி, அமெரிக்காவில் பிறந்த குழந்தைக்கு பாஸ்போர்ட் பெறும்போது, பெற்றோர் தங்களது உறவை நிரூபிப்பதுடன், புகைப்பட அடையாள அட்டையை சமர்ப்பித்தால் போதுமானது. ஆனால், புதிய திட்டம் அமலுக்கு வந்தால், பெற்றோர் தங்களது அமெரிக்க குடியுரிமைக்கான ஆதாரத்தையும் கட்டாயம் சமர்ப்பிக்க வேண்டிய நிலை ஏற்படும். அமெரிக்க அரசியலமைப்பின் 14-வது சட்டத்திருத்தத்தின்படி, அந்நாட்டில் பிறக்கும் குழந்தைகளுக்கு குடியுரிமை வழங்கப்படுவது அடிப்படை உரிமையாக உள்ளது. இந்த உரிமையை கட்டுப்படுத்தும் வகையில் டிரம்ப் நிர்வாகம் மேற்கொள்ளும் முயற்சிக்கு எதிராக விமர்சனங்கள் எழுந்துள்ளன.

# இவ்வார ராசிபலன்

**04-09-2026 வெள்ளி தொடக்கம் 10-09-2026 வியாழன் வரையும்**



ஸ்ரீ ஸ்ரீ ப்ரத்யங்கிராதாச சுவாமிகள்
ஸ்தாபகர்
ஜெய் ப்ரத்யங்கிரா பீடம்
40.வெண்பாக்கம் கிராமம், சிங்கப்பெருமான் கோவில்(மில் வேகேட் (வழி), வெங்கடாபுரம் (அஞ்சல்), செங்கல்பட்டு (மா)- 603204.
தொடர்புக்கு WhatsApp: +91778894666


**மேஷம்:** உங்கள் தன்னம்பிக்கையும் துணிச்சலும் பல நல்ல மாற்றங்களுக்கு வழிவகுக்கும் வாரமாக இது அமையும் மேஷ ராசி அன்பர்களே! தொழில், வேலை மற்றும் வியாபாரத்தில் நீங்கள் எதிர்பார்த்த பதவி உயர்வு மற்றும் சம்பள உயர்வு கிடைக்கும். நீண்ட நாட்களாக தடைபட்டிருந்த அரசாங்க காரியங்கள் வெற்றிகரமாக முடியும். புதிய தொழில் தொடங்க நினைப்பவர்களுக்கு இது மிகவும் சாதகமான வாரம். பணவரவு அமோகமாக இருக்கும். கடன் பிரச்சனைகள் தீர்ந்து, கையில் பணம் தாராளமாக புழங்கும். வீடு, வாகனம் வாங்கும் யோகம் உண்டு. குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழல் நிலவும். கணவன்-மனைவி இடையே அன்பும் புரிதலும் அதிகரித்து, குடும்ப ஒற்றுமை வலுப்படும். பிள்ளைகளின் முன்னேற்றம் மனநிறைவை தரும். திருமணம் போன்ற சுப நிகழ்ச்சிகள் கைகூடும். காதல் உறவுகளில் இருந்த சிறிய கருத்து வேறுபாடுகள் நீங்கி, இனிமையான தருணங்கள் அதிகரிக்கும். உடல்நலத்தில் பெரிய பாதிப்பு எதுவும் இல்லை என்றாலும், வெயிலில் அலைவதால் தலைவலி மற்றும் சோர்வு ஏற்படலாம். நீர் அதிகம் பருகுவதும், போதுமான ஓய்வும் அவசியம். மாணவர்கள் கல்வியில் சிறப்பாக செயல்பட்டு, வெளிநாடு சென்று படிக்கும் வாய்ப்பு கிடைக்கும். அவசர முடிவுகளைத் தவிர்த்து பொறுமையுடன் செயல்பட்டால் நினைத்த காரியங்கள் அனைத்தும் சாதகமாக நடைபெறும்.

அதிர்ஷ்ட நிறம்: சிவப்பு, மஞ்சள், அதிர்ஷ்ட எண்: 9,3

அதிர்ஷ்ட நாள்: செவ்வாய், வியாழன், இந்த வாரம் மேஷத்திற்கு 9.5/10 மதிப்பெண்.

**ரிஷபம்:** உங்கள் பொறுமையும் நிதானமும் பெரிய வெற்றிகளை தேடித்தரும் வாரமாக இது அமையும் ரிஷப ராசி அன்பர்களே! தொழில், வேலை மற்றும் வியாபாரத்தில் நீண்ட நாட்களாக இருந்த தேக்க நிலை மாறி, புதிய வாடிக்கையாளர்கள் மூலம் லாபம் அதிகரிக்கும். உடன் வேலை செய்பவர்களின் ஆதரவால் பணிச்சுமை குறையும். புதிய வேலைக்கு முயற்சிப்பவர்களுக்கு நல்ல செய்தி வரும். பணவரவு சீராக இருந்து, தடைபட்டிருந்த பணம் கைக்கு வந்து நிம்மதியை அளிக்கும். சொத்து சம்பந்தமான பிரச்சனைகள் சாதகமாக முடியும். ஆடம்பர செலவுகளை குறைப்பது நல்லது. குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழல் நிலவும். கணவன்-மனைவி இடையே அன்பும் புரிதலும் அதிகரித்து, குடும்ப ஒற்றுமை வலுப்படும். பிள்ளைகளின் முன்னேற்றம் மனநிறைவை தரும். பெரியவர்களின் ஆசிர்வாதம் கிடைக்கும். காதல் உறவுகளில் இருந்த சிறிய கருத்து வேறுபாடுகள் நீங்கி, இனிமையான தருணங்கள் அதிகரிக்கும். திருமண பேச்சுவார்த்தைகள் வெற்றியடையும். உடல்நலத்தில் பெரிய பாதிப்பு எதுவும் இல்லை என்றாலும், வாயு தொல்லை மற்றும் ஜீரண கோளாறு ஏற்படலாம். காரமான உணவை தவிர்த்து, சத்தான உணவில் கவனம் செலுத்துங்கள். மாணவர்கள் கல்வியில் சிறப்பாக செயல்பட்டு, போட்டித் தேர்வுகளில் நல்ல வெற்றியைப் பெறுவார்கள். அவசர முடிவுகளைத் தவிர்த்து பொறுமையுடன் செயல்பட்டால் நினைத்த காரியங்கள் அனைத்தும் சாதகமாக நடைபெறும்.

அதிர்ஷ்ட நிறம்: வெள்ளை, பச்சை, அதிர்ஷ்ட எண்: 2, 6

அதிர்ஷ்ட நாள்: வெள்ளி, திங்கள், இந்த வாரம் ரிஷபத்திற்கு 8.5/10 மதிப்பெண்.

**மிதுனம்:** உங்கள் புத்திசாலித்தனமும் பேச்சுத் திறமையும் பல நல்ல மாற்றங்களுக்கு வழிவகுக்கும் வாரமாக இது அமையும் மிதுன ராசி அன்பர்களே! தொழில், வேலை மற்றும் வியாபாரத்தில் புதிய வாய்ப்புகள் கிடைத்து, நீண்ட நாட்களாக எதிர்பார்த்திருந்த முயற்சிகள் வெற்றியடையும். வெளிநாடு சம்பந்தமான தொழில் முயற்சிகள் கைகூடும். பணவரவு சீராக இருந்து, தடைபட்டிருந்த பணம் கைக்கு வந்து நிம்மதியை அளிக்கும். நண்பர்களால் பண உதவி கிடைக்கும். புதிய முதலீடுகள் குறித்து சிந்திக்கும் வாய்ப்பும் உருவாகும். குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழல் நிலவும். கணவன்-மனைவி இடையே அன்பும் புரிதலும் அதிகரித்து, குடும்ப ஒற்றுமை வலுப்படும். உறவினர்கள் வருகையால் வீட்டில் கொண்டாட்டம் உண்டு. காதல் உறவுகளில் இருந்த சிறிய கருத்து வேறுபாடுகள் நீங்கி, இனிமையான தருணங்கள் அதிகரிக்கும். உடல்நலத்தில் பெரிய பாதிப்பு எதுவும் இல்லை என்றாலும், அதிக யோசனையால் மன அழுத்தம் மற்றும் தூக்கமின்மை ஏற்படலாம். தியானம் செய்வது நல்ல பலன் தரும். மாணவர்கள் கல்வியில் சிறப்பாக செயல்பட்டு, போட்டித் தேர்வுகளில் நல்ல வெற்றியைப் பெறுவார்கள். அவசர முடிவுகளைத் தவிர்த்து பொறுமையுடன் செயல்பட்டால் நினைத்த காரியங்கள் அனைத்தும் சாதகமாக நடைபெறும்.

அதிர்ஷ்ட நிறம்: பச்சை, மஞ்சள், அதிர்ஷ்ட எண்: 3,5

அதிர்ஷ்ட நாள்: புதன், வியாழன், இந்த வாரம் மிதுனத்திற்கு 9/10 மதிப்பெண்.

**கடகம்:** உங்கள் மன உறுதியும் குடும்ப பாசமும் பல நல்ல மாற்றங்களுக்கு வழிவகுக்கும் வாரமாக இது அமையும் கடக ராசி அன்பர்களே! தொழில், வேலை மற்றும் வியாபாரத்தில் புதிய வாய்ப்புகள் கிடைத்து, நீண்ட நாட்களாக எதிர்பார்த்திருந்த பதவி உயர்வு கிடைக்கும். மேலதிகாரிகளின் பாராட்டும், முக்கிய பொறுப்புகளும் கிடைக்கக்கூடும். பணவரவு சீராக இருந்து, தடைபட்டிருந்த பணம் கைக்கு வந்து நிம்மதியை அளிக்கும். கடன் சுமை குறையும். புதிய முதலீடுகள் குறித்து சிந்திக்கும் வாய்ப்பும் உருவாகும். குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழல் நிலவும். கணவன்-மனைவி இடையே அன்பும் புரிதலும் அதிகரித்து, குடும்ப ஒற்றுமை வலுப்படும். தாயின் உடல்நலத்தில் கவனம் தேவை. பிள்ளைகளின் முன்னேற்றம் மனநிறைவை தரும். காதல் உறவுகளில் இருந்த சிறிய கருத்து வேறுபாடுகள் நீங்கி, இனிமையான தருணங்கள் அதிகரிக்கும். உடல்நலத்தில் பெரிய பாதிப்பு எதுவும் இல்லை என்றாலும், சளி, காய்ச்சல் போன்ற உபாதைகள் வரலாம். குளிர்ந்த உணவுகளை தவிர்க்கவும். மாணவர்கள் கல்வியில் சிறப்பாக செயல்பட்டு, போட்டித் தேர்வுகளில் நல்ல வெற்றியைப் பெறுவார்கள். அவசர முடிவுகளைத் தவிர்த்து பொறுமையுடன் செயல்பட்டால் நினைத்த காரியங்கள் அனைத்தும் சாதகமாக நடைபெறும்.

அதிர்ஷ்ட நிறம்: வெள்ளை, நீலம், அதிர்ஷ்ட எண்: 2,7

அதிர்ஷ்ட நாள்: திங்கள், வெள்ளி, இந்த வாரம் கடகத்திற்கு 8/10 மதிப்பெண்.

**சிம்மம்:** உங்கள் தலைமை பண்பும் தன்னம்பிக்கையும் பல நல்ல மாற்றங்களுக்கு வழிவகுக்கும் வாரமாக இது அமையும் சிம்ம ராசி அன்பர்களே! தொழில், வேலை மற்றும் வியாபாரத்தில் புதிய வாய்ப்புகள் கிடைத்து, நீண்ட நாட்களாக எதிர்பார்த்திருந்த முயற்சிகள் வெற்றியடையும். அரசு வேலைக்கு முயற்சிப்பவர்களுக்கு சாதகமான பதில் வரும். மேலதிகாரிகளின் பாராட்டும், முக்கிய பொறுப்புகளும் கிடைக்கக்கூடும். பணவரவு சீராக இருந்து, தடைபட்டிருந்த பணம் கைக்கு வந்து நிம்மதியை அளிக்கும். புதிய முதலீடுகள் குறித்து சிந்திக்கும் வாய்ப்பும் உருவாகும். சொத்து வாங்கும் யோகம் உண்டு. குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழல் நிலவும். கணவன்-மனைவி இடையே அன்பும் புரிதலும் அதிகரித்து, குடும்ப ஒற்றுமை வலுப்படும். பிள்ளைகளின் முன்னேற்றம் மனநிறைவை தரும். காதல் உறவுகளில் இருந்த சிறிய கருத்து வேறுபாடுகள் நீங்கி, இனிமையான தருணங்கள் அதிகரிக்கும். உங்கள் பேச்சுக்கு மதிப்பு அதிகரிக்கும். உடல்நலத்தில் பெரிய பாதிப்பு எதுவும் இல்லை என்றாலும், அதிக வேலைப்பளுவால் உடல் சோர்வு மற்றும் தலைவலி ஏற்படலாம். சத்தான உணவு மற்றும் போதுமான ஓய்வில் கவனம் செலுத்துங்கள். மாணவர்கள் கல்வியில் சிறப்பாக செயல்பட்டு, போட்டித் தேர்வுகளில் நல்ல வெற்றியைப் பெறுவார்கள். அவசர முடிவுகளைத் தவிர்த்து பொறுமையுடன் செயல்பட்டால் நினைத்த காரியங்கள் அனைத்தும் சாதகமாக நடைபெறும்.

அதிர்ஷ்ட நிறம்: ஆரஞ்சு, சிவப்பு, அதிர்ஷ்ட எண்: 1,5

அதிர்ஷ்ட நாள்: ஞாயிறு, செவ்வாய், இந்த வாரம் சிம்மத்திற்கு 9/10 மதிப்பெண்.

**கன்னி:** உங்கள் புத்திசாலித்தனமும் சுறுசுறுப்பும் பல நல்ல மாற்றங்களுக்கு வழிவகுக்கும் வாரமாக இது அமையும் கன்னி ராசி அன்பர்களே! தொழில், வேலை மற்றும் வியாபாரத்தில் புதிய வாய்ப்புகள் கிடைத்து, நீண்ட நாட்களாக எதிர்பார்த்திருந்த முயற்சிகள் வெற்றியடையும். புதிய ஒப்பந்தங்கள் கிடைத்து லாபம் அதிகரிக்கும். மேலதிகாரிகளின் பாராட்டும், முக்கிய பொறுப்புகளும் கிடைக்கக்கூடும். பணவரவு சீராக இருந்து, தடைபட்டிருந்த பணம் கைக்கு வந்து நிம்மதியை அளிக்கும். புதிய முதலீடுகள் குறித்து சிந்திக்கும் வாய்ப்பும் உருவாகும். சேமிப்பு உயரும். குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழல் நிலவும். கணவன்-மனைவி இடையே அன்பும் புரிதலும் அதிகரித்து, குடும்ப ஒற்றுமை வலுப்படும். பிள்ளைகளின் முன்னேற்றம் மனநிறைவை தரும். காதல் உறவுகளில் இருந்த சிறிய கருத்து வேறுபாடுகள் நீங்கி, இனிமையான தருணங்கள் அதிகரிக்கும். உடல்நலத்தில் பெரிய பாதிப்பு எதுவும் இல்லை என்றாலும், அதிக வேலைப்பளுவால் உடல் சோர்வு மற்றும் தூக்கமின்மை ஏற்படலாம். சத்தான உணவு மற்றும் போதுமான ஓய்வில் கவனம் செலுத்துங்கள். மாணவர்கள் கல்வியில் சிறப்பாக செயல்பட்டு, போட்டித் தேர்வுகளில் நல்ல வெற்றியைப் பெறுவார்கள். அவசர முடிவுகளைத் தவிர்த்து பொறுமையுடன் செயல்பட்டால் நினைத்த காரியங்கள் அனைத்தும் சாதகமாக நடைபெறும்.

அதிர்ஷ்ட நிறம்: பச்சை, நீலம் அதிர்ஷ்ட எண்: 5,6

அதிர்ஷ்ட நாள்: புதன், வெள்ளி, இந்த வாரம் கன்னிக்கு 8.5/10 மதிப்பெண்.

**துலாம்:** உங்கள் நேர்மையும் சமநிலையான அணுகுமுறையும் பல நல்ல மாற்றங்களுக்கு வழிவகுக்கும் வாரமாக இது அமையும் துலாம் ராசி அன்பர்களே! தொழில், வேலை மற்றும் வியாபாரத்தில் புதிய வாய்ப்புகள் கிடைத்து, நீண்ட நாட்களாக எதிர்பார்த்திருந்த முயற்சிகள் வெற்றியடையும். கூட்டுத் தொழிலில் லாபம் அதிகரிக்கும். மேலதிகாரிகளின் பாராட்டும், முக்கிய பொறுப்புகளும் கிடைக்கக்கூடும். பணவரவு சீராக இருந்து, தடைபட்டிருந்த பணம் கைக்கு வந்து நிம்மதியை அளிக்கும். புதிய முதலீடுகள் குறித்து சிந்திக்கும் வாய்ப்பும் உருவாகும். வீண் செலவுகள் குறையும். குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழல் நிலவும். கணவன்-மனைவி இடையே அன்பும் புரிதலும் அதிகரித்து, குடும்ப ஒற்றுமை வலுப்படும். பிள்ளைகளின் முன்னேற்றம் மனநிறைவை தரும். காதல் உறவுகளில் இருந்த சிறிய கருத்து வேறுபாடுகள் நீங்கி, இனிமையான தருணங்கள் அதிகரிக்கும். புதிய நட்பு கிடைக்கும். உடல்நலத்தில் பெரிய பாதிப்பு எதுவும் இல்லை என்றாலும், அதிக வேலைப்பளுவால் உடல் சோர்வு மற்றும் தூக்கமின்மை ஏற்படலாம். சத்தான உணவு மற்றும் போதுமான ஓய்வில் கவனம் செலுத்துங்கள். மாணவர்கள் கல்வியில் சிறப்பாக செயல்பட்டு, போட்டித் தேர்வுகளில் நல்ல வெற்றியைப் பெறுவார்கள். அவசர முடிவுகளைத் தவிர்த்து பொறுமையுடன் செயல்பட்டால் நினைத்த காரியங்கள் அனைத்தும் சாதகமாக நடைபெறும்.

அதிர்ஷ்ட நிறம்: வெள்ளை, இளம் நீலம், அதிர்ஷ்ட எண்: 6,2

அதிர்ஷ்ட நாள்: வெள்ளி, சனி, இந்த வாரம் துலாத்திற்கு 9/10 மதிப்பெண்.

**விருச்சிகம்:** உங்கள் தன்னம்பிக்கையும் துணிச்சலும் பல நல்ல மாற்றங்களுக்கு வழிவகுக்கும் வாரமாக இது அமையும் விருச்சிக ராசி அன்பர்களே! தொழில், வேலை மற்றும் வியாபாரத்தில் புதிய வாய்ப்புகள் கிடைத்து, நீண்ட நாட்களாக எதிர்பார்த்திருந்த முயற்சிகள் வெற்றியடையும். எதிரிகளின் தொல்லை விலகும். மேலதிகாரிகளின் பாராட்டும், முக்கிய பொறுப்புகளும் கிடைக்கக்கூடும். பணவரவு சீராக இருந்து, தடைபட்டிருந்த பணம் கைக்கு வந்து நிம்மதியை அளிக்கும். புதிய முதலீடுகள் குறித்து சிந்திக்கும் வாய்ப்பும் உருவாகும். பூர்வீக சொத்து மூலம் லாபம் உண்டு. குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழல் நிலவும். கணவன்-மனைவி இடையே அன்பும் புரிதலும் அதிகரித்து, குடும்ப ஒற்றுமை வலுப்படும். பிள்ளைகளின் முன்னேற்றம் மனநிறைவை தரும். காதல் உறவுகளில் இருந்த சிறிய கருத்து வேறுபாடுகள் நீங்கி, இனிமையான தருணங்கள் அதிகரிக்கும். உடல்நலத்தில் பெரிய பாதிப்பு எதுவும் இல்லை என்றாலும், அதிக வேலைப்பளுவால் உடல் சோர்வு மற்றும் தூக்கமின்மை ஏற்படலாம். சத்தான உணவு மற்றும் போதுமான ஓய்வில் கவனம் செலுத்துங்கள். மாணவர்கள் கல்வியில் சிறப்பாக செயல்பட்டு, போட்டித் தேர்வுகளில் நல்ல வெற்றியைப் பெறுவார்கள். அவசர முடிவுகளைத் தவிர்த்து பொறுமையுடன் செயல்பட்டால் நினைத்த காரியங்கள் அனைத்தும் சாதகமாக நடைபெறும்.

அதிர்ஷ்ட நிறம்: சிவப்பு, கருஞ்சிவப்பு, அதிர்ஷ்ட எண்: 9,1

அதிர்ஷ்ட நாள்: செவ்வாய், ஞாயிறு, இந்த வாரம் விருச்சிகத்திற்கு 8.5/10 மதிப்பெண்.

(தொடர்ச்சி 22 பக்கம்)

# ஈழத்துத் திருக்கோயில்கள் (வரலாறும் மரபும்)

வரலாறும் மரபும்
1212



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி. வசந்தா நடராசன் B.A.
(416) 332-0269
vasantha@rogers.com



## ஈழத்து திருச்செந்தூர் முருகன் ஆலயம் புதுக்கல்லடி, மட்டக்களப்பு

இலங்கைத்தீவின் கிழக்குக் கரையில் மட்டக்களப்பு மாநிலம் அமைந்துள்ளது. இங்கு நூற்றுக்கணக்கான கோயில்கள் காணப்படுகின்றன. இக்கோயில்களின் நிர்வாகம், அமைப்பு, ஒழுங்குமுறை யாவும் மிகக் கட்டுப்பாடான முறையிலே இயங்கிவருவது குறிப்பிடத்தக்கது. இக்கோயில்களின் சிறப்பம்சமாக மக்களிடையே பக்தியை வளர்பது காணப்படுகின்றது. பக்தி வளர்வதற்கும், உள்ளத்திலே ஊன்றி நிற்பதற்கும் அடிப்படைக்காரணங்கள் பலவாகக் காணப்படுகின்றன. அவற்றை சரியை, கிரியை, யோகம், ஞானம் என பெரியோர் வகைப்படுத்தியுள்ளனர். இவைகளை வளர்ப்பதற்கு ஆலயங்கள் ஊன்றுகோலாகக் காணப்படுகின்றன.

மட்டக்களப்புச் சைவக்கோயில்கள் யாழ்ப்பாணக்கோயில்களினின்றும் பல்வேறுமுறைகளில் வேறுபாடுடையதாகக் காணப்படுகின்றது. ஈழத்தின் பல பிரதேசங்களிலுமுள்ள கோயில்களில், சைவ ஆகம முறைப்படி பூசைகள் நடைபெறும். சைவாகம முறைகளை பக்தர் கூட்டமும் பின்பற்றும். ஆனால் மட்டக்களப்புக் கோயில்களில் ஆகம ஒழுங்கிற்கு மாறாக, பத்ததி எனப்படும் கோயில் பூசை ஒழங்கு முறைப்படி பூசைகள் நடைபெறும். இவ்வாறான ஒழுங்குமுறைகளையே பக்தர்களும் பின்பற்றுவர். மட்டக்களப்பிலுள்ள ஆலயங்களில் சிவாகம பக்திமுறையைக் காண்பதற்குப் பதிலாக, கரைகடந்த பக்தி வெள்ளத்தைக் காண முடியும். ஆயினும் ஆகமமுறை, பத்ததிமுறை இரண்டின் முடிவும் ஒன்றாகவே காணப்படும்.

இவ்வாறான சிறப்புக்கள் கொண்ட மட்டக்களப்பிலுள்ள ஆலயங்களுள் ஈழத்துத் திருச்செந்தூர் முருகன் ஆலயம், பல்வேறு சிறப்புக்களைத் தன்னகத்தே கொண்டதாகக் காணப்படுகின்றது. இப்பிரதேசத்திலுள்ள பல ஆலயங்கள் மன்னர்களோடு தொடர்புபட்டுக் காணப்படும்போது, ஈழத்துத் திருச்செந்தூர் முருகன் ஆலயம், ஒரு துறவியோடு தொடர்புபட்டுக் காணப்படுகின்றது. இத் துறவியின் பெயர் சுவாமி ஓங்காரானந்த சரஸ்வதி என்பதாகும்.

இவ்வாலயம் மட்டக்களப்பில் கல்லடியின் கடலோரத்தில் அமைந்துள்ளது. இக்கடலோரத்தில் சுவாமி ஓங்காரானந்த சரஸ்வதி அவர்கள், சிதானந்த தபோவனம் என்ற பெயரிலே ஒரு ஆச்சிரமத்தை அமைத்திருந்தார். இத் தபோவனம் அழகிய சூழ்நிலையில் தென்னங்தோப்பினுள் இயற்கையோடிணைந்து காட்சியளிக்கின்றது. சிதானந்த தபோவனம் அமைந்திருந்த தென்னந்தோப்பினுள்ளேயே ஈழத்து திருச்செந்தூர் முருகன் ஆலயமும் அமைந்துள்ளது.

இவ்வாலயம் மட்டுநகரில் தென்னந்தோப்பினுள் அமைந்திருக்கும் சிதானந்த தபோவனத்தின் மத்தியில் கட்டப்பட்ட வரலாறு சிறப்புடையது. 1965 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம், மகாசிவராத்திரி தினத்திற்கு முதல் இரவு சுவாமி ஓங்காரானந்த சரஸ்வதி அவர்கள், சிவானந்த ஆச்சிரமத்திலே தூங்கிக்கொண்டிருந்தபொழுது, அற்புதமான கனவு அவரது எண்ணத்திலே மலர்ந்தது. அக்கனவிலே தபோவனம் தோன்றியது. அப்போது தபோவனத்திலே ஒரேயொரு பனைமரத்தைத் தவிர வேறு மரங்கள் எதுவும் கிடையாது. அந்தப் பனைமர நிழலிலே காவி உடை தரித்த துறவியொருவர் தூங்கிக் கொண்டிருந்தார்.

அத்துறவியைக் கண்ட சுவாமி ஓங்காரானந்த சரஸ்வதி அவர்கள், அவசரம் அவசரமாக அவர் இருந்த இடத்திற்குச் சென்றார்கள். அங்கிருந்த துறவியை நோக்கி "சுவாமி எதற்காக இங்கு வந்தீர்கள்? இப்போது எங்கு போகிறீர்கள்? ஏன்னுடைய உதவி உங்களுக்குத் தேவைப்படுகின்றதா?" ஏன பல கேள்விகளைக் கேட்டார். சுவாமியின் கேள்விகளை மௌனமாகக் கேட்டுக்கொண்டிருந்த துறவி, அமைதியாகப் பதில் அளித்தார்.

கடலை நோக்கித் தனது வலது கரத்தை நீட்டிய துறவி, "அதோ தெரிகிற திருச்செந்தூரில்தான் நான் இருக்கிறேன். இவ்வழியால் கதிர்காமம் போவது எனது வழக்கம். இப்போதும் கதிர்காமத்திற்குப் போகத்தான் வந்தேன். அவ்வாறு போகும்பொழுது இந்தப் பனைமரத்தடியில் ஓய்வு பெறுவது வழக்கம். இன்றும் அவ்வாறே ஓய்வு பெற்றேன். நீயாவது ஒரு சிறுகொட்டிலை இங்கு கட்டிவிட்டால், இங்கும் சிலநாட்கள் தரித்துப்போக வசதியாக இருக்கும். முடிந்தால் அதைச் செய்" என்றுகூறி துறவி மறைந்துவிட்டார்.

இந்நிலையில் சுவாமி ஓங்காரானந்த சரஸ்வதி அவர்களுடைய கனவு கலைந்து நனவுநிலைக்கு வந்துவிட்டார். கனவிலே கண்ட அத்தனை செய்திகளும் மீண்டும் மீண்டும் அவர் நினைவிற்கு வந்து சென்றன. இவ்வேளையில் சுவாமி அவர்களுடைய தந்தையாரும், பெரியவர்களும் கூறிய ஒரு செய்தி அவரது மனத்திரையில் ஓடியது. "முருகன் இரவு கதிர்காமம் போகிறார். மயிலின் தோகைகள் இழுபட ஒளிமயமாகச் செல்வதை நாங்கள் பார்த்தோம்" என்ற செய்தியை மீண்டும் மீண்டும் அசைபோட்டார். கனவிலே தான் கண்டவிடயத்தையும், தந்தையும் பெரியோர்களும் கூறிய விடயத்தையும் இணைத்துப் பார்த்த சுவாமிகளின் மனதிலே உறுதியும், ஆனந்தமும் ஏற்பட்டது. முருகன் கனவிலே காட்சியளித்ததோடு, ஒரு பணியையும் செய்யுமாறு கட்டளையிட்டுள்ளார் என மகிழ்ந்தார்.

வளரும்..

## எதிர்கால சந்ததியினரின் நலன் கருதி நிலத்தடி நீரைப் பாதுகாக்கும் நோக்கில், தகுந்த சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்கிறார் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன்

இலங்கை செய்திகள்
Sri Lanka News



(02-09-2026)

எதிர்கால சந்ததியினரின் நலன் கருதி நிலத்தடி நீரைரப் பாதுகாக்கும் நோக்கில், முறையற்ற குழாய்க் கிணறுகளின் பயன்பாட்டை கட்டுப்படுத்த தகுந்த சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட பொருத்தமான பொறிமுறைகள் உருவாக்கப்படும் என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் வலியுறுத்தினார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நீர்வளம் பேணுதலுக்கான பேராய்வுச் செயற்றிட்டம் மற்றும் வடக்கின் இளம் நீர் வாண்மையாளர் வட்டம் ஆகியன இணைந்து ஏற்பாடு செய்துள்ள "நிலத்தடி நீர் எங்கள் உயிர் நாடி" எனும் தொனிப்பொருளில் நிலத்தடி நீர் பாதுகாப்பு மற்றும் விழிப்புணர்வுக் கண்காட்சி, 02-09-2026 அன்று புதன்கிழமை மாலை நல்லூர் பாரதியார் சிலைக்கு அருகிலுள்ள நெசவுக் கைத்தொழில் பயிற்சி நிறுவன வளாகத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும்போதே ஆளுநர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நிகழ்வில் ஆளுநர் மேலும் உரையாற்றுகையில், முந்தைய காலங்களில் யாழ்ப்பாணத்தின் நிலத்தடி நீர் மிகவும் தூய்மையாகக் காணப்பட்டதுடன், மக்கள் கிணற்று நீரை நேரடியாகவே பருகி வந்தனர்.

ஆனால் தற்போது, குடிநீருக்காகப் போத்தல்களில் அடைக்கப்பட்ட நீரை அதிக விலைகொடுத்து வாங்க வேண்டிய துரதிர்ஷ்டவசமான நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டுள்ளனர். 1950களுக்குப் பின்னர் நிலத்தடி நீரை உறிஞ்சும் குழாய்க் கிணறுகளின் பயன்பாடு கட்டுக்கடங்காமல் அதிகரித்துள்ளமை, முறையற்ற விதத்தில் அதிகளவான குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டமை மற்றும் கழிவுநீர் நிலத்தடி நீருடன் கலக்கின்றமை போன்ற காரணங்களால் நீரின் தரமும் அளவும் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

எனவே, குழாய்க் கிணறுகளின் பயன்பாட்டைக் கட்டுப்படுத்தத் தகுந்த சட்ட நடவடிக்கைகளும், முறையான கண்காணிப்பு வழிமுறைகளும் உடனடியாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். இதனைச் சாத்தியமாக்க உரிய தரப்பினருக்கு அழுத்தம் கொடுக்கப்பட வேண்டியது அவசியமாகும். மழைநீரை நிலத்தடியில் சேமிக்கும் திட்டங்களை விரிவுபடுத்துவதுடன், கழிவுநீர் மற்றும் உவர் நீர் நன்னீருடன் கலப்பதைத் தடுக்க முறையான முகாமைத்துவ நடவடிக்கைகள் உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டும். நிலத்தடி நீரைப் பாதுகாப்பது என்பது ஒவ்வொரு தனிநபரின் கூட்டுப் பொறுப்பாகும். விழிப்புணர்வுடன் செயற்பட்டு, எதிர்காலச் சந்ததியினருக்காக நமது நீர் வளங்களைப் பாதுகாக்கும் இவ்வாறான செயற்றிட்டங்களுக்கு அனைவரும் முழுமையான ஆதரவை வழங்க முன்வர வேண்டும்" எனத் தெரிவித்தார்.

அத்துடன், வெளிநாட்டில் வசித்தாலும் யாழ்ப்பாணத்தின் நிலத்தடி நீரைப் பாதுகாக்கும் நோக்கில் தொடர்ச்சியான ஆய்வுகளை மேற்கொண்டு வருவதுடன், பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், பெரியவர்கள் எனச் சமூகத்தின் அனைத்துத் தரப்பினரையும் ஒன்றிணைத்து இவ்வாறான விழிப்புணர்வுத் திட்டங்களையும் கண்காட்சிகளையும் முன்னெடுத்து வரும் பேராசிரியர் சிறிஸ்கந்தராஜாவின் பங்களிப்பையும் ஆளுநர் பாராட்டினார்.

நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் பெருந்திருவிழாவை முன்னிட்டு மூன்றாவது ஆண்டாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்தக் கண்காட்சி, எதிர்வரும் 11ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை தினமும் காலை 9 மணி தொடக்கம் இரவு 9 மணி வரை நடைபெறும்.

நீரியல் ஆய்வுகள் ஊடாகப் பெறப்பட்ட பெறுபேறுகள், மக்கள் ஈடுபாட்டுடனான செயற்திட்ட அனுபவங்கள், வழுக்கையாறு மற்றும் கிராமியக் குளங்களை முறையான தொழில்நுட்ப அறிவுடன் தூர்வாருதல் தொடர்பான விபரங்கள் முப்பரிமாண தோற்றங்களாக, செய்திகளாக மற்றும் படங்களாக இங்கு காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. மேலும், நீர்வளக் கண்காட்சியின் ஒரு கட்டமாக ஊருணி ஆற்றுகைக் களத்தில் தினமும் மாலை 7 மணி முதல் கருத்துரைகளும் கலை, பண்பாட்டு, பாரம்பரிய நிகழ்வுகளும் அரங்கேற உள்ளன.

நீர்வள சபை, நீர்ப்பாசனத் திணைக்களம், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை, யாழ்ப்பாண மாநகர சபை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி, வேம்படி மகளிர் கல்லூரி மற்றும் தன்னார்வக் குழுக்கள் பலவற்றின் ஒத்துழைப்புகளுடன் நடைபெறும் இக்கண்காட்சியில் கலந்துரையாடல்கள், மாதிரிகள், பதாகைகள், ஆய்வு விபரங்கள், பரிசுப் போட்டிகள், விளையாட்டுகள், பாரம்பரிய நிகழ்ச்சிகள், குலுக்கல் பரிசுகள் ஆகியவை இடம்பெறுகின்றன.



இந்த நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர், மருத்துவ பீட பீடாதிபதி, கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் பணிப்பாளர், விவசாயத் திணைக்கள யாழ். மாவட்ட பிரதிப் பணிப்பாளர் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

(15 பக்கத் தொடர்ச்சி)

## அநுர அரசிலும் தொடரும் உள்ளே...வெளியே...அரசியல்

--------------------------------------------------------------------------------

முன்னாள் நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ச காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் சொத்துக்களைத் துஷ்பிரயோகம் செய்தமை மற்றும் சில சட்டவிரோத ஆவணங்களில் கையொப்பமிட்ட குற்றச்சாட்டில் கைதாகி பிணையில் வெளியில் உள்ளார், முன்னாள் இராஜாங்க அமைச்சர் வசந்த சேனநாயக்க தொல்பொருள் மதிப்புமிக்க வனப்பகுதியை சட்டவிரோதமாக ஆக்கிரமித்து சொகுசு விடுதி அமைத்த குற்றச்சாட்டில் கைதாகி பிணையில் உள்ளார், முன்னாள் பிரதி அமைச்சர் நிஷாந்த முத்துஹெட்டிகம துறைமுக அதிகார சபையின் வாகனங்களை முறைகேடாகப் பயன்படுத்தியது மற்றும் நீதிமன்ற உத்தரவை மீறிய குற்றச்சாட்டில் கைதாகி பிணையில் உள்ளார், சமிந்த விஜயஸ்ரீ எம்.பி. 2019 ஆம் ஆண்டு பண்டாரவளை பகுதியில் பொலிஸ் உத்தியோகத்தர்களை வழிமறித்து தாக்குதல் நடத்தியமை, காயம் ஏற்படுத்தியமை மற்றும் கொலை மிரட்டல் விடுத்த குற்றச்சாட்டில் கைதாகி ஒன்றரை வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட நிலையில் மேன்முறையீடு செய்ததையடுத்து பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

இவ்வாறாக அநுரகுமார அரசாங்கத்தின் இந்தக் கைது நடவடிக்கைகளைப் பார்த்தால் கைதானவர்களில் பெரும்பாலானவர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டிருப்பதனை அறிந்து கொள்ள முடியும். இதற்கு காரணங்களாக சட்ட ரீதியான பலவீனங்கள், சட்டப் பிணை வழங்கும் நடைமுறைகள், ஆதாரங்களுக்கும் கைதுக்குமான கால இடைவெளி, முறையான தடயவியல் மற்றும் கணக்காய்வுச் சான்றுகள் இன்றி, வெறும் வாக்குமூலங்களை மட்டும் வைத்துக்கொண்டு கைதை மேற்கொள்வது போன்றவை இருந்தாலும் இதில் "அரசியல்" தான் முக்கிய பங்காற்றுகின்றது.

"ஆட்சிக்கு வந்தவுடன் ஊழல்வாதிகளைச் சிறையில் அடைப்போம்" எனத் தேர்தல் மேடைகளில் கொடுத்த வாக்குறுதி அநுரகுமார அரசாங்கத்தின் மீது பாரிய அழுத்தத்தை ஏற்படுத்தியுள்ளது. வழக்கு விசாரணை முடிந்து தீர்ப்பு வர பல ஆண்டுகள் ஆகும் என்பதால், மக்களைத் தற்காலிகமாகத் திருப்திப்படுத்த "கைது" என்ற உடனடிச் செய்தியை அரசாங்கம் ஆயுதமாகப் பயன்படுத்துகிறது. பொருளாதார நெருக்கடிகள், விலைவாசி உயர்வு மற்றும் மக்களிடையில் ஏற்படும் அதிருப்திகள் குறித்த விவாதங்கள் எழும்போது, எதிர்க்கட்சியின் முக்கிய புள்ளியைக் கைது செய்வதன் மூலம் ஊடகங்களின் கவனத்தையும் மக்களின் கவனத்தையும் திசைதிருப்புவது இலங்கையின் வழக்கமான அரசியல் உத்தி. அதனைத்தான் அநுரகுமார அரசும் கையில் எடுத்துள்ளது.

அத்துடன் எதிர்க்கட்சிகளை உளவியல் ரீதியாக முடக்கவும் இந்த கைதுகள் பயன்படுத்தப்படுகின்றன. நீதிமன்றத்தில் குற்றம் நிரூபிக்கப்படுகிறதோ இல்லையோ, ஒரு அரசியல்வாதியைக் கைது செய்து, பொலிஸ் வாகனத்தில் ஏற்றி, சிறை உடையில் ஊடகங்களில் காட்டுவது அவரது மக்கள் பிம்பத்தையும் எதிர்க்கட்சியின் அரசியல் வீரியத்தையும் பலவீனப்படுத்தும் உத்தியாகப் பார்க்கப்படுகிறது. இவ்வாறாக அவசர கதியில் மேற்கொள்ளப்படும் அரைகுறைக் கைதுகள், இறுதியில் சந்தேகநபர்களுக்குச் சாதகமான பிணை உத்தரவுகளாக மாறி, அரசாங்கத்தின் ஊழல் எதிர்ப்பு நடவடிக்கையின் நம்பகத்தன்மையையே கேள்விக்குறியாக்குகின்றன.

போதிய ஆதாரங்களின்றி சட்டப்பிரிவுகளைப் பலவீனமாகக் கையாள்வதும், நீதிமன்றங்களில் குற்றச்சாட்டுகளை நிரூபிக்கத் தவறுவதும், அநுரகுமார அரசாங்கத்திற்கு உண்மையில் குற்றவாளிகளைத் தண்டிக்கும் எண்ணம் இல்லை என்பதையே உணர்த்துகிறது. பொருளாதாரப் பின்னடைவு மற்றும் விலைவாசி உயர்வால் ஏமாற்றமடைந்துள்ள மக்களின் கோபத்திலிருந்து தப்பிக்க, "நாங்கள் ஊழலுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கிறோம்" என்ற போலிப் பிம்பத்தைக் கட்டியெழுப்ப அரங்கேற்றப்படும் இந்தக் "கைது-பிணை" "உள்ளே - வெளியே" நாடகம், இறுதியில் மக்களை ஏமாற்றும் மற்றுமொரு அரசியல் சூழ்ச்சியே. அநுரகுமார அரசாங்கத்தின் இந்த "உள்ளே வெளியே" ஆட்டம், தற்காலிகமாக அவர்களுக்கு அரசியல் இலாபத்தைக் கொடுக்கலாம், ஆனால் மக்கள் எதிர்பார்ப்பது ஊடகப் பரபரப்புகளுக்கான "கைது நாடகங்களை" அல்ல. தவறிழைத்தவர்களுக்கு சட்டப்படி கிடைக்கும் "உண்மையான தண்டனையைத்" தான்.


TRADITIONAL CHINESE ACUPUNCTURE THERAPY

எல்லாவிமான வலிகளுக்கும்
ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை
மனத்தளர்ச்சி, தலைவலி
நீரிழிவு நோய், வயிற்றுவலி
மாதவிடாய் சம்மந்தமானவையும்
உடற்பருமன் குறைத்தல்

All Pain & Aches, Arthritis
Asthma, Sinusitis, Rhinitis Allergies
Stress, Migraine & All Types of Headaches
Diabetes, Gastric Pain, Ulcer
Menstruation
Weight Loss

முதலான சகலவிதமான நோய்களுக்கும்
Mrs. K. Vasanthakumar ஐ
Acupuncturist (R.A.C)
தொடர்புகொள்ளவும்.
(416) 754-4024
5200 Finch Ave., East -- Suit #349
Scarborough, ON M1S 4Z5


## இவ்வார ராசிபலன்

(20 பக்கம் தொடர்ச்சி)




**தனுசு:** உங்கள் தன்னம்பிக்கையும் துணிச்சலும் பல நல்ல மாற்றங்களுக்கு வழிவகுக்கும் வாரமாக இது அமையும் தனுசு ராசி அன்பர்களே! தொழில், வேலை மற்றும் வியாபாரத்தில் புதிய வாய்ப்புகள் கிடைத்து, நீண்ட நாட்களாக எதிர்பார்த்திருந்த முயற்சிகள் வெற்றியடையும். வெளியூர் பயணங்கள் மூலம் நல்ல லாபம் கிடைக்கும். மேலதிகாரிகளின் பாராட்டும், முக்கிய பொறுப்புகளும் கிடைக்கக்கூடும். பணவரவு சீராக இருந்து, தடைபட்டிருந்த பணம் கைக்கு வந்து நிம்மதியை அளிக்கும். புதிய முதலீடுகள் குறித்து சிந்திக்கும் வாய்ப்பும் உருவாகும். தெய்வ தரிசனம் கிடைக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழல் நிலவும். கணவன்-மனைவி இடையே அன்பும் புரிதலும் அதிகரித்து, குடும்ப ஒற்றுமை வலுப்படும். பிள்ளைகளின் முன்னேற்றம் மனநிறைவை தரும். காதல் உறவுகளில் இருந்த சிறிய கருத்து வேறுபாடுகள் நீங்கி, இனிமையான தருணங்கள் அதிகரிக்கும். உடல்நலத்தில் பெரிய பாதிப்பு எதுவும் இல்லை என்றாலும், அதிக வேலைப்பளுவால் உடல் சோர்வு மற்றும் தூக்கமின்மை ஏற்படலாம். சத்தான உணவு மற்றும் போதுமான ஓய்வில் கவனம் செலுத்துங்கள். மாணவர்கள் கல்வியில் சிறப்பாக செயல்பட்டு, போட்டித் தேர்வுகளில் நல்ல வெற்றியைப் பெறுவார்கள். அவசர முடிவுகளைத் தவிர்த்து பொறுமையுடன் செயல்பட்டால் நினைத்த காரியங்கள் அனைத்தும் சாதகமாக நடைபெறும்.

அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், ஆரஞ்சு, அதிர்ஷ்ட எண்: 3,9
அதிர்ஷ்ட நாள்: வியாழன், செவ்வாய், இந்த வாரம் தனுசுக்கு 9/10 மதிப்பெண்.




**மகரம்:** உங்கள் கடின உழைப்பும் விடாமுயற்சியும் பல நல்ல மாற்றங்களுக்கு வழிவகுக்கும் வாரமாக இது அமையும் மகர ராசி அன்பர்களே! தொழில், வேலை மற்றும் வியாபாரத்தில் புதிய வாய்ப்புகள் கிடைத்து, நீண்ட நாட்களாக எதிர்பார்த்திருந்த முயற்சிகள் வெற்றியடையும். பதவி உயர்வு தொடர்பான நல்ல தகவல் வரும். மேலதிகாரிகளின் பாராட்டும், முக்கிய பொறுப்புகளும் கிடைக்கக்கூடும். பணவரவு சீராக இருந்து, தடைபட்டிருந்த பணம் கைக்கு வந்து நிம்மதியை அளிக்கும். புதிய முதலீடுகள் குறித்து சிந்திக்கும் வாய்ப்பும் உருவாகும். கடன் பிரச்சனை தீரும். குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழல் நிலவும். கணவன்-மனைவி இடையே அன்பும் புரிதலும் அதிகரித்து, குடும்ப ஒற்றுமை வலுப்படும். பிள்ளைகளின் முன்னேற்றம் மனநிறைவை தரும். காதல் உறவுகளில் இருந்த சிறிய கருத்து வேறுபாடுகள் நீங்கி, இனிமையான தருணங்கள் அதிகரிக்கும். உடல்நலத்தில் பெரிய பாதிப்பு எதுவும் இல்லை என்றாலும், அதிக வேலைப்பளுவால் உடல் சோர்வு மற்றும் தூக்கமின்மை ஏற்படலாம். கால் வலி வரலாம் கவனம் தேவை. மாணவர்கள் கல்வியில் சிறப்பாக செயல்பட்டு, போட்டித் தேர்வுகளில் நல்ல வெற்றியைப் பெறுவார்கள். அவசர முடிவுகளைத் தவிர்த்து பொறுமையுடன் செயல்பட்டால் நினைத்த காரியங்கள் அனைத்தும் சாதகமாக நடைபெறும்.

அதிர்ஷ்ட நிறம்: நீலம், கருப்பு, அதிர்ஷ்ட எண்: 8,4
அதிர்ஷ்ட நாள்: சனி, புதன், இந்த வாரம் மகரத்திற்கு 8/10 மதிப்பெண்.




**கும்பம்:** உங்கள் புதிய சிந்தனையும் தன்னம்பிக்கையும் பல நல்ல மாற்றங்களுக்கு வழிவகுக்கும் வாரமாக இது அமையும் கும்ப ராசி அன்பர்களே! தொழில், வேலை மற்றும் வியாபாரத்தில் புதிய வாய்ப்புகள் கிடைத்து, நீண்ட நாட்களாக எதிர்பார்த்திருந்த முயற்சிகள் வெற்றியடையும். தொழில்நுட்பம் சார்ந்த துறையில் இருப்பவர்களுக்கு பெரிய வாய்ப்பு கிடைக்கும். மேலதிகாரிகளின் பாராட்டும், முக்கிய பொறுப்புகளும் கிடைக்கக்கூடும். பணவரவு சீராக இருந்து, தடைபட்டிருந்த பணம் கைக்கு வந்து நிம்மதியை அளிக்கும். புதிய முதலீடுகள் குறித்து சிந்திக்கும் வாய்ப்பும் உருவாகும். எதிர்பாராத பணவரவு உண்டு. குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழல் நிலவும். கணவன்-மனைவி இடையே அன்பும் புரிதலும் அதிகரித்து, குடும்ப ஒற்றுமை வலுப்படும். பிள்ளைகளின் முன்னேற்றம் மனநிறைவை தரும். காதல் உறவுகளில் இருந்த சிறிய கருத்து வேறுபாடுகள் நீங்கி, இனிமையான தருணங்கள் அதிகரிக்கும். நண்பர்களால் ஆதாயம் உண்டு. உடல்நலத்தில் பெரிய பாதிப்பு எதுவும் இல்லை என்றாலும், அதிக வேலைப்பளுவால் உடல் சோர்வு மற்றும் தூக்கமின்மை ஏற்படலாம். சத்தான உணவு மற்றும் போதுமான ஓய்வில் கவனம் செலுத்துங்கள். மாணவர்கள் கல்வியில் சிறப்பாக செயல்பட்டு, போட்டித் தேர்வுகளில் நல்ல வெற்றியைப் பெறுவார்கள். அவசர முடிவுகளைத் தவிர்த்து பொறுமையுடன் செயல்பட்டால் நினைத்த காரியங்கள் அனைத்தும் சாதகமாக நடைபெறும்.

அதிர்ஷ்ட நிறம்: நீலம், சாம்பல், அதிர்ஷ்ட எண்: 8,11
அதிர்ஷ்ட நாள்: சனி, ஞாயிறு, இந்த வாரம் கும்பத்திற்கு 9/10 மதிப்பெண்.




**மீனம்:** உங்கள் தன்னம்பிக்கையும் துணிச்சலும் பல நல்ல மாற்றங்களுக்கு வழிவகுக்கும் வாரமாக இது அமையும் மீன ராசி அன்பர்களே! தொழில், வேலை மற்றும் வியாபாரத்தில் புதிய வாய்ப்புகள் கிடைத்து, நீண்ட நாட்களாக எதிர்பார்த்திருந்த முயற்சிகள் வெற்றியடையும். கலைத்துறையில் இருப்பவர்களுக்கு புகழ் கிடைக்கும். மேலதிகாரிகளின் பாராட்டும், முக்கிய பொறுப்புகளும் கிடைக்கக்கூடும். பணவரவு சீராக இருந்து, தடைபட்டிருந்த பணம் கைக்கு வந்து நிம்மதியை அளிக்கும். புதிய முதலீடுகள் குறித்து சிந்திக்கும் வாய்ப்பும் உருவாகும். வெளிநாட்டு பணம் வரும். குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழல் நிலவும். கணவன்-மனைவி இடையே அன்பும் புரிதலும் அதிகரித்து, குடும்ப ஒற்றுமை வலுப்படும். பிள்ளைகளின் முன்னேற்றம் மனநிறைவை தரும். காதல் உறவுகளில் இருந்த சிறிய கருத்து வேறுபாடுகள் நீங்கி, இனிமையான தருணங்கள் அதிகரிக்கும். உடல்நலத்தில் பெரிய பாதிப்பு எதுவும் இல்லை என்றாலும், அதிக வேலைப்பளுவால் உடல் சோர்வு மற்றும் தூக்கமின்மை ஏற்படலாம். சத்தான உணவு மற்றும் போதுமான ஓய்வில் கவனம் செலுத்துங்கள். மாணவர்கள் கல்வியில் சிறப்பாக செயல்பட்டு, போட்டித் தேர்வுகளில் நல்ல வெற்றியைப் பெறுவார்கள். அவசர முடிவுகளைத் தவிர்த்து பொறுமையுடன் செயல்பட்டால் நினைத்த காரியங்கள் அனைத்தும் சாதகமாக நடைபெறும்.

அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், வெள்ளை, அதிர்ஷ்ட எண்: 3,7
அதிர்ஷ்ட நாள்: வியாழன், திங்கள், இந்த வாரம் மீனத்திற்கு 9.5/10 மதிப்பெண்.


MORTGAGE
FINANCIAL SOLUTIONS
COMMERCIAL
RESIDENTIAL
VACANT LAND
INDUSTRIAL
CONSTRUCTION
OUR SERVICE
Purchase
Builder Purchase
MLS Purchase
Private Purchase
Equity line of Credit
Refinance
Renewal
CALL US
NESAN
416-908-5656
Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721
www.nesan.ca
WE DEAL WITH ALL BANKS
CityCan Financial Corporation
NESAN SUBRAMANIAM
Mortgage Agent level 1 Licence # M15001465
CityCan Financial Corporation, Brokerage #10332
Scotiabank
FIRST NATIONAL
FINANCIAL LP
TD Canada Trust
Manulife
NATIONAL BANK
Desjardins
RFA
MCAP
Home Trust
Equitable Bank
radius financial
RMG mortgages
55 EGLINTON AVE E SUITE 604, TORONTO, ON M4P 1G8

மொன்றியல் நகரில்
உதயன் UTHAYAN
விளம்பரங்கள், மரண அறிவிததல்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பகமையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria
Montreal, QC
H3W 2R9
514-342-4229
514-865-0519

இவ்விடத்தில்
விளம்பரம் செய்ய *$30.00* மட்டுமே!
416-752-1524

Matt Mathisayan
Sales Representative
647 268 9219
905 201 9977
905 201 9929
mattmathisayan@gmail.com
Follow me on
HomeLife/Future Realty Inc.
7 Eastvale Dr #205, Markham, On L3S 4N8

29ம் ஆண்டில்...
29 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்

இவ்விடத்தில்
விளம்பரம் செய்ய எம்மை
அழையுங்கள்
416-752-1524

உதயம் 1587 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday September 4, 2026

## Candidate for Scarborough North (Ward 23) Hon Dong's Campaign Office Opening Ceremony was very Graceful!

# ரொறன்ரோ நகரசபையின் 23ம் வட்டார வேட்பாளர்களில் ஒருவரான ஹொன் டொங் அவர்களின் பிரச்சார அலுவலக திறப்பு விழா!



ரொறன்ரோ நகரசபையின் 23ம் வட்டார வேட்பாளர்களில் ஒருவரான ஹொன் டொங் **(Hon Dong)** அவர்களின் பிரச்சார அலுவலக திறப்பு விழா அவரது வட்டாரத்தில் கடந்த 30ம் திகதி மதியம் சிறப்பாக நடைபெற்றது. இதற்கு முன்னர் மத்திய அரசு மற்றும் மாநில அரசு ஆகியவற்றில் உறுப்பினராக பதவி வகித்த ஹொன் டொங் **(Hon Dong)**அவர்களின்
அரசியல் அனுபவம் அளவிற்கு அதிகமானது என்பதை பலரும் அறிந்துவைத்துள்ளனர்.

அன்றைய திறப்பு விழாவில் பல்லினங்களைச் சார்ந்த ஆதரவாளர்கள் மற்றும் வர்த்தகப் பிரமுகர்கள் மற்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் என நூற்றுக்கணக்கானவர்கள் அங்கு திரண்டிருந்தனர்.

(தொடர்ச்சி 13ம் பக்கம்)

# "செம்மணி கொடுமை தொடர்பான "விழித்தெழு" எழுச்சி நிகழ்வை எமது நிறுவனம் நடத்துவது மக்களுக்கு பங்களிப்பை வழங்குவதற்காகவே!"

## "பிகைன்ட் மீ அறக்கட்டளை" ஏற்பாட்டில் நடைபெற்ற "விழித்தெழு" நிகழ்வில் அறக்கட்டளையின் நிறுவனர் கனேந்திரன் செல்வராஜா தெரிவிப்பு

எமது தாயகத்தில் இடம்பெற்ற அரச பயங்கரவாதம் மற்றும் இனப்படுகொலை ஆகியவற்றிக்கான சாட்சியங்களாகவும் வலிகளின் அடையாளமாகவும் உள்ள புதைகுழிகள் மற்றும் "செம்மணியிலிருந்து அகழ்ந்தெடுக்கப்படும் எம் உறவுகளின் எலும்புக்கூடுகள் ஆகியவை எமக்கு இழைக்கப்பெற்ற கொடுமைகளின் எல்லையைத் தொட்ட சான்றுகள் ஆகும். எனவே இவை தொடர்பான எமது பங்களிப்பை வழங்குவதற்காகவும் மக்கள் மத்தியில் விழிப்புணர்வைக் கொண்டு வரவேண்டும் என்ற நோக்குடனும் எமது மக்கள் இந்த க் கொடுமைகளை மறந்துவிடாமல் தொடர்ச்சியாக போராடவுமே "விழித்தெழு" என்ற எழுச்சி நிகழ்வை எமது
நிறுவனம் நடத்திவருகின்றது.

(தொடர்ச்சி 13ம் பக்கம்)



# கடுமையான காலநிலை எச்சரிக்கை இருந்தும் கனடாவில் "வீரகேசரி" பிரதம ஆசிரியர் ஸ்ரீகஜனைக் கௌரவிக்க ஒன்றுகூடிய நண்பர்கள்!

02-09-2026 அன்று நேற்று செவ்வாய்க்கிழமை ரொறன்ரோ பெரும்பாகத்தில் கடுமையான வான்நிலை எச்சரிக்கை இருந்தும் முன்னரே திட்டமிடப்பட்ட வகையில். தற்போது கனடாவிற்கு வருகை தந்துள்ள "வீரகேசரி" பிரதம ஆசிரியர் ஸ்ரீகஜன் அவர்களைப் பாராட்டிக் கௌரவிக்கும் வகையில் நண்பர்களால் ஏற்பாடு செய்யப்பெற்ற அந்த வைபவம் எளிமையான முறையில் நடைபெற்றது.

கனடா எழுத்தாளர் இணையத்தின் செயற்குழு அங்கத்தவர் பாஸ்டர் சோதி அவர்கள் வைபவத்தை சிறப்பாக நடத்தினார். அங்கு வர்த்தகப் பிரமுகர்கள், சமூகஅமைப்புக்களின் உறுப்பினர்கள் மற்றும் ஊடக நண்பர்கள் என கலந்து கொண்ட அனைவரும் ஸ்ரீகஜன் அவர்களது நட்பு வட்டாரத்தில் உள்ளவர்கள் தங்கள் கருத்துக்களை சுருக்கமாகப் பகிர்ந்து கொண்டனர்.

இங்கே காணப்படுவது அங்கு எடுக்கப்பெற்ற் ஒரு படமாகும்.



Medcentre Health
Synchronizing Health Sectors
Medcentre Family Clinic
Comprehensive, patient-centred care for you and your entire family, from Children to Grandparents.
✓ Now Open
✓ Accepting New Patients

# ஸ்காபுறோவில் Finch – Markham வீதிகளின் சந்திப்புக்கு அருகில் அமைந்துள்ள Medcentre Family Clinic வைத்திய நிலையத்தில் தமிழ் பேசும் வைத்தியர் பணியாற்றுகின்றார்

ஸ்காபுறோவில் **Finch – Markham** வீதிகளின் சந்திப்புக்கு அருகில் அமைந்துள்ள **Medcentre Family Clinic** வைத்திய நிலையத்தில் தமிழ் பேசும் வைத்தியர் ஒருவர் தற்போது பணியாற்றுகின்றார். கனடாவில் மருத்துவப் பயிற்சி பெற்று சுமார் 7 ஆண்டுகள் குடும்ப மருத்துவராகப் பணியாற்றிய அனுபவத்துடன் டாக்டர் விஜிதா முகுந்தன் அவர்களே இங்கு பணியாற்றும் சிறந்த வைத்தியர் ஆவார். வாரத்தில் 7 நாட்களும் திறந்திருக்கும் இந்த வைத்திய நிலையத்தை தொடர்பு கொள்ள 416.297.7777 என்னும் இலக்கத்தை அழைக்கலாம். (உள்ளே 2ம் பக்கத்தில் விளம்பரத்தைப் பார்க்கவும்)